# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 17 வியாழக்கிழமை (01.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 217


# ஆயுதக் களைவு, தேர்தல்கள்; பின்னரே அரசியல் தீர்வு!

## ஜனாதிபதியின் திட்டம் இது என்கிறார் அமைச்சர் பஸில்



கொழும்பு, ஜூலை 1

முதலில் நாட்டிலுள்ள சட்ட விரோத ஆயுதக்குழுக்களிடம் இருந்து ஆயுதங்கள் களையப்படும். அவை அரசியல் நீரோட்டத்துக்குள் உள்வாங்கப்படும். இரண்டாவதாக உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படும். மூன்றாவதாகவே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும்.

இதுவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் திட்டம் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தவையாவது:-

வடக்கு, கிழக்கில் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் இணைந்து செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணங்கியிருக்கின்றது. இது தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஆனால்,

(23ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. செயலரின் நிபுணர் குழுவின் பணிகள் இந்த வாரம் முதல் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை, 01

இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்த ஆய்வுகளை ஐ.நா நிபுணர் குழு, இந்த வாரம் முதல் தனது நடவடிக்கையை ஆரம்பிக்கும் என்று ஐ.நா.செயலாளர் நாயகத்தின் பேச்சாளர்களில் ஒருவரான பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

அவர் டுபாயில் இருந்து வெளியாகும் 'த நஷனல்' ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

இந்த இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாகவே அரசுக்கும், அரச படைகளுக்கும் எதிரான குற்றச்சாட்டுகள் பரவலாக முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

(23ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள்களின் விலை குடாநாட்டில் குறைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 01

யாழ். மாவட்டத்தில் எரிபொருள்களின் விலை இன்று வியாழக்கிழமை முதல் குறைக்கப்பட்டுள்ளதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

இதன்படி பெற்றோல் லீற்றருக்கு ஒரு ரூபாவாலும், மண்ணெண்ணெய், டீசல்

(24ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய படைத் தளபதி நேற்று யாழ்.விஜயம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

இந்தியக் கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் நிர்மல் வர்மா நேற்று யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இந்தியக் கடற்படைத்தளபதி நேற்றுக் காலை காங்கேசன்துறை துறைமுகத்துக்குச் சென்று அங்கு நடைபெற்றுவரும் அபிவிருத்திப் பணிகள் குறித்து நேரில் ஆராய்ந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## 2,500 ரூபா சம்பள உயர்வு கேட்டு தொடர் ஆர்ப்பாட்டங்கள் நடத்த முடிவு

### எதிர்க்கட்சிகளுடன் இணைந்து ஐ.தே.கட்சி நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 01

அரச ஊழியர்களுக்கு உறுதியளித்த 2,500 ரூபா சம்பள உயர்வை உடனடியாக வழங்கக் கோரியும், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை எதிர்த்தும் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்துக்கொண்டு தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட் டில் ஐ.தே.கட்சி எம்.பி. கபீர் ஹாசிம் இத்தகவலைத் தெரிவித்தார்.

(23 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்து இடையூறு விளைவித்தால் சபைக்கு வெளியே அனுப்புவேன்!

### மேர்வினுக்கு சபாநாயகர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 01

பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா நேற்று நாடாளுமன்ற நடவடிக்கைக்குத் தொடர்ந்து இடையூறு விளைவித்துக் கொண்டிருந்தார். அவரைக் கடுமையாகக் கண்டித்த சபாநாயகர், தேவை ஏற்பட்டால் சபைக்கு வெளியே அனுப்ப வேண்டிவரும் என்று எச்சரித்தார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## சம்பந்தன் - டக்ளஸ் சந்திப்பு முயற்சி; அப்படி ஒன்றும் இதுவரையில் இல்லை

கொழும்பு, ஜூலை 1

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் நேற்று வரையில் எதுவிதமான சந்திப்போ, பேச்சுக்களோ இடம்பெறவில்லை என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இரா.சம்பந்தனுக்கும் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் நாடாளுமன்றத்தில் சந்திப்பு இடம்பெற்றுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தபோதிலும் அவ்வாறு ஒன்றும் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் தரப்பில் இருந்து பேச்சுக்கான உரிய முறையில் முயற்சி ஏதும் எடுக்கப்படவில்லை என்றும் இந்தச் சந்திப்புக்கான சாத்தியம் மிகக்குறைவு என்றும் கூட்டமைப்பு வட்டாரங்களில் இருந்து நேற்று இரவு தெரியவந்தது.

(24ஆம் பக்கம் பார்க்க)

### ஆயுதக் கலாசாரம் மேலோங்கி நீதித்துறையிலும் தலையீடு

## குடாநாட்டில் முப்படையினர் தவிர எவரும் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்கக்கூடாது

### நடவடிக்கை எடுக்கக் கோருகிறார் விஜயகலா

கொழும்பு, ஜூலை 01

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவும் ஆயுதக்கலாசாரம் ஒழிக்கப்படவேண்டும். அங்கு ஆயுத கலாசாரம் மேலோங்கி நிற்பதனால், நீதித்துறையிலும் தலையீடுகள் இடம்பெறுகின்றன. இத்தகைய தலையீடுகளைத் தடுப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குடாநாட்டில் ஆயுத கலாசாரம் ஒழிக்கப்பட்டு சிவில் நிர்வாகம் பூரணமாக அமுல் செய்யப்படவேண்டும். முப்படையினரைத் தவிர வேறு எவரும் ஆயுதங்களுடன் நடமாடும் சூழல் மாற்றப்படவேண்டும்.

இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன்.

வரவு செலவுத்திட்டக் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.குடாநாட்டைப் பொறுத்த வரையில் அங்கு கொலை, கொள்ளை, கடத்தல், பாலியல் வல்லுறவு என குற்றச்செயல்கள் அதிகரித்துச்செல்வதுடன் கலாசாரமும் சீரழிந்து வருகிறது. யுத்த காலத்தில் இடம்பெற்றதைப் போன்று தற்போதும் அங்கு இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து வருவதனால் மக்கள் மத்தியில் பீதி நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு, கடத்தல் சம்பவங்கள் தொடர்வதுடன் கலாசார சீரழிவும் இடம்பெற்றுவருவதாகவும், இதில் எமது உறவுகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபட்டு வருவது

(23ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரின் அபாண்டமான குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 01

யாழ்ப்பாணத்தில், நல்லூரில் நிறுவப்பட்டிருந்த தியாகி திலீபனின் சிலையை, சிங்களக் காடையர்களைக் கொழும்பில் இருந்து கூட்டிச்சென்று விஜயகலா மகேஸ்வரனே இடிப்பித்தார் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொய்ப்பிரச்சாரம் செய்துவருகிறார்.

வெளிநாடுகளில் ஒளிபரப்பாகும் தொலைக்காட்சிகளுக்குப் பேட்டிகள் வழங்கி அவர் என் மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு எதிரான நிபுணர் குழுவை கலைக்காவிட்டால் ஐ.நாவின் கொழும்புத் தூதரகம் முற்றுகையிடப்படும்!

## அமைச்சர் விமல் வீரவன்ஸ எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை, 1

''இலங்கையின் இறைமைக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவை கலைக்காவிட்டால் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகம் முற்றுகையிடப்படும்.''

- இவ்வாறு வீடமைப்பு மற்றும் பொறியியல் தொழில்நுட்ப அமைச்சரும், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ நேற்று தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பொதுமக்கள் ஐக்கிய நாடுகள் கொழும்பு அலுவலகத்தைச் சூழ்ந்து நின்று முற்றுகையிட்டு அங்கு கடமையாற்றும் ஐ.நா ஊழியர்களைப் பணயக் கைதிகளாக்க வேண்டும். ஐ.நா. நிபுணர் குழுவை ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் கலைக்கும் வரை அந்த ஊழியர்களை விடுவிக்கவே கூடாது. இலங்கையின் தலைவர்களைக் கைது செய்து அவர்களை சர்வதேச நீதிமன்றத்தின் முன் குற்றவாளிகளாக நிறுத்துவதே இந்நிபுணர் குழு நியமிக்கப்பட்டிருப்பதன் பிரதான நோக்கமாகும்.

இந்நிபுணர் குழுவின் நியமனத்தை நாம் ஓர் அற்ப விடயமெனக் கருதி அலட்சியப்படுத்திவிட முடியாது.ஏனெனில் இந்நிபுணர் குழுவுக்கு அடுத்ததாக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள், யுத்தக் குற்றச்சாட்டுகள் ஆகியவற்றை விசாரிப்பதற்கென விசாரணைக் குழு ஒன்றை நியமிப்பார்கள்.

இலங்கையின் தலைவர்களையும், புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் கதாநாயகர்களையும் சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்துவதை இலட்சியமாகக் கொண்டு இந்த விசாரணைக் குழு செயற்படும். ஐ.நா நிபுணர்கள் குழுவுடன் பேசத் தயார் என்று சரத் பொன்சேகா சொல்லி வருகிறார். அவர் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார் - இப்படி விமல் வீரவன்ஸ தெரிவித்தார். (ஒ)

## விமல் வீரவன்ஸவின் தனிப்பட்ட கருத்து; இலங்கை அரசு ஐ.நாவுக்கு அறிவிப்பு

இலங்கைக்கு எதிரான நிபுணர் குழுவை கலைக்கும் வரை ஐ.நாவின் கொழும்பு அலுவலகத்தை ஆக்கிரமித்து அங்கு கடமையாற்றும் ஊழியர்களை பணயக் கைதிகளாக பிடித்து வைக்க வேண்டும் என்பது வீடமைப்பு மற்றும் பொறியியல் தொழில்நுட்ப அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸவின் தனிப்பட்ட கருத்தே ஆகும் என இலங்கை அரசு அறிவித்துள்ளது. கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

இது தொடர்பாக ஐ.நா சபை இலங்கை அரசிடம் உடனடியாகவே விளக்கம் கோரியிருந்தது.

அதற்கு அரசுத் தரப்பினர் அது விமல் வீரவன்ஸவின் தனிப்பட்ட கருத்து என்று உறுதியாகத் தெரிவித்துள்ளனர். (ஒ-11)

## சமையல் எரிவாயுவின் விலை குறைப்பு

கொழும்பு, ஜூலை 1

சமையல் எரிவாயுவின் விலை நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி 12.5 கிலோகிராம் எடையுடைய 'ஷெல்' சமையல் எரிவாயுவின் விலை 117 ரூபாவாலும், 'லாப்' எரிவாயுவின் விலை 85 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு உள்நாட்டு வர்த்தகத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

உலகச் சந்தையில் எரிவாயுவின் விலை மாற்றத்தின் அடிப்படையிலேயே இந்த விலை குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை இன்று முதல் 12.5 கிலோகிராம் எடையுடைய ஷெல் எரிவாயுவின் புதிய விலையாக ஆயிரத்து 652 ரூபாவும், லாப் எரிவாயுவின் புதிய விலையாக ஆயிரத்து 659 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும். (ஒ-சி)

## பொருளியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை1

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பொருளியற் பாடக் கருத்தரங்கு கரவை அபிவிருத்தி ஒன்றியத்தினால் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## பொன்சேகாவின் மருமகன் தனுனவின் சொத்துக்கள் அரசுடைமையாக்க உத்தரவு

கொழும்பு,ஜூலை 1

ஜெனரல் சரத் பொன்சேகாவின் மருமகன் தனுன திலகரட்ன்வின் இலங்கையில் உள்ள சகல சொத்துக்களையும் அரசுடைமையாக்குமாறு கொழும்பு கோட்டை பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

ஹைகோப் ஆயுத கொள்வனவு நிதி மோசடி தொடர்பாக நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணைகளின் போது தனுன திலகரட்ன முன்னிலையாகாத நிலையிலேயே கோட்டை பிரதான நீதிவான் லங்கா ஜயரட்ண இந்த உத்தரவைப் பறப்பித்துள்ளார்.

தனுன திலகரட்ன தலைமறைவாக இருப்பதாகக் கூறப்படும் இடத்தில் அவரை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு தாம் சுவரொட்டிகள் மூலம் அறியப்படுத்தியிருந்ததாகப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் அறிவித்தனர்.

புலனாய்வுத் துறையினரின் தகவலின் அடிப்படையில் தனுன திலகரட்னவின் வங்கி கணக்குகளில் 15 மில்லியன் ரூபாய்க்கு அதிகமான பணம் இருப்பதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்தப் பணம் மற்றும் சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.

அரசுடைமையாக்கப்பட்ட தனுன திலகரட்னவின் சொத்துக்கள் நீதி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஒ-சி)

## சபையில் தவறி வீழ்ந்தார் விநாயகமூர்த்தி எம்.பி

கொழும்பு, ஜூலை, 01

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி நாடாளுமன்றத்தில் உள்ள தமது ஆசனத்தில் அமர முயன்றபோது தவறி வீழ்ந்தமையை அடுத்து நாடாளுமன்ற நடவடிக்கைகள் சிறிது நேரத்திற்கு தடைப்பட்டன.

இந்த சம்பவம் பற்றி தெரியவருபவை வருமாறு:-

நேற்று பிற்பகல் நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது தமது ஆசனத்திற்கு வந்து அமர முயற்சித்த போதே நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தவறி வீழ்ந்தார்.

இதன் காரணமாக நாடாளுமன்ற அமர்வு நடவடிக்கைகளில் சிறிது காலதாமதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

நாவற்குழி, ஜூலை 1

வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 06ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெற உள்ளது.

பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்ராஸின் தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தைத் தொடர்ந்து பிரதேச விவசாயக்குழுக் கூட்டமும் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-121)

**SHAMROCK**
A/L 2012
அளவையியல்
Wed 4 pm, Fri 5pm
எஸ்.றொசோசியன்
அரசியல்
Sat, Sun, 9 am
எஸ்.செந்தூரன்
நாடகம்
Sat, Sun, 2 pm
என்.கஜீதரன்
English Medium
Gr 6 to 11

### பாராட்டி வாழ்த்தி வரவேற்கின்றோம்



எமது கல்லூரியின் பழைய மாணவியாகிய **திருமதி இமெல்டா சுகுமார்** அவர்கள் யாழ்.மாவட்ட அரச அதிபராக பொறுப்பேற்றிருப்பதையிட்டு, அவரைப் பாராட்டி வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

யா/கனகரத்தினம் ம.ம.வி.
(ஸ்ரான்லிக் கல்லூரி)
யாழ்ப்பாணம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

### கண்ணீர் அஞ்சலி



பொது நுண்கலைத்துறை சக மாணவி
S. நிஜாந்தி அவர்களின்
அன்புத் தந்தை
அமரர்
**நாகலிங்கம் சிவஞானசுந்தரம்**

அவர்கள் 30.06.2010 அன்று காலமான செய்தியறிந்து

அன்னாரின் பிரிவில் துயருறும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

3ஆம் வருட மாணவர்கள்,
நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

(சி/568783)

### 31ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில்
18 ★ 08 ★ 1938



விண்ணில்
01 ★ 06 ★ 2010

அமரர்

**மேரியோசை லூர்த்து மரிய லூவிசா**

அம்மா உன் சிரித்த வதனமும்
வந்தாரை வரவேற்கும் புன்னகையும்
உள்ளத்தில் ஓயாது சுரக்கும் தாயன்பும்
என்றும் எம் நினைவுகளில் நிலைத்திருக்கும் -
நிம்மதியாய் இளைப்பாறுங்கள் தாயே!

அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு எம் துயரில் பங்கு கொண்டோருக்கும், உதவி புரிந்தோருக்கும், ஆறுதல் கூறியோருக்கும் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொண்டோருக்கும் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன்,

இன்று (01.07.2010) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மெமோரியல் லேன்,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

(100095)

தகவல் :
குடும்பத்தினர்

### கண்ணீர் அஞ்சலி

கொழும்பு, புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயத்தின் ஓய்வுபெற்ற அதிபர் அருட்சகோதரி **மேரிகமலா** அவர்களின் அன்புத் தாயாரும், இதே பாடசாலையின் முன்னாள் அதிபருமான

**திருமதி அஞ்சலா சிவமணி சிறிநாதன்**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தார்க்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

S.சந்திரகுமார், R.தங்கராஜா
(பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்),
S.மஞ்சுளா (பழைய மாணவி),
அபிலாஷா, கிறிஸ்டினா (மாணவிகள்).

(100151)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **சிற்றம்பலம் வேலுப்பிள்ளை**
(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)

மலர்வு
18 ✱ 10 ✱ 1930



உதிர்வு
12 ✱ 07 ✱ 2009

ஆறாத்துயரில் விட்டு மீளாத்துயில் கொண்ட
எமது அன்புத் தெய்வமே!
ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறாது எமது துயர்.
அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கந்தையா வீதி,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(சி/568777)

என்றும் உம் நினைவில்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

### மரண அறிவித்தல்

*திருமதி சண்முகம் செல்லம்மா*

கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சண்முகம் செல்லம்மா நேற்று (30.06.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகத்தின் அன்பு மனைவியும் சறோஜா (வவுனியா), செல்வராணி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்), ஜெயலக்சுமி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, இராசம்மா மற்றும் கனகம்மா, பொன்னம்மாவின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2010) வியாழக்கிழமை ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவரம்திட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கொத்தன் வாசா"
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(சி/568788)

தகவல் :
பா. தங்கராஜா
(ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை).
திருமதி தங்கராஜா
(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்,
யாழ்.போதனா வைத்தியசாலை).

# உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944


## மக்கள் நலன் துறந்த போக்கு இது!

நாட்டின் பொருளாதார வளர்ச்சி 6.2 சதவீதத்தில் இருந்து 7.1 சதவீதமாக உயர்ந்திருப்பதாகப் பதில் நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்திருக்கிறார். இந்த வளர்ச்சி வீதத்தை இவ்வருட இறுதிக்குள் ஆகக் குறைந்தது 8சதவீதத்திற்கும் அதிகமாக்க வேண்டும் என்பது அவரது தளராத ஆசை; அரசாங்கத்தின் வேணவா என்றும் கொள்ளலாம்.

அதற்கான உரிய மார்க்கம் உறுதியான வழி, உயர்ந்த முதலீடே. அதில் இயன்றவரை அதிக எண்ணிக்கையானோரை ஊக்குவிக்க வேண்டும். சமூகத்தில் ஒவ்வொருவரையும் அபிவிருத்தியில் ஈடுபடச் செய்தால் அதனை ஈட்ட முடியும் என்பதும் கலாநிதி அமுனுகமவின் நம்பிக்கை.

அந்த நம்பிக்கையைச் செயல் வடிவமாக்கி நாடு அபிவிருத்திகாண வேண்டும். நாட்டில் சமாதானம் மலர்ந்துவிட்டதாயினும் அபிவிருத்தி இல்லாமல், மக்களுக்கு முன்னேற்றம் இல்லாமல் நாடு பொருளாதார பலமுற முடியாது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அவர் முன்வைத்துள்ள கருத்துக்கள் ஏற்புடைத்து அல்ல என்று மறுப்புக் கூற இயலாது. ஆனால் அந்தத் தத்துவம், செயல் வடிவம் பெறுவதற்கு அடித்தளமாக இருக்கக்கூடியது மக்களின் வாழ்க்கை நிலை உயர்வடைவதே.

அவர்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்பதற்கு அவர்களது சொந்த வாழ்க்கை, அதற்குரிய வாழ்வாதாரங்கள் பலமானவையாக இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். அபிவிருத்தியும், முன்னேற்றமும் கைக்கு எட்டுவதற்கு மக்கள் அவற்றுக்குப் பங்களிப்புச் செய்ய பொருளாதார பலமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

அந்த வகையில், மொத்தம் 13 மக்கள் நலத்திட்டங்களை இந்த வருடத்தில் நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் அவற்றுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தமது உரையில் வரிசைப்படுத்தி இருக்கிறார்.

ஆனால் மக்களின் நாளாந்த வாழ்க்கையின் பிரதான தேவைகள் மற்றும் அவற்றோடு தொடர்புடைய விடயங்களில் பதில் நிதி அமைச்சர் போதிய கவனம் செலுத்தவில்லை.

பொதுமக்களைப் பொறுத்தவரையில், அவர்களது முக்கிய தேவைகளான உணவு, உடை, உள்ளுறை (குடியிருப்பு) வசதிகளைச் சராசரி நிலைக்குக் கொண்டு வருதற்கான யோசனைகளோ திட்டங்களோ இல்லை என்ற அளவுக்கு அவர்களைக் கைவிட்டிருக்கிறார் பிரதி அமைச்சர்.

இதில் பலராலும் சுட்டிக்காட்டப்படுவது, ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்ட அரச, தனியார் துறைகளின் பணியாளர்களின் சம்பள உயர்வு குறித்ததாகும். அதாவது ஜனாதிபதித் தேர்தல் முடிவுற்ற பின்னர் அரசாங்க ஊழியர்கள், மற்றும் தனியார் துறை ஊழியர்களின் மாதாந்தச் சம்பளம் 2,500 ரூபாவால் உயர்த்தப்படும் என்று அரச தரப்பில் வாக்குறுதி அளிக்கப்பட்டது.

ஆனால் அமுனுகமவின் வரவு-செலவுத் திட்ட உரையில் அது குறித்து ஒரு சொல்லைத்தானும் காணோம்! அரச பணியாளர்களின் (வாக்குறுதி அளிக்கப்பட்ட) சம்பள உயர்வு இவ்வருடம் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படும் 2011 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்படும் என்று கூறப்பட்டிருந்தாலும் தனியார்துறை ஊழியர்களின் சம்பள உயர்வு குறித்து ஒரு சொல்தானும் இல்லை!

இத்தனைக்கும், கோதுமை மா, பாண், பால்மா ஆகிய அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் திடீரென உயர்த்தப்பட்டுவிட்டன. இனியும் பல பிரதான பொருள்களின் விலைகள் நினைத்தவாக்கில் உயர்த்தப்படும் என்பதனை நிச்சயம் எதிர்பார்க்கலாம்!

எதிர்வரும் ஆறு மாத காலத்திலும் அரசாங்க வரவு- செலவில் துண்டுவிழும் தொகை உயர்வாகக் காணப்படுவதால், 43 ஆயிரத்து 880 கோடி ரூபாவாக உள்ளதால், அதனை நிவர்த்தி செய்யப் புதிது புதிதாகப் பல சுமைகள் மக்கள் மீதே ஏற்றப்படும்! சாதாரண மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான வழிகளைக் கண்டறிந்து, அவற்றை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் அக்கறை கொள்ளாதிருப்பது இந்த நாட்டில் சோஷலிஸம் எப்போதுமே தலைதூக்கிப் பார்க்க இடமில்லை என்பதனைத் தொட்டுக் காட்டுவதாக உள்ளது!

போர் நடைபெற்ற காலத்தில், திட்டமிட்ட இராணுவச் செலவுகளுக்கு என்றும், திடீரென ஏற்பட்ட செலவுகளுக்கு என்றும் விலை உயர்வு மற்றும் வரிகள் மக்களின் தலைகளின் மீது காரண காரியம் தெரிவிக்கப்படாமல் சுமத்தப்பட்டன.

போர் முடிவுற்று ஒரு வருட காலமாகியும் அந்த நிலை தொடர்கிறது என்றால், அரசு கூடுதல் செலவுக்கு- புதிய காரணங்களைக் கண்டறியும் ''வேட்டையில்'' ஈடுபட்டிருக்கிறது என்பதே அர்த்தம்.

தேர்தல் வரும் காலங்களில் மட்டும் மக்களை நெருங்கி வந்து ஆசை வார்த்தை பேசும் அரசியல் தலைவர்கள், அது முடிந்த பின்னர் மக்களை மறந்து- அவர்களின் நலன்களைப் புறந்தள்ளி- நாட்டு நலனுக்காக என்று பெயரிட்டுத் தங்கள் மேம்பாட்டை உயர்த்தக் கருமம் ஆற்றும் போக்கு ஒழியும் வரை இந்த நிலை நீடிக்கத்தான் போகிறது....!

# சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்தவே இந்த "பட்ஜட்"

## குற்றஞ்சாட்டுகிறது ஐக்கிய தேசியக்கட்சி

கொழும்பு, ஜூலை 01

மக்களின் எதிர்பார்ப்புகளை சிதறடித்த இந்த வரவு - செலவுத் திட்டம் சர்வதேச நாணய நிதியத்தைத் திருப்திப்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்டதாகும். மொத்தத்தில் இது மஹிந்த சிந்தனையின் முன்நோக்கை அடிப்படையாகக் கொண்டதல்ல என ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.கட்சி எம்.பி. கபிர் ஹாசிம் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

யுத்தம் முடிவடைந்து விட்டது. எமக்குத் தாராளமாக நிவாரணம் கிடைக் கும் என நினைத்த மக்களின் எதிர்பார்ப்புகள் புஸ்வாணமாகிப் போய்விட்டன.

தேர்தலின்போது மக்களுக்குப் பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. அரச ஊழியர்களுக்கு 2,500 ரூபா சம்பள உயர்வு ஜனவரி மாதம் வரையிலான நிலுவையுடன் வழங்கப்படும் என அரச அமைச்சர்கள் மேடை களில் முழங்கினர். ஆனால் நடந்தது என்ன?

மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. அத்தியாவசிய துறைகளுக்கு கடந்த வருடத்தை விடக் குறைவான நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது. நீதி அமைச்சுக்கு 2009ஆம் ஆண்டு 800கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. ஆனால் 2010 ஆம் ஆண்டுக்கு 300 கோடி ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டில் கொலைகள், கற்பழிப்புகள், கொள்ளைகள் குறைந்து நீதித்துறையின் தேவை குறைந்து விட்டதா?

மக்களுக்கு அத்தியாவசியத் தேவையான சுகாதார அமைச்சுக்கு 2009ஆம் ஆண்டு 5,800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. இத் தொகை ஒதுக்கப்பட்டபோதும் வைத்தியசாலைகளில் மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியது. இந்த நிலையில் 2010ஆம் ஆண்டுக்கு 5,300 கோடியே ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேபோல், விவசாய அமைச்சுக்கு 2009ஆம் ஆண்டு 4,300 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. 2010ஆம் ஆண்டு 3,700 கோடி ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் எவ்வாறு உர மானியம் வழங்குவது?

அரச பாடசாலைகளில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதனால் பாடசாலைக் கட்டடத் தேவைகளும் அதிகரிக்கின்றன. இருந்தும் 2009ஆம் ஆண்டு கல்விக்கு ஒதுக்கப்பட்ட 2,700 கோடி ரூபா 2010 ஆம் ஆண்டுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஜனாதிபதி அலுவலகத்துக்கு ஒதுக்கப்படும் நிதி 400 கோடி ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டில் 1,100 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. இவ்வருடம் இந்தத் தொகை 1,500 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசுக்கு முறையான பொருளாதார முகாமைத்துவம் இல்லை. இதன் காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்திடம் மண்டியிடுகின்றது. வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரே சர்வதேச நாணய நிதியம் வரவு - செலவுத் திட்டம் திருப்தியளிக்கும் வகையில் இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.(ஒ-சி)

# ஆர்ப்பாட்டச் செய்தியை பிரசுரிக்க வேண்டாமென சில ஊடகங்களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதாம்

## தயாசிறி ஜயசேகர எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 01

2010 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் நடத்திய ஆர்ப்பாட்டம் தொடர்பான செய்திகளை வெளியிடக்கூடாது என்று சிலரால் அழுத்தம் கொடுக்கப்பட்டது என்று ஐ.தே.கவின் எம்.பி. தயாசிறி ஜயசேகர நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

இதன்மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்றும், இவ்வாறு அழுத்தம் கொடுத்தவர்களை நாடாளுமன்றத்துக்கு அழைத்து விசாரிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றில் நேற்று சிறப்புரிமை மீறல் பிரச்சினை ஒன்றை எழுப்பியே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

2010 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இச்சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அதன் மீதான உரை நிகழ்த்தப்பட்ட சந்தர்ப்பத்தில் நாம் அந்த வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.

இந்த ஆர்ப்பாட்டங்கள் தொடர்பான செய்திகளை வெளியிடுவதற்கு ஊடகங்கள் தயங்கின. சிலரால் கொடுக்கப்பட்ட அழுத்தமே இதற்குக் காரணம்.

இந்த நடவடிக்கை மூலம் ஊடக சுதந்திரமும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையும் மீறப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துகள் வெளியிடப்படுவதை இவ்வாறு தடுக்க முடியாது.

இதற்கு முன்பு இந்தச் சபையில் மலர்வளையம் கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பமும், சவப்பெட்டி கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பமும் உள்ளன. அது தொடர்பான செய்திகள் அப்போது வெளியிடப்பட்டன. ஆனால், எமது ஆர்ப்பாட்டம் தொடர்பான செய்திகளை மாத்திரம் இருட்டடிப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தச் செய்திகளை வெளியிட விடாது அழுத்தம் கொடுத்து எமது சிறப்புரிமையை மீறியவர்களை நாடாளுமன்றத்துக்கு அழைத்து விசாரிக்க வேண்டும். - என்றார்.(ஒ-சி)

# வடக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்கு டக்ளஸ் தேவானந்தா போட்டியிடுவார்

கொழும்பு, ஜூலை 1

எதிர்வரும் வடக்கு மாகாண சபை தேர்தலின்போது முதல் அமைச்சர் பதவிக்குத் தாம் போட்டியிடப்போவதாக ஈ.பி.டி.பியின் தலைவரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில தினசரி ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியில் இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

மாகாண சபைக்கான தேர்தல் எப்போது நடைபெறும் என்று கேட்டபோது அதற்குக் காலம் எடுக்கும் - ஏனென்றால் நிறைய வேலைகள் செய்யப்பட வேண்டியிருக்கின்றன - என்று பதிலளித்துள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிருபரின் கேள்விகளுக்கு மேலும் அளித்துள்ள பதில்களின் சில பகுதிகள் வருமாறு :-

போரின் பின்னர் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை அரசு அங்கீகரிக்கும் என்றும் அவர்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் என்றும் எதிர்பார்த்தேன். தென்னிலங்கை மக்களைப் போலன்றி அவர்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்கள் யுத்தத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தென்னிலங்கை மக்கள் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டவர்கள்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணையும்படி கேட்கப்பட்டுள்ளமை குறித்த கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் அதுபற்றி ஆலோசிக்கலாம், அரசியல் தீர்வு ஒன்று உருவாக்கப்பட்டதின் பின்னர் அரசியல் பிரச்சினை இன்னமும் இருந்துவருகிறதல்லவா, எமது பொதுவான கருத்து என்னவென்றால் அந்தப்பிரச்சினை கவனிக்கப்பட வேண்டும். அதன் பின்னர் நாம் ஒரு தீர்மானம் எடுப்போம் என்றார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் நாம் 13ஆவது திருத்தத்தை அமுல் படுத்துவதன் மூலம் ஆரம்பிக்கலாம் என்று தலைவர்களும் அரசியல் தீர்வொன்றை உருவாக்கும்படிதான் கேட்டுக் கொண்டார்கள். இந்தியத் தலைவர்களுடனான பேச்சுக்களால் நமது ஜனாதிபதி யுடன் நானும் கலந்து கொண்டேன். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலம் தேசிய நல்லிணக்கத்தைக் கொண்டுவர முடியும் என்றார். (ப)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 1

தியாகிகள் தினத்தை ஒட்டி பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியினர் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் மோதும் அணிகளின் விவரங்கள் வருமாறு :-

* நவாலி சென்.பீற்றர்ஸ் அணி எதிர் பாஷையூர் அன்ரனிஸ் வி.க.
* மயிலங்காடு ஞானமுருகன் வி.க. எதிர் கலட்டி வி.க. (ஒ-6)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 18 | 02.07.2010 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி | : ஷஷ்டி |
| | மு.ப. 10.06 வரை |
| நட்சத்திரம் | : சதயம் |
| | பி.இ. 03.19 வரை |
| சுபநேரம் | : 05.56 - 07.26 |
| ராகுகாலம் | : 10.26 - 11.56 |

# குடாநாட்டுச் சந்தைகளில் வாழைப்பழத்தின் விலை உயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை தினமும் கிடுகிடுவென அதிகரித்து வருகின்றது.

சந்தைகளில் வாழைக்குலைகளின் வருகை மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

இதனால் தான் நாளுக்கு நாள் இந்த விலை அதிகரிப்பு ஏற்படுவதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

முன்னர் ஒரு கிலோ 30 ரூபாவாக விற்கப்பட்ட கதலி வாழைப்பழம் தற்போது 50 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

அண்மையில் வீசிய "லைலா" புயலினாலும் பெரும் எண்ணிக்கையான வாழைகள் அழிவடைந்துள்ளன.

இதனைவிடத் தென்பகுதிக்கும் வாழைக்குலைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இவற்றினால் வாழைப்பழத்தின் விலை நாளுக்குநாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(50-224)

## சேவை நலன் பாராட்டு



எமது கல்லூரியில் கடந்த 21 வருடங்களாக சேவையாற்றி 22.01.2010 அன்று ஓய்வுபெற்று இன்று விழாக் காணும் ஆசிரியை

திருமதி

**சுதந்திராதேவி தங்கராஜா**
(B.Com.Dip.in Edu.S.L.T.S. - I)

அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் அவர் நீண்டகாலம் நலமுடன் வாழ சிவகாமி சமேத நடராஜப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்**
**யா/விக்ரோறியாக் கல்லூரி,**
**சுழிபுரம்.**

(100096)

## பதவி வெற்றிடம்
### சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
### சங்கானை

மேற்படி சங்கத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடைய விண்ணப்பதாரிகள் கடமை நேரத்தில் காரியாலயத்தில் ரூபா 25/= செலுத்தி விண்ணப்பங்களை பெற்று தலைவர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பிரதான வீதி, சங்கானை எனும் முகவரிக்கு எதிர்வரும் 14.07.2010 பிற்பகல் 4.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கும் வண்ணம் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் எக் காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிக்குரிய பெயர் எழுதப்பட வேண்டும்.

*** வயது எல்லை**

* சங்கப் பணியாளர்களாயின் வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது.
* தனிப்பட்ட விண்ணப்பதாரிகளாயின் 18-45 வயதுக்குட் பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

01. பதவி: **பொது முகாமையாளர்: 101/07**
சம்பள அளவுத் திட்டம் (66/2006 இன்படி)
11450-145x10-160x10-14500
(கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபப்படி வாழ்க்கைச் செலவுப் படி வழங்கப்படும்)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

* கூட்டுறவுப் பணியாளர் 8வது சம்பளத் திட்டப் பதவி ஒன்றில் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 9ஆவது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்டப் பதவி ஒன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்.

அல்லது

* அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம் அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமை மட்டப் பதவி ஒன்றில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவமும்.

அல்லது

* கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமை மட்ட பதவி ஒன்றில் 8 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

02. பதவி: **வர்த்தக முகாமையாளர் 106/09**
சம்பள அளவுத் திட்டம் (66/2006 இன் படி)
10950-130x10-140x10-13650
(கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபப்படி வாழ்க்கைச் செலவுப் படி வழங்கப்படும்)

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

* கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத் திட்ட தொடர்புபட்ட துறையிலான முகாமை மட்ட பதவி அல்லது மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 11ஆவது சம்பளத்திட்டத்தின்படி பதவி ஒன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

* அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம் அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் விற்பனை அல்லது பொருள்கள் விநியோகம் செய்தலும் வழங்குதலும் அல்லது பொருள்கள் ஏற்றுமதி இறக்குமதி ஆகிய துறைகளின் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முகாமைமட்டப் பதவியொன்றில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

* கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றில் சந்தைப்படுத்தல் அல்லது பொருள்கள் வழங்குதலும் விநியோகம் செய்தலும் மற்றும் ஏற்றுமதி இறக்குமதி ஆகிய துறைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றின் முகாமை மட்டப்பதவி ஒன்றில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

முக்கிய குறிப்பு:

* சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* சங்கப் பணியாளர்களாயின் கடமையாற்றும் சங்கத்திற்கு ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

**தலைவர்**
*சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.*

(சி-568772)

### வீடமைப்பு திட்டத்திற்கு இன்று அடிக்கல்

கிளிநொச்சி பொன் நகரில் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 50 வீடுகளுக்கான அடிக்கல் நடும் வைபவம் இன்று வியாழக்கிழமை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தலைவர் ஜெயந்திர சமரவீர கலந்துகொண்டு அடிக்கல்லை நடுவார்.

இவ் வீடமைப்புத் திட்டத்திற்காக 15 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு கட்டப்படவுள்ள ஒரு வீட்டின் பெறுமதி 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வீடமைப்புத் திட்டத்திற்கு முதற்கட்டமாக 21 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். ஏனையோர் காலக் கிரமத்தில் தெரிவுசெய்யப்படுவர் என தெரிவிக்கப்பட்டது. (ஒ-டி-115)

### வாளிகள் அன்பளிப்பு

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சன சமூக நிலையங்கள், முன்பள்ளிகள் என்பவற்றிற்கு 'பிளாஸ்ரிக்' வாளிகள் பிரதேச சபையால் வழங்கப்படவுள்ளன.

இவைகளுக்கு வழங்கவென 'யுனிசெப்' அமைப்பினால் வாளிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. அன்பளிப்பாக வழங்கப்படும் வாளிகளை உரிய சன சமூக நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகள் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-131)

### பெற்றோலை உடலில் ஊற்றி தீ மூட்டிக் கொண்ட இளைஞர்

யாழ்ப்பாணம், ஜூலை1

காதல் விவகாரம் தொடர்பில் பிணக்கு ஏற்பட்டதை அடுத்து இளைஞர் தமது உடலில் பெற்றோல் ஊற்றி தீ மூட்டிக் கொண்டார். இச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி கெருடாவிலில் இடம்பெற்றது.

பலத்த எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில், பிரஸ்தாப இளைஞர் சாவகச்சேரி வைத்தியசாலையில் நேற்று அதிகாலை அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டம், புது வீதியைச் சேர்ந்த இளைஞரே எரிகாயங்களுக்கு இலக்கானவராவார். (ஒ-207)

### சிறுமியை வல்லுறவு புரிந்த நபருக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம், ஜூலை1

சாவகச்சேரிப் பகுதியில் 15 வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் சந்தேக நபர் ஒருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரஸ்தாப நபர் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

பதில் நீதிவான் ஏ.எம்.எம்.றியால் சந்தேக நபரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-207)

### அரசியல் கட்சிகளாக பதிவுசெய்ய விண்ணப்பம்

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதற்காக தேர்தல் ஆணையாளரிடம் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் கட்சியின் அவைத் தலைவராக சட்டத்தரணி கனகநமநாதன் தலைவராக சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா பொதுச் செயலாளராக எம்.கே.சிவாஜிலிங்கமும் செயற்படவுள்ளனர்.

மத்திய குழுவில் 17 பேரும் பொதுக் குழுவில் 51 பேரும் அங்கம் வகிக்கின்றனர். இதே வேளை இதுவரை, தேர்தல் ஆணையாளரிடம் அறுபதுக்கும் மேற்பட்ட கட்சிகள் அரசியல் கட்சிகளாக பதிவு செய்வதற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

## யாழ்ப்பாண மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபரை வாழ்த்தி வரவேற்கின்றோம்



*முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றி இன்று தொடக்கம் (01.07.2010) யாழ்ப்பாண மாவட்டத்தின் அரசாங்க அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்கும் மதிப்பிற்குரிய எமது அரசாங்க அதிபர்*

**திருமதி இமெல்டா சுகுமார்**

*அவர்களை உளமார வாழ்த்தி வரவேற்பதுடன் அவரது பணி சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.*

**மாவட்டச் செயலக நலன்புரி கழகத்தினர்.**
**மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

(சி-568786)

### கரவை ஒன்றிய வெளிநாட்டுக் கிளையின் அனுசரணையுடன் கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான இலவச வழிகாட்டற் கருத்தரங்கு

இடம் : யா/விக்னேஸ்வராக் கல்லூரி

இந்நிகழ்வில் க.பொ.த உயர்தரத்திற்கான ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் வரவை அன்புடன் எதிர்பார்க்கிறோம்

காலம் : 03.07.2010 சனி
காலை 8.30 மணி
* இணைந்த கணிதம்
கலாநிதி S. சிறீசற்குணராசா
தலைவர், கணித புள்ளிவிபரவியல் துறை.
யாழ். பல்கலைக்கழகம்.
* பொருளியல்
சனி காலை 9 மணி
S. கருணாகரன் ஆசிரியர்,
கனகராயன் மகாவித்தியாலயம்.

காலம் : 04.07.2010 ஞாயிறு
காலை 9 மணி
* பௌதீகவியல்
பேராசிரியர் K. கந்தசாமி
தலைவர் – பௌதீகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

*பிற்பகல் 12.30 மணி
இரசாயனவியல்
கலாநிதி R. சிறீகரன்
தலைவர் – இரசாயனவியற்துறை.
யாழ். பல்கலைக்கழகம்.

ஏற்பாட்டாளர்,
கரவெட்டி ஸ்பேஸ்,
விளையாட்டுக்கழகம்

(சி/568774)

## மரண அறிவித்தல்

### முத்துக்குமாரு நல்லகுமார்



தென்னை, பனை அபிவிருத்திச் சபையில் முன்னாள் வெளிக்கள உத்தியோகத்தரும் தற்போது (London carrow vembly) வதிவிடமாகக் கொண்டவரும், அதே இடத்தில் உள்ள தொழிற்சாலையில் கடமையாற்றியவருமாகிய முத்துக்குமாரு நல்லகுமார் 16.06.2010 அன்று லண்டனில் அகால மரணமடைந்தார்.

அன்னார் அல்வாய் வடக்கைச் சேர்ந்த முத்துக்குமாரு - நல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், உதயகுமாரியின் அன்புக் கணவரும், விஜயராம், தர்மின், சோபனா, சுதர்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஜதுர்க்கனின் மாமனாரும் அபிஷாந்தின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ''மாவடி'' அல்வாய் வடக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (01.07.2010) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*"மாவடி"*
*அல்வாய் வடக்கு, பருத்தித்துறை.*

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்**

(சி-568178)

# ஏ-9 வீதியை அகலமாக்கி புனரமைப்பதற்கான ஏற்பாடுகளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## உடன் பணிகளை ஆரம்பிப்பது குறித்தும் ஆலோசனை

யாழ்ப்பாணம்,ஜூலை 1

ஏ-9 பிரதான வீதியையும் அகலமாக்கிப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இந்த வீதியின் புனரமைப்புப் பணிகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான பணிப்புரை உரிய இடத்தில் இருந்து கிடைத்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த வீதியின் ஓரங்களில் நடப்பட்டிருக்கும் வேக அடையாளத் தூண்களை உடனடியாக அகற்றி வீதியின் நடுப்பகுதியிலிருந்து 24 மீற்றர் தூரத்துக்கு அப்பால் நடுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் ஏ-9 வீதி மிகவும் விலாசமான முறையில் அகலமாக்கிப் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

வீதி அகலமாக்கும் நடவடிக்கையால் பொதுமக்களின் வீடுகள் மற்றும் கட்டடங்கள் என்பவற்றையும் அகற்றவேண்டிய தேவை ஏற்படும்.

ஏ-9 வீதியில் தற்போது போக்குவரத்து என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன் வீதி விபத்துக்களும் அதிகளவில் இடம்பெறுகின்றன.

இவற்றைத் தவிர்த்துப் போக்குவரத்தை இலகுபடுத்துவதற்காகவே அகலமாக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

ஏற்கனவே பருத்தித்துறை வீதியின் அகலமாக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. கே.கே.எஸ். வீதியையும் அகலமாக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன- என்றார். (50-224)

## யாழ்.மறைமாவட்ட ஆயரின் பெயர் கொண்ட தினம்

கொழும்புத்துறை,ஜூலை 1

யாழ்.ஆயரின் பெயர் கொண்ட தினமான புனித தோமையாரின் குருவிழாவையொட்டி யாழ்.பேராலயத்தில் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் பெயர் கொண்ட தினவிழா திருப்பலியை நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு ஒப்புக் கொடுக்கவுள்ளார்.

யாழ்.மறைக்கல்வி நிலையம் ஏற்பாடு செய்துள்ள இவ்விழாவில் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள், துறவியர், குருக்கள் கலந்து கொள்வர்.

ஜூலை மாதத்தில் யாழ்.ஆயரின் பெயர் கொண்ட தினம் (ஜூலை 3), யாழ்.ஆயராக நியமனம் (ஜூலை 6), ஆயரின் பிறந்த தினம் (ஜூலை 13), ஆயராக அபிஷேகம் (ஜூலை 30), ஆகிய சிறப்புத் தினங்கள் ஒன்றிணைந்து வருவது குறிப்பிடத்தக்கது. (50-135)




## சங்காபிஷேகம்

நாவற்குழி சித்திர வேலாயுதர் ஆலயத்தின் சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெற்று மாலை திருக்கல்யாணமும் சுவாமி வீதியுலாவும் இடம்பெறவுள்ளது. (204)

# யாழ்ப்பாணத்தில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் சூழல் மாசடையும் அபாயம்

## சுற்றாடல் அமைச்சின் பணிப்பாளர் எச்சரிக்கை

நல்லூர்,ஜூலை1

யாழ்ப்பாணத்துக்கு வரும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால் சூழல் மாசுபடக் கூடியநிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றாடல் அமைச்சின் பணிப்பாளர் சுனிமால் ஜெயதுங்க தெரிவித்தார்.

'சுற்றாடல் குறிப்பு' என்ற நாட்குறிப்பை 3ஆம் தர மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி வழங்கிய நிகழ்வு யாழ்.வலயக் கல்வித் திணைக்களத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய சுற்றாடல் அமைச்சின் பணிப்பாளர் சுனிமால் ஜெயதுங்க மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்ப்பாணத்திற்கு வரும் மக்களுடன் கூடவே பொருள்களும் நிறைய வருகின்றன. இங்கு குப்பைகள் அதிகரிக்கின்றன. மக்களுடன் வாகனங்களும் பெருமளவில் வந்து செல்வதால் அவற்றின் புகைகள் எல்லாம் சேர்ந்து சுற்றாடலை மாசுபடுத்தும். நகரங்கள் பலவற்றில் வாகனப் புகைகள் பெரிய அளவில் காணப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் குறைவு. எனினும் எதிர்காலத்தில் இந்தப் பாதிப்பு ஏற்படலாம். சுற்றாடல் தொடர்பான இந்த நாட்குறிப்பு கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவனம் ஆகியவற்றுடன் சுற்றாடல் அமைச்சு இணைந்து தயாரித்தது. 16 கருத்துக்களைக் கொண்டதாக இது வெளியிடப்பட்டுள்ளது. 2010ஆம் ஆண்டிற்குள் இதில் குறிப்பிட்ட விடயங்களை அமுல்படுத்துவதில் நாங்கள் அக்கறை கொண்டுள்ளோம். இந்தக் குறிப்புப் புத்தகத்தை சிறந்த முறையில் பயன்படுத்தும் பாடசாலைக்கும் சிறுவர்களுக்கும் பரிசுகள் வழங்கவும் தீர்மானித்துள்ளோம். முதல் தடவையாக இது யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்படுகின்றது. இலங்கையில் 27 பாடசாலைகளிலும் மேல்மாகாணத்தில் 10 தமிழ்ப் பாடசாலைகளிலும் யாழ். வலயத்தில் ஐந்து பாடசாலைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய கல்வி நிறுவன ஆரம்பக் கல்விப் பிரிவுப் பணிப்பாளர் கலாநிதி சுரநிமல லேக்கம, சுற்றாடல் அமைச்சின் செயற்றிட்ட உதவியாளர் மயூரி மல்லவராய்ச்சி, யாழ்.வலய ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் பூ.குகதாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (50-111)

# காரைநகர் பிரதேசத்தில் சில வீதிகள் சிறந்த முறையில் புனரமைக்கப்படவில்லை

## பொது மக்கள் சம்பந்தப்பட்டோருக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,ஜூலை1

காரைநகர் பிரதேச சபைக்குட்பட்ட நாவலடிக்கேணி வீதி, சந்தம்புளியடி வீதி என்பன புனரமைக்கப்பட்ட போதிலும் அவை மக்கள் போக்குவரத்துச் செய்யக் கூடிய நிலையில் புனரமைக்கப்படாமையினால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதிகளின் புனரமைப்பிற்கெனக் கொட்டப்பட்ட கல், மண் என்பன சீரான முறையில் பரவி செப்பனிடப்படாமையால் வீதிகள் கல்மயமாகவே காட்சியளிக்கின்றன. அவற்றை சீரான முறையில் புனரமைக்க வேண்டும் அல்லது வீதிகளில் கொட்டப்பட்ட கற்கள் அகற்றப்பட்டு முன்பிருந்தது போல மக்களின் சீரான போக்குவரத்துக்கு அனுமதிக்க வேண்டும் என இப்பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் கையொப்பம் இட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் அங்குள்ள ஆலய நிர்வாகத்தினர் பொது அமைப்புக்கள் என்பனவும் தங்கள் தங்கள் கடிதத் தலைப்புக்களில் மேற்கண்ட கோரிக்கை அடங்கிய மகஜர்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கையளித்துள்ளனர்.

இந்த மகஜர்களில் மேலும் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் வருமாறு,

கடந்த பல மாதங்களுக்குத் மேலாக நாவற்கேணி வீதி, சந்தம் புளியடி வீதி என்பவற்றில் கல் கொட்டப்பட்டு சீராக செப்பனிடப்படாது கல்மயமாகவே காட்சியளிக்கின்றன. மண் வீதியாக இருந்த போது மக்கள் நடமாட்டம் சீராக ஒழுங்காக இடம்பெற்று வந்தது.

ஆனால் தற்போது போக்குவரத்திற்கு கஷ்டமாக உள்ளதோடு வயோதிபர்கள் அவ் வீதிகளில் விழுவதும் கை கால் முறிவதுமாக உள்ளது. ஆபத்து நேரத்தில் ஓடிச் சென்று உதவி செய்யவும் முடியாது உள்ளது.

எனவே வீதிகளில் கொட்டப்பட்ட கற்களை சீராக செப்பனிட்டோ அல்லது அகற்றியோ பொது மக்களின் சீரான போக்குவரத்துக்கு ஆவன செய்ய வேண்டும் - என்றுள்ளது. (50-250)

# குடும்பநல மருத்துவ மாணவிகள் இன்று முதல் கற்றல் செயற்பாடுகளுக்குச் சமுகமளிக்க அனுமதி

யாழ்ப்பாணம்,ஜூலை1

யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியின் குடும்பநல மருத்துவ மாணவிகள் பெண் விரிவுரையாளர் ஒருவருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் செய்த முறைப்பாட்டை வாபஸ் பெறத் தேவையில்லை. இன்று வியாழக்கிழமை முதல் அவர்கள் கற்றல் செயற்பாடுகளுக்கு அனுமதிக்கப்படுவர்.

இவ்வாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் நிர்வாகம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளருக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியின் விரிவுரையாளர் ஒருவருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் குடும்ப நல மருத்துவ மாணவிகள் முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டை உடனடியாக வாபஸ் பெறவேண்டும், குறித்த விரிவுரையாளருக்கு எதிராக செய்யப்பட்ட முறைப்பாடு தவறானது எனக்கூறி மன்னிப்புக் கோர வேண்டும் என்ற நிபந்தனைகளை விதித்து குடும்பநல மருத்துவ மாணவிகள் கற்றல் செயற்பாடுகளிலிருந்து கடந்த 10 ஆம் திகதி முதல் இடை நிறுத்தப்பட்டிருந்தனர்.


இது குறித்துப் பாதிக்கப்பட்ட குடும்பநல மருத்துவ மாணவிகளின் பெற்றோர் சார்பாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் கடந்த 21 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டது.

இதன் பிரகாரம் யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர், தாதியர் பயிற்சிக் கல்லூரியின் அதிபர் ஆகியோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு கடந்த 2ஆம் திகதி விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

சுமார் 5 மணித்தியாலங்கள் இடம்பெற்ற குற்ற விசாரணைகளின் பின்னர் குறிப்பிட்ட மாணவிகளை தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இணைத்துக் கொள்வதற்கு இரண்டு நாள் கால அவகாசத்தை ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி த.கனகராஜ், வைத்தியசாலை நிர்வாகத்துக்கு வழங்கியிருந்தார்.

அவ்வாறு தீர்வு எட்டப்படாவிட்டால் இந்த விடயம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பிலுள்ள தலைமையகத்துக்கு கொண்டு செல்லப்படும் எனவும் அவர் கூறியிருந்தார்.

இதனையடுத்து குறிப்பிட்ட குடும்பநல மருத்துவ மாணவிகளை இன்று வியாழக்கிழமை முதல் கற்றல் செயற்பாடுகளுக்கு அனுமதிப்பதாக யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் உத்தியோகபூர்வமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு நேற்றுக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளதாக இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார். (50-9)



சிலிங்கோ சிஸ்கோ் நிறுவனம் தனது 12ஆவது கிளையை நேற்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட படை அதிகாரி அஜித் பன்னவல 'சிலிங்கோ சிஸ்கோ' நிறுவனப் பொது முகாமையாளர் எஷந்த டி சில்வா ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை முதல் இரு படங்களிலும், 'சிலிங்கோ சிஸ்கோ' நிறுவனப் பிரதிப் பணிப்பாளர் லலித் பண்டாரநாயக்க, டி.எப்.சி.சி வங்கியின் முகாமையாளர் வே.ஞானோதரன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை மூன்றாம், நான்காம் படங்களிலும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.

*(படங்கள்: சுகந்தன்)*

# சந்திப்பை ஒழுங்கு செய்தவர் கே.பி. வடக்கு சென்றார் என்பது பொய்

## பாதுகாப்புச் செயலர் கோத்தபாய தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 01

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய பிரமுகரான கே.பி. என அழைக்கப்படும் செல்வராசா பத்மநாதன், சிறையில் தான் அடைக்கப்பட்டிருக்கிறார். அவர் புலம்பெயர் தமிழர் பிரதிநிதிகளுடன் வட மாகாணத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்கின்ற செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை.

- இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று முன்தினம் பி.பி.சி இற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தனக்கும் புலம்பெயர் தமிழர் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பை கே.பிதான் ஏற்பாடு செய்தார் என்றும் அவர் தெரிவித்தார்.

புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்த தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு கூட்டுச் சேர்கின்றது என்கின்ற குற்றச்சாட்டுத் தொடர்பில் அவர் இச்செய்திச் சேவைக்கு விளக்கம் அளித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்த புலிகள் மற்றும் புலி ஆதரவுச் சக்திகளுடன் அரசு கூட்டுச் சேர்கிறது என வெளியாகியிருக்கும் செய்திகளில் எவ்விதமான உண்மையும் இல்லை.

ஆனால் நாம் புலி ஆதரவாளர்களான புலம்பெயர் தமிழர்களை அண்மையில் இலங்கையில் சந்தித்தோம். இவர்களுடனான பேச்சுகள் வெற்றிகரமாக அமைந்தன.

இவர்கள் இலங்கை வருவதற்குத் தேவையான ஏற்பாடுகளை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கே.பி மேற்கொண்டார்.

அரசைத் தொடர்ந்து எதிர்ப்பதில் எவ்வித பயனும் இல்லை என்று இவர்கள் புரிந்து கொண்டனர். ஆகவே தமிழ்ச் சமூகத்தின் நன்மைகளை உத்தேசித்துச் செயற்பட அவர்கள் விருப்பம் கொண்டுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அபிவிருத்தி வேலைகள், அவற்றின் குறைநிறைகள் பற்றி இவர்கள் எம்முடன் பேசினர். இவர்களுடனான தொடர்பை ஏற்படுத்தித் தந்தமையில் கே.பிக்கு பங்கு உண்டு. இலங்கைக்கு வருகை தருவதில் இவர்களும் மிகுந்த ஆர்வம் காட்டியிருந்தார்கள். இவர்கள் கே.பியைச் சந்தித்தார்கள்.

ஆனால் இவர்களுடன் கே.பி. வட மாகாணத்துக்கு அழைத்துச் செல்லப்படவே இல்லை. கே.பி. சிறையில்தான் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

(சி)

# யு.என்.எச்.சி.ஆர். அலுவலகம் கிழக்கில் மூடப்படுகின்றது

கொழும்பு, ஜூலை 01

ஐ.நாவின் அகதிகளுக்கான ஆணையம், கிழக்கில் தனது பணிகளை குறைத்துக் கொள்கிறது என அறிவித்துள்ளது.

இதன்படி கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக மட்டக்களப்பில் செயற்பட்டு வந்த அந்த அமைப்பின் அலுவலகம் மூடப்படுகிறது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த எட்டு ஆண்டுகளாக இடம்பெயர்ந்திருந்த நிலையில் இருந்த மக்களில் பெரும்பாலானவர்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிவிட்டனர் எனவும் அதனாலேயே தமது பணிகள் கிழக்கு மாகாணத்தில் குறைத்துக் கொள்ளப்படுகின்றன எனவும் யு.என்.எச்.சி.ஆர். அமைப்பின் இலங்கைப் பிரதிநிதி மைக்கேல் ஸ்வாக் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பியிருந்தாலும் பல காலமாக அவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் உதவிகளை தமது அமைப்பு செய்து வந்துள்ளது என்றும் மைக்கேல் ஸ்வாக் கூறியுள்ளார்.

வடக்கே இன்னமும் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் இருக்கும் 54,000 மக்களின் நலன் குறித்தும் அவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீண்டும் வாழ்வது குறித்தும் தாம் தற்போது கவனம் செலுத்தி வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(சி)


## ST.JOHN'S COLLEGE, JAFFNA
## ANNUAL PRIZE GIVING 2010

**Saturday 3rd July 2010**
**at 10.00 a.m.**

**Chief Guests:**

Dr. Natkunam Ketheesan MD, PhD
*Associate Professor, James Cook University, Queensland, Australia*

&

Dr.(Mrs) Prasani Ketheesan MD, FRACGP
*General Practitioner, UniHealth Medical Centre, Townsville, Queensland, Australia*

**Chairman:**

Ven S P Nesakumar
*Archdeacon of Jaffna & Manager of the College*

Parents, Old Boys & Well-wishers are cordially invited.

Principal, Staff & Students


## தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 01

தேசிய பயிலுநர் கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம், மானிப்பாய் ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள பயிற்சி நிலையங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பத்தாரி ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் கூடிய 6 பாடங்களில் சித்தி அல்லது ஏதேனும் 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது ஏதேனும் 3 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில்களில் 2 பாடங்களில் சித்தியும் இருக்க வேண்டும். விண்ணப்பத்தாரி முடிவுத்திகயன்று 16-25 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதியுடைய விண்ணப்பத்தாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்ததிகதி, தே.அ.அட்டை இல, கல்வித் தகைமைகள், பயிலவிரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், NAITA, இல.7, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பிவைக்க வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் தகவல் தொடர்பாடல் கற்கைநெறி (NCICT) இற்கான விண்ணப்பம் என குறிப்பிடப்படுதல் வேண்டும். (50-201)

## பெயர் மாற்றம்

இத்தால் சகலரும் அறிய, நாவற்குழிச் சந்தி, கைதடி என்னும் முகவரியில் வசிக்கும் இராமன் செல்லி ஆகியநான் என்னுடைய பெயரை இன்று (01.07.2010) வியாழக்கிழமை முதல் இராமன் மரியராணி என்று மாற்ற விரும்புகிறேன். இன்று முதல் நான் சகல ஆவணங்களிலும் இராமன் மரியராணி என்றே கையழுத்திடுவேன் என்று சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

இராமன் மரியராணி


## Great Vision & Opportunity

சாவகச்சேரியில் அண்மையில் நிறுவப்பட்ட World wide நிறுவனத்திற்கு Manager, Assistant Manager, Supervisor போன்ற பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்றன. நீங்கள் O/L, A/L சித்தி பெற்றவராயின் உங்களுக்கு உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் பயிற்சி பெறுவதுடன் கவர்ச்சிகரமான சம்பளமும் வழங்கப்படும். இன்றே அழையுங்கள்.

Contact: V.Udayarajan 071 7494735


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்: 05.11.1952

விண்ணில்: 01.07.2009

### அமரர் இரத்தினம் வைகுந்தவாசன்

(களஞ்சியக் காப்பாளர், பனை அபிவிருத்திச் சபை-யாழ்ப்பாணம்)

தந்தையிடம் சென்றாய் என்று இங்கே
தாய் அவள் கலங்குகின்றாள் தம்பி
சிந்தையிலே நிறைந்த நல்லாள் பிரிவால்
சிறகொடிந்த பறவையாகி தவிக்கின்றாள் ஐயோ
தந்தையின் வதனமதை தரணியிலே காணாது
பிஞ்சுகள் மூன்றும் பெருந்துயர் கொண்டதுவே
உந்தனது பிரிவால் உடன் பிறந்தோர் உறவுகளும்
நொந்து படும் வேதனையை நீ அறிய மாட்டாயோ!

பிறவுண் வீதி, கொக்குவில். (100087) குடும்பத்தினர்.

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்: 16.07.1959

விண்ணில்: 26.06.2005

திதி: 01.07.2010

### திருமதி ஜெயந்திமாலா சிவரத்தினராசா

எங்கள் அருமைத் தாயே!
எத்தனை வருடங்கள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
ஒருபோதும் எம்மைவிட்டு அகலாது.

கைதடி மேற்கு, கைதடி. (100054) குடும்பத்தினர்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1203 நீலம்

29-06-2010

மிதுனம் 16 29 50 52

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 210,608 | 20/- | 4,212,160/- |
| 2 இலக்கங்கள் | 19,238 | 40/- | 769,520/- |
| 1 இல. + லக்கினம் | 19,130 | 60/- | 1,147,800/- |
| 2 இல. + லக்கினம் | 1,771 | 200/- | 354,200/- |
| 3 இலக்கங்கள் | 518 | 1000/- | 518,000/- |
| 3 இல. + லக்கினம் | 45 | 10,000/- | 450,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| மொத்தம் | | | 8,051,680/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 251,318 | | 8,551,680/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,940,300/-

2010 ஜூலை 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| திருகோணமலை | 401386295-6-17 |
| குருநாகல் | 401376953-3-23 |
| களுத்துறை | 401386789-2-42 |
| பொலன்னறுவை | 401382374-8-06 |
| காலி | 401390587-5-35 |

# யாழ்.நகரத்தில் உள்ள புதிய வியாபார நிறுவனங்கள் 15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்க

## யாழ். வணிகர் கழகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம் , ஜூலை 1

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் யாழ். வணிகர்கழகத்தில் பதிவு செய்யப்படாமல் உள்ள வியாபார நிறுவனங்கள் மற்றும் கடைகளைப் பதிவு செய்து கொள்ளுமாறு வணிகர்கழகம் அறிவித்துள்ளது.

இதுவரை யாழ். வணிகர்கழகத்தில் பதிவு செய்யாத வியாபார நிறுவனங்கள் மற்றும் புதிதாக வியாபார நிறுவனங்களை ஆரம்பித்தவர்கள் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் யாழ். மாநகரத்தில் ஏற்படும் நகர அபிவிருத்தி தொழிற்சாலைகள் மற்றும் வியாபார முதல்கள் செய்வதற்கான முன்னெடுப்புக்கள் போன்ற விடயங்களில் யாழ்.வணிகர்கழகம் ஈடுபடவுள்ளது.

இதில் வணிகர் கழகத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் மட்டுமே பங்குதாரர்களாக வருவதற்கு உரித்துடையவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட வியாபார நிறுவனங்கள் நகரத்தின் கட்டுக்கோப்பையும் ஒழுங்குமுறைகளைப் பேணும் வகையில் ஞாயிற்றுக்கிழமைகளில் கடைகளைப் பூட்டி, தங்கள் ஊழியர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை வழங்கி பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களை வணிகர்கழகம் கேட்டுள்ளது.

அத்துடன் உரிமையாளர்களால் மட்டும் நடத்தப்படும் வர்த்தக நிலையங்களையும் ஞாயிற்றுக்கிழமைகளில் பூட்டி ஏனைய வர்த்தக நிலையங்களுடன் ஒத்துழைக்குமாறு வணிகர்கழகம் கேட்டுள்ளது.

(50-14)

## சின்ன வெங்காயத்தின் விலை அதிகரிப்பு

வடமராட்சி , ஜூலை 1

யாழ். குடாநாட்டில் சின்ன வெங்காயத்தின் விலை திடீரென உயர்ந்துள்ளது.

ஒரு அந்தர் வெங்காயம் 5 ஆயிரம் ரூபாவாக வியாபாரிகளால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. அதேவேளை ஒரு கிலோ வெங்காயம் 100 ரூபாவாக சந்தைகளில் விற்கப்பட்டு வருகிறது.

உள்ளூரிலும், வன்னியிலும் வெங்காயப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதையடுத்து விதை வெங்காயத்திற்கான கொள்வனவு செய்யப்படுவது அதிகரித்துள்ளதாலேயே வெங்காயத்தின் விலை உயர்வடைந்துள்ளது. (50-236)

## இலங்கைக் கலை இலக்கிய சங்கம் நடத்தும் விழா 4ஆம், 11 ஆம் திகதிகளில்

வடமராட்சி , ஜூலை 1

அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் இவ்வாண்டுக்கான கலை இலக்கிய விழா எதிர்வரும் 4ஆம், 11 ஆம் திகதிகளில் - இரு தினங்கள் துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டபத்தில் சங்கத்தலைவர் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இடம்பெறும் முதல் நாள் நிகழ்வு காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 2 மணிவரை இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஓய்வு பெற்ற கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் உடுவை தில்லைநடராசா கலந்துகொள்வார்.

விசேட அதிதியாக மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் தெணியானும், சிறப்பு விருந்தினராக பண்டிதை வ.பத்தினிப் பிள்ளையும் கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். சத்தியசீலனும் கலந்துகொள்வார்கள்.

அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தால் சர்வதேச மட்டத்தில் நடத்தப்பட்ட நாடகக் கலைஞர் கந்தையா வடிவேலு ஞாபகார்த்த கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றோர்களுக்கு பரிசில்களும் நிகழ்வில் வைத்து வழங்கப்படும்.

(50-236)

## இலக்கணப் போட்டியில் மாணவி முதலிடம்

வடமராட்சி , ஜூலை 1



யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய மட்ட தமிழ்த் தினப் போட்டியில் பிரிவு 4 இலக்கணப் போட்டியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி தர்சிகா செல்வராசா முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

(50-236)

## 'வீதி அடித்தளத்தின் சிமெந்து பலப்படுத்தல்' யூரோவில் மண்டபத்தில் கருத்தரங்கு இன்று

நல்லூர் , ஜூலை 1

இலங்கை பொறியியலாளர் சங்க வட பிராந்திய நிலையத்தின் அனுசரணையுடன் ''வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதி அடித்தளத்தின் சிமெந்து பலப்படுத்தல்'' பற்றிய கருத்தரங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் தலைமையில் நடைபெறும். இக்கருத்தரங்கில் ''வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ''வீதி அடித்தளத்தின் சிமெந்து பலப்படுத்தல்'' என்னும் விடயம் பற்றி ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதித் திட்டப்பணிப்பாளர் வி.மோகன் கருத்துரை வழங்குவார்.

ஆர்வலர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு இந்த நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(க)

## மின்சாரக் கேபிள்களில் உரசும் மரங்கள் வெட்டப்படுகின்றன

யாழ்ப்பாணம் , ஜூலை 1

நீர்வேலி, கோப்பாய் பிரதேசங்களில் மின்சார இணைப்புக் கேபிள்களுக்கு இடைஞ்சலாகக் காணப்படும் மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரதேசங்களில் அதிகளவிலான மரங்களின் கிளைகள் மின்சார இணைப்புக் கேபிள்களைத் தொட்ட வண்ணமுள்ளன.

இதனால் காற்றுப் பலமாக வீசும்போது அந்தக் கிளைகள் மின்சாரக் கேபிள்களில் மோதுவதால் மின் விநியோகம் தடைப்படுகின்றது.

இதனையடுத்து மின்சாரக் கேபிள்களுக்கு அருகில் உள்ள மரங்கள், அவற்றின் கிளைகள் என்பன வெட்டப்பட்டு வருகின்றன.

(50-224)

## ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் நிறுவனத்தின் 23ஆவது ஆண்டு நிறைவுவிழா இன்று

கொழும்புத்துறை, ஜூலை 1

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 23ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

சுண்டிக்குளியில் உள்ள ஜெய்ப்பூர் நிறுவன கேட்போர் கூடத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு ஜெய்ப்பூர் நிறுவன நிர்வாகச் செயலாளர் என்.சிவானந்தன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராகச் செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவின் வதிவிடப் பிரதிநிதி புளோறன்ஸ் கிலெற் அம்மையாரும், சிறப்பு விருந்தினராக செயற்கை அவயவ பாவனையாளர் சங்கத்தைச் சேர்ந்த கமலா சிவசிதம்பரமும் கலந்துகொள்வர்.

வரவேற்புரையை நிறுவனத் தலைவி டாக்டர் திருமதி ஜே.கணேசமூர்த்தியும், சிறப்புரைகளை பகுதி முகாமையாளர்களான எல்.எம்.யோண்சன், மி.மகேந்திரகுமார், செயற்கை அவயவ பாவனையாளர் எஸ்.தங்கராசா ஆகியோர் வழங்கவுள்ளனர்.

ஜெய்ப்பூர் நிறுவனத்தின் 23ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ். மாவட்ட ரீதியில் பாடசாலை, திறந்த மட்டங்களில் நடைபெற்ற கவிதை, கட்டுரை, சுவரொட்டிப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

வலுவிழந்த பயனாளிகளுக்கான மூன்று சில்லுச் சைக்கிள்கள், சக்கர நாற்காலிகள் மற்றும் உதவிப் பொருள்கள் என்பனவும் வழங்கப்படவுள்ளதாக நிர்வாகத்தினர் தெவித்துள்ளனர்.

(50-135)

## தனியார் வைத்தியசாலைகளை பதிவு செய்யுமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். மாவட்டத்தில் வைத்தியத்துறையுடன் தொடர்புடைய தனியார் சேவைகள் அனைத்தும் இலங்கை தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்கமைப்புச் சபையின் வருடாந்த அனுமதிப்பத்திரத்தினைப் பெற வேண்டும்.

இவ்வாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் அனைத்து முழுநேர, பகுதிநேர தனியார் வைத்தியசாலைகள், சிகிச்சை நிலையங்கள், மருத்துவ ஆலோசனை நிலையங்கள் , மருத்துவ ஆய்வு கூடங்கள், அம்புலன்ஸ் சேவைகள் யாவும் இவ்வாறு அனுமதிப் பத்திரத்தைப் பெறவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தை இதுவரை பெறாதவர்கள் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் படிவத்தைப் பெற்று விண்ணப்பித்து அனுமதியைப் பெறமுடியும்.

வருடாந்த அனுமதிப்பத்திரம் இல்லாமல் தகுதியற்ற முறையில் இயங்கும் தனியார் வைத்திய நிலையங்கள் மீது பொது மக்களின் பாதுகாப்புக் கருதி சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(50-14)

## கல்வி அமைச்சர் பந்துல 4ஆம் திகதி யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம் , ஜூலை 1

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன எதிர்வரும் நான்காம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

வடபகுதியின் கல்வித்துறைச் செயற்பாடுகளை நேரில் அறிந்து கொள்வதே கல்வி அமைச்சரின் இந்த விஜயத்துக்கான நோக்கம் என்று கூறப்பட்டது.

இதேவேளை யாழ்.மாவட்ட செயலகத்தில் அன்றைய தினம் இடம்பெறவுள்ள கலந்துரையாடலிலும் கல்வி அமைச்சர் கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ். அரச அதிபர் தலைமையில் இடம் பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட கல்வி வலயங்களின் பணிப்பாளர்கள் மற்றும் கல்வித்துறை சார்ந்தவர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர் எனத் தெரியவருகிறது.

(50-14)



பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவுக்கு விஜயம் செய்த போக்குவரத்து பிரதி அமைச்சர் நுவான் திசநாயக்காவை டிப்போ முகாமையாளர் எஸ்.குலபால செல்வம் கைலாகு கொடுத்து வரவேற்பதை முதலாவது படத்திலும் பிரதி அமைச்சர் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் இ.போ.ச. வடபிராந்திய முகாமையாளர் கே.கணேசபிள்ளை, இளைப்பாறிய அதிபர் மு.ஸ்ரீபதி ஆகியோர் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்திலும் கலந்துகொண்ட ஊழியர்களில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்: கர்ணன்)

# வலுவிழந்தோரின் வாழ்வில் 23 வருடங்களாக ஒளியூட்டும் உன்னத சேவையில் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம்

**யாழ்.**-ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் தனது 23 வருட சேவைக்காலத்தை இன்று (01.07.2010) வெற்றிகரமாக நிறைவு செய்து 24 ஆவது வருடத்தில் தடம்பதிக்கிறது.

ஆயிரம் முட்டைகள் இட்டாலும் ஆமை அமைதியாகவே இருக்கும் எனக் கூறுவதுண்டு. அது போலவே இந்த நிறுவனம் தனது சேவை குறித்து பிரபல்யப்படுத்துவதை விட தனது நோக்கை வெற்றிகரமாக முன்னெடுத்து சேவை செய்வதிலேயே ஆர்வம் காட்டி வருகிறது. தனது சேவையை வழங்கவெனக் கிடைக்கும் நிதி சம்பந்தப்பட்ட மக்களுக்கு பயனளிப்பதாக செலவிடப்பட வேண்டும் என்பதில் இந் நிறுவனம் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. தமது சேவை குறித்து விளம்பரப்படுத்திக்கொள்ள சிறுதொகைநிதிகூட இந் நிறுவனத்தால் ஒதுக்கப்படுவதில்லை.

மக்களின் தேவையை உணர்ந்து காலத்தின் தேவையால் உருப்பெற்ற இந்த நிறுவனம் இதுவரை காலமும் சமூகத்தில் உடல் வலுவிழந்த தரப்பினருக்கு வழங்கிவந்த சேவைகள் அளப்பரியது.

உடல் அவயவங்களை இழந்தவர்களதும், அவை செயலிழந்து இயங்க இயலாத நிலையில் உள்ளவர்களதும் வாழ்வில் ஒளியேற்றி அவர்களும் சமூகத்தில் சுயமாக இயங்கி, மற்றவர்களைப் போன்று வாழத்தக்க விதத்தில் உதவிடும் உன்னத சேவையை இந்த நிறுவனம் வழங்கி வருகிறது.

இந்த நிறுவனம் யாழ்.அன்னையர் முன்னணியினதும் கொழும்பு நட்புறவுக் கழகத்தினதும் மற்றும் நோராட் (NORAD) அமைப்பினதும் கூட்டு முயற்சியால் 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி யாழ்.ஜெய்ப்பூர் என்ற பெயருடன் உருவாக்கம் பெற்றது.



இந்த நிறுவனம் உருவாக்கம் பெறுவதற்கு முன்னர் உடல் அவயவங்களை இழந்தவர்களின் நிலைமை என்னவாக இருக்கும் என நினைக்கிறீர்கள்.

1987 ஆம் ஆண்டு இந் நிறுவனம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் உடல் அவயவங்கள் இழந்தவர்களுக்கு செயற்கை உறுப்புகள் மேலைத்தேச உதவியுடன் செயற்படுவதில் பல அசௌகரியங்களை எதிர்நோக்க நேர்ந்தது.

அதாவது, மேலை நாட்டவரது உடல் உறுப்புக்களின் பருமன் அளவுக்கு ஏற்ற விதமாகத் தயாரிக்கப்பட்ட அச்செயற்கை அவயவங்கள் மூன்றாம் உலக நாட்டு மக்களுக்கு ஏற்றதாக அமையாமையே அதற்கான காரணமாகும்.

இந்தநிலையில் இந்தியாவின் அறுவைச் சிகிச்சை நிபுணர் பேராசிரியர் ''விரமொட்கரன் செத்யால்'' என்பவரின் முயற்சியால் உருவான செயற்கை அவயவங்கள் உருவாக்கம் கீழ்த்திசை நாடுகளின் மக்களுக்கு பொருத்தமானவையாக அமைந்தன. அதாவது அவரது செயற்கை அவயவ உருவாக்கம், குறிப்பாக செயற்கைக் கால்பொருத்தும் முறைமை ஜெய்ப்பூர் பாதம் என்ற பெயரில் பிரபல்யமடைந்தது, இந்தியாவின் ஜெய்ப்பூர் சவாய் மான் சிங் மருத்துவமனையில் அவ்வேளையில் கடமைபுரிந்த அந்த வைத்திய நிபுணரால் அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாகவே 'ஜெய்ப்பூர் பாதம்' என குறியீட்டுப் பெயர் நிலைத்தது. இந்தப் பாதம் ஒரு வகை இறப்பரினால் உற்பத்தி செய்யப்படுவதாகும்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வாழும் மக்களின் இழந்த அவயவங்களுக்கு மாற்றீடாகப் பொருத்த பொருத்தமானதாக அது அமைந்தது.

இதனைத் தொடர்ந்தே இலங்கையிலும் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பொருத்தும் திட்டத்தை மேற்கொள்வது சாத்தியமானது என பரீட்சார்த்த முயற்சிகளின் வெற்றிமூலம் உறுதிப்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் இந்தத் திட்டம் கொழும்பு தேவைக்குதவும் நண்பர்கள் என்ற அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்டது.


வீதி விபத்து ஒன்றில் சிக்கிக் காலை இழந்த இளைஞர் ஒருவருக்கு 1985 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதன் முறையாக இலங்கையில் தயாரிக்கப்பட்ட செயற்கை உறுப்பு பொருத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதனையடுத்து 1987 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணத்தில் ஜெய்ப்பூர் செயற்கை அவயவ உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த பல வருடங்களாக யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி தரமான செயற்கை அவயவங்களையும் குறைபாட்டு நிவர்த்தி உறுப்புக்களையும், நடமாடஉதவும் உபகரணங்களையும் உற்பத்தி செய்து வருகிறது. இவை மட்டுமன்றி வினைத்திறனான முறையில் இயன் மருத்துவ சேவையையும் மாற்று வலுவுள்ளோருக்கு வழங்கி வருகிறது.

செயற்கை அவயவ குறைபாட்டு நிவர்த்தி உறுப்பு உற்பத்தி செய்யும் பிரிவு வெளிநாடுகளில் பயிற்சி பெற்ற தொழில் நுட்பவியலாளர்களைக் கொண்டியங்குகிறது.

இந்தப் பகுதியில் பணியாற்றுவோர் உயர்தரம் பிரமாணங்களுக்கு ஏற்பவே தயாரிக்கப்படுகின்றன. அதற்காக முதலில் குறித்த மாற்று வலுவுள்ளவர் பல்வேறு பரிசோதனைகள், பயிற்சிகள், தயார் படுத்தல்களுக்கு உட்படுத்தப்படுவர். இதற்குரிய ஏற்பாடுகள் இந்த நிறுவன வளாகத்துக்குள்ளேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. உதாரணமாக செயற்கைக் கால் பொருத்தப்பட்டிருப்பின் அந்த நபர் எவ்வாறு நடக்கிறார், கற்கள் இருக்கும் இடங்களில், மணல்



பாங்கான இடங்களில், மற்றும் நீர்ப்பிடிப்புள்ள தரை போன்ற இடங்களில் எவ்வாறு நடக்கிறார் என அவதானிக்கப்பட்டதன் பின்னரே குறிப்பிட்ட அந்த வலுக்குறைந்த நபரின் திருப்தியான சம்மதத்துடனேயே அவருக்கு குறிப்பிட்ட அந்தச் செயற்கை உறுப்பு பொருத்தமுடையதென முடிவு செய்யப்படும்.

1987 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மிகக் குறைந்தளவு மூலப்பொருள்களுடன் அலுமினியத்தால் ஆன அவயவங்களைப் பொருத்தும் எமது பணி ஆரம்பிக்கப்பட்டு, இன்று மேலைத்தேய நவீன தொழில்நுட்பத்தை உட்புகுத்தி செயற்கை அவயவம் குறைபாட்டு நிவர்த்தி உறுப்புகளை உற்பத்தி செய்வதுடன் தேவையான மூலப் பொருள்களில் சிலவற்றை இங்கு உற்பத்தி செய்யும் அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளமை குறித்து நான் பெருமையடைகிறோம்; திருப்தியடைகிறோம் என இந்தப் பகுதிக்குரிய பகுதி முகாமையாளர் எல்.எம்.ஜோன்சன் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

அடுத்து நடமாட உதவும் உபகரணங்களை உற்பத்தி செய்யும் பகுதி சர்வதேச தரத்திலான தொழில் நுட்பத்துடன் கூடிய உபகரணங்களை உற்பத்தி செய்வதனை அவதானிக்க முடிந்தது. குறிப்பாக தமிழ் நாட்டு முதலமைச்சர் மு.கருணாநிதி பயன்படுத்தும்

- உமா -

## அதன் சேவை இன்றைய காலத்தின் தேவை

நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டே பொருத்தப்பட்டு வந்தன். அதற்காக பெருந்தொகைப் பணம் செலவானதுடன், அக்காலகட்டத்தில் அவற்றை வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்வதில்

**யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, இல.05, பழைய பூங்கா வீதியிலுள்ள யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் இன்று (01.07.2010) வியாழக்கிழமையுடன் தனது 23 வருட சேவையைப் பூர்த்தி செய்கின்றது.**

**அதனையொட்டி இந்த ஆக்கம் இங்கு பிரசுரமாகிறது.**

காலதாமதமும் ஏற்பட்டு வந்தது.

வசதிபடைத்த ஒரு சிலரைத் தவிர அவயவங்களை இழந்தவர்களில் அனேகமானோர், தமது இயலாமையுடன் வீடுகளுக்குள் முடங்கி கிடக்கவேண்டிய பரிதாப நிலையே நிலவியது. அவர்களால் வாழ்வாதார தொழில் முயற்சிகள் எவற்றிலும் ஈடுபட முடியாது போயிற்று.

பெரும் பணச் செலவுடன் செயற்கை உறுப்புக்களை இறக்குமதி செய்து பொருத்திக் கொண்டவர்களும் அச் செயற்கை உறுப்புக்களின் வாய்ந்த செயற்கை அவயவங்களையும் சார்புறுப்புக்களையும் 'பொலிப்பு எறாப்பைலின்' தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கி வருகின்றனர்.

இதில் முழங்கைக்கு மேலான செயற்கைக்கரம், முழங்கைக்கு கீழான செயற்கைக் கரம், முழங்காலுக்கு மேலான மற்றும் கீழான செயற்கைக்கால், விசேட செயற்கைக்கால், பகுதிப்பாதம் போன்ற பலதரப்பட்ட செயற்கை உறுப்புக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இதேபோல் குறைபாட்டு நிவர்த்தி ஆதார உறுப்புகளான, கழுத்துப்பட்டி, முள்ளந்தண்டு ஆதாரம், இடுப்பு ஆதாரப்பட்டி, கைக்கான ஆதாரம், விசேட பாதணி, முழங்காலுக்கான ஆதாரம், முழங்காலுக்கு மேல் மற்றும் கீழான ஆதாரம் என்பனவும் அவ்வித உற்பத்திப் பொருள்களில் அடங்குகின்றன.

குறிப்பாக இவை, போலியோ நோய் வாய்ப்பட்டதன் காரணமாக சிறு வயதிலிருந்தே இயங்க மறுக்கும் உடல் உறுப்புகளுக்கு ஆதாரமாகப் பயன்படுத்தக் கூடியவை. நீரிழிவு நோயாளர்களுக்கு எனவும் விசேட காலணி வகையும் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்த உறுப்புக்கள் யாவும் தேவைப்படும் மாற்றுவலுவுள்ளோரின் உடல் அவயவங்களுக்குப் பொருந்தக் கூடியவகையில், தேவைப்படும் அளவுப் நவீன தொழில் நுட்பத்திறனுக்கு ஒத்ததான மின்கல சக்தியில் இயங்கும் சக்கர இருக்கை இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. முன்புறமாகவும் பின்புறமாகவும் பயணிக்கக் கூடியதான வடிவமைப்புக் கொண்டது இது. தான் செல்ல வேண்டிய திசைக்கு இதனை செலுத்துவதற்கு என இலகு பொறிமுறையிலான கைபிடி, வேகத்தைக் கூட்ட, கட்டுப்படுத்தவென உபகரணங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இது மட்டுமன்றி வியக்க வைக்கும் வகையிலான நவீன தொழில் நுட்பத்திறன் கொண்ட உற்பத்திச் சாதனங்கள் இன்னும் பல இங்கு உள்ளன.

முச்சக்கர வண்டி, சக்கர இருக்கை, முச்சக்கர இருக்கை, கொமோட் சக்கர இருக்கை, விசேட சக்கர இருக்கை, ஆதார இருக்கை, வோல்ட்மேட் ஆதார இருக்கை, நடைதாங்கி, பார்வையற்றோருக்கான ஒலியுணர்த்தி நடைதாங்கி, கொமோட் சக்கர இருக்கை உள்ளிட்ட பலரக உபகரணங்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

இவற்றுடன் மின்கல சக்தியில் இயங்கும் முச்சக்கரவண்டி, பெற்றோலில் இயங்கும் முச்சக்கர வண்டி, மற்றும் தோள் மூட்டு ஊன்றுகோல்கள், முழங்கை ஊன்றுகோல்கள்,கை ஊன்றுகோல்கள், நடை உதவு கருவி, வெள்ளைப் பிரம்பு என்பனவும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. (18 ஆம் பக்கம் பார்க்க....)

# மட்டு.கெவிலியா மடுவில் குடியிருந்த சிங்களக் குடும்பங்களே மீள்குடியேற்றம்

## அமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 1

''மட்டக்களப்பு கெவிலியாமடு பிரதேசத்தில் இரண்டு சிங்களக் குடும்பங்களே மேலதிகமாகக் குடியமர்த்தப்பட்டுள்ளன. முன்னர் 51 சிங்களக் குடும்பங்கள் அங்கு வசித்தன.

''யுத்தத்தின் பின்னர் இவர்கள் அங்கு மீள்குடியமர்த்தப்பட்டனர்''

-இவ்வாறு மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் நேற்று முன்தினம் காலை மீள்குடியேற்ற அமைச்சின் கேட்போர் கூட்டத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசுகையில் தெரிவித்தார்.

யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் 51 குடும்பங்கள் அங்கு வாழ்ந்து வந்தன. யுத்தம் ஆரம்பமானவுடன் இக்குடும்பங்கள் கெவிலியாமடுவை விட்டு வெளியேறின. யுத்தம் முடிவடைந்த பின்னர் 53 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளன. இதன்படி இரண்டு குடும்பங்களே இங்கு மேலதிகமாக குடியமர்த்தப்பட்டுள்ளன என்றும்அவர் குறிப்பிட்டார். (ளி)

# புல்மோட்டைக் கடலில் காணமல் போன மீனவர்கள் குறித்து எவ்வித தகவலும் இல்லை

கொழும்பு, ஜூலை 1

புல்மோட்டைப் பகுதியிலிருந்து மீன் பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்றபோது, காணாமற்போன மீனவர்கள் தொடர்பாக இதுவரை எவ்விதத் தகவல்களும் கிடைக்கவில்லையென உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

காணாமல் போயுள்ள மூவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிலாபப் பகுதியைச் சேர்ந்த இம்மூவரும் கடந்த 22ஆம் திகதி புல்மோட்டையிலிருந்து மீன்பிடி நடவடிக்கைகளுக் காக கடலுக்குச் சென்றபோதே, காணாமல் போயுள்ளனர் என உறவினர்கள் குறிப்பிட்டனர் .

.இதேவேளை, காணாமற்போன இம் மீனவர்கள் தொடர்பாக கடற்படையினருக்கும், இந்திய கடலோர பாதுகாப்பு பிரிவினருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. - என்று கடற்றொழில் அமைச்சு கூறியது. (ளி)

# தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைச்சர் டக்ளஸுடன் திங்களன்று சந்திப்பு

மட்டக்களப்பு, ஜூலை 1

மட்டக்களப்பில் செயற்படும் ஆறு தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் கந்த திங்கட்கிழமை பாரம்பரிய கைத்தொழில்கள், சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து தமது கோரிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடினர்.

பாரம்பரிய கைத்தொழில்கள், சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

மட்டக்களப்பு, வாழைச்சேனை, ஏறாவூர் மொறக்கொட்டாஞ்சேனை, மாங்காடு, சீனித்தம்பி ஆகிய ஆறு தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

தலைவர் எஸ்.சொலமன், செயலாளர் ரீ.துரைராஜா, பொருளாளர் க.பிரேமச்சந்திரன் ஆகியோரும் இக்குழுவில் பங்கு பற்றியிருந்தனர். அத்துடன், மட்டக்களப்பில் இயங்கும் சங்கங்கள் எதிர்நோக்கும் தேவைகள், கோரிக்கைகளையும் தெரியப்படுத்தினார்கள்.

குறிப்பாக சங்க உறுப்பினர்கள் தமது உழைப்பிற்கேற்ற பயனை பெற்றுக்கொள்ளும் முகமாக உரிய ஊதியத்தை வழங்கும் வகையில் மட்டக்களப்பு தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச்சங்கங்களே கள்ளுத் தவறணையை வருடாந்த குத்தகைக்குப் பெற்று நடத்த அனுமதி பெற்றுத்தருமாறும் குழுவினர் கோரிக்கை விடுத்தனர்.

மேற்படி கோரிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் தொடர்புகொண்டு உரிய தீர்வை பெற்றுத்தருவதாக உறுதியளித்தார்.

இச்சந்திப்பின்போது, பனை அபிவிருத்தி சபைத்தலைவர் பசுபதி சீவரட்ணமும் பங்குகொண்டமை குறிப்பிடத் தக்கது. (ளி)




# மாளிகைக்காடு வீதி செப்பனிடும் பணி ஆரம்பம்

அம்பாறை, ஜூலை 1

மாளிகைக்காடு வீதியைச் செப்பனிடும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவையும், காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவையும் பிரிக்கும் எல்லை வீதியான மாளிகைக்காடு வீதி மிக நீண்டகாலமாக செப்பனிடப்படவில்லை. இந்தவீதி பயணம் செய்ய முடியாதளவிற்கு குன்றும், குழியுமாகக் காணப்பட்டது. இதனையடுத்து ஊடகங்கள் பலமுறை சுட்டிக்காட்டியதையடுத்து இவ் வீதியை செப்பனிடும்பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் நிருவகிக்கப்படும் சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளமான மாளிகா வீதி சீரின்மையால் வாகனங்கள் பாதிப்படைந்தன, பாதசாரிகளும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர்.

வைத்தியசாலை, பாடசாலைகள், மதஸ்தலங்கள், சுகாதார நிலையம், தபால் அலுவலகம் ஆகியவற்றிக்கு இவ்வீதியால் தினசரி நூற்றுக்கணக்கானோர் பயணிக்கின்றனர். மழை பெய்யும் காலங்களில் நீர் நிறைந்து குளம் போன்று காட்சியளிக்கும் இவ் வீதியால் செல்வோர் பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இவ்வீதியைச் செப்பனிடுமாறு செய்தி வெளியிட்ட ஊடக நிறுவனங்களுக்கும் திருத்த முன்வந்த வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் பாதசாரிகளும், வாகன மோட்டிகளும் நன்றி தெரிவிக்கின்றனர். (ளி)

## கண்டியில் புத்தகக் கண்காட்சி

கண்டி, ஜூலை 1

2010 - கண்டி மாபெரும் புத்தகக் கண்காட்சி ஜூலை முதலாம்திகதி முதல் நான்காம் திகதிவரை கண்டி 'சிற்றி சென்ரர்' மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்புத்தகக் கண்காட்சியையும், விற்பனையையும் இலங்கை புத்தக வெளியீட்டாளர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இதன்போது பெறுமதிவாய்ந்த அரிய பல புத்தகங்கள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. இச்சந்தர்ப்பத்தை புத்தக ஆர்வலர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. (ளி)

# கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து விலகப்போவதில்லை: மலையக மக்கள் முன்னணித் தலைவி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகப் போவதில்லை என மலையக மக்கள் முன்னணியின் தலைவி சாந்தினி சந்திரசேகரன் அறிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி முதலாம் திகதி கட்சியின் தலைவர் பெ.சந்திரசேகரன் திடீரென உயிரிழந்ததைத் தொடர்ந்து கட்சிப் பொறுப்பை அவரது மனைவி சாந்தினி தேவி ஏற்றுக் கொண்டார்.

இதையடுத்து நடைபெற்ற தேர்தல்களில் மலையக மக்கள் முன்னணி அரசுடன் இணைந்தும், தனித்தும் போட்டியிட்டது. எனினும் தோல்வியையே சந்திக்க நேர்ந்தது.

அமைச்சர் சந்திரசேகரனின் மறைவுக்குப் பின்னர் கட்சிக்கு சரியான தலைமைத்துவம் அமையவில்லை என விமர்சனங்கள் எழுந்தன.

இந்த நிலையில் கட்சியின் தலைமைப் பொறுப்பிற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி இராதாகிருஷ்ணன் நியமிக்கப்படலாம் என கடந்த வாரம் தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், இந்தத் தகவல்களில் உண்மையில்லை என சாந்தினி சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

தமது கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்க ளால் இராதாகிருஷ்ணனுடன் நட்பு ரீதியில் பேச்சுகள் நடத்தப்பட்டனவே தவிர கட்சியின் தலைமைப்பதவியை வழங்குவது குறித்து பேச்சுகள் நடத்தப்படவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மலையக மக்கள் முன்னணியின் தலைமைப் பொறுப்பிலி ருந்து தாம் விலகுவார் என ஒருபோதும் அறிவிக்கவில்லை - என்றும் சாந்தினிதேவி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ளி)

# வெல்லவாயவில் வாகன விபத்து குடும்பஸ்தர் பலி: ஒருவர் கவலைக்கிடம்

கொழும்பு, ஜூலை 1

வெல்லாவாய பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன வித்தில் ஒருவர் உயிரிழந்தார்.

வீதியில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று பஸ்ஸுடன் மோதுண்டதால் பலத்த காயத்துக்குள்ளான இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் ஒருவர் சிகிச்சை பலளிக்காமல் உயிரிழந்தார் என வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.

சியம்பலாகுணே கிவுலகம வாசியான 26 வயதுடைய குடும்பஸ்தரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார்.

மற்றவர் கவலைக்கிடமான நிலையில் மொனராகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை மாலை 4 மணியளவில் எல்ல- வெல்லவாய வீதியில் ஹீனபகுவ 3 ஆம் கட்டையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்துடன் சம்பந்தப்பட்ட பஸ் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெல்லவாய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச்.எம். சிறிபாலவின் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ளி)

# தாய்-மகள் இருவர் மீதும் வல்லுறவு காட்டில் பதுங்கியிருந்த சந்தேகநபர் கைது

கொழும்பு, ஜூலை 1

மெதிவியவில் தாயையும், மகளையும் வல்லுறவுக்கு உட்படுத்திவிட்டு தலைமறைவான நபரொருவர் கடந்த புதன்கிழமை சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என ஹங்வெல்ல பொலிஸார் தெரிவித்தனர்.




தும்மோதர, இலுக்ஓவிட்ட பிரதேசவாசியான இந்த நபர் சம்பவம் நடந்து மூன்று நாள்களின் பின்னர் காடொன்றில் மறைந்திருந்த சமயம் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைதுசெய்ய எத்தனித்தபோது சந்தேக நபர் கைக்குண்டொன்றை பொலிஸார் மீது வீசினார் என்றும், அதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதன் பின்னர் கூரிய ஆயுதமொன்றால் சந்தேகநபர் தனது உடலைக் கீறிக் காயப்படுத்திக் கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இவர் சிகிச்சைக்காக அவிசாவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஹங்வெல்ல பொலிஸ் பொறுப்பதிகாரி ரேணுக கமகேயின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ளி)

# மொலகொடையில் - உமி அடுப்பு: மட்பாண்ட உற்பத்திகளுக்கு மௌசு

கண்டி , ஜூலை 1

கண்டி- கொழும்பு வீதியிலுள்ள மொலகொடை கிராமத்தில் உற்பத்தியாகும் மட்பாண்டப் பொருள்களுக்கு நல்ல மௌசு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக இங்கு உற்பத்தி செய்யப்படும் உமி அடுப்புகளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

பிரஸ்தாப வீதியால் பயணம் செய்யும் பலரும் மொலகொடை கிராமத்தின் மட்பாண்ட உற்பத்திகளை அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர்.

இதனால் மட்பாண்ட உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இக்கிராமத்தவர்கள் பலரும் நல்ல வருமானம் பெற்று வருகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள்களுக்கான விலை அதிகரிப்பையடுத்து இங்கு உற்பத்தியாகும் மண் உமி அடுப்புக்களுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ளி)

# கே.பி. ஊடாக புலம்பெயர் தமிழர்களின் பலத்தைச் சிதறடிக்க இலங்கை அரசு சதி

## கோத்தபாயவைச் சந்தித்து பிரிட்டன் திரும்பிய மருத்துவர் அருட்குமார் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

கே.பி. மூலமாக புலம்பெயர் மக்களை பிளவுபடுத்தி - சின்னாபின்னப்படுத்தி அவர்களை தம்மிடம் மண்டியிட வைப்பதே இலங்கை அரசின் நோக்கம் - என்று அண்மையில் கே.பியுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்து, பிரிட்டன் திரும்பியுள்ள மருத்துவர் வேலாயுதபிள்ளை அருட்குமார் தெரிவித்துள்ளார்.

கே.பியை இலங்கைப் படைத்துறைப் புலானாய்வாளர்களே இயக்கி வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இணையம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இந்த விடயங்களை அம்பலப்படுத்தியுள்ளார்.

கே.பியின் ஏற்பாட்டில் கடந்த 15ஆம் திகதி 6 புலம்பெயர் நாடுகளிலிருந்து 9 பேர் கொழும்பு சென்றிருந்தனர். இவர்கள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, படைப் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளராக இருக்கும் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவித்தாரண, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரைச் சந்தித்திருந்தனர்.

கோத்தபாயவுடனான சந்திப்பின்போது அவர் உள்ளே வந்தபொழுது கே.பி. அவரைக் கட்டித்தழுவ முற்பட்டார் எனவும், அவரது இந்த நடவடிக்கை தமக்கு சங்கடத்தை ஏற்படுத்தியதாகவும் மருத்துவர் அருட்குமார் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தடுத்து வைக்கப்பட்ட பிரிவு - 4 முகாமைப் பார்வையிட அனுமதி மறுத்த படையினர், பிரிவு - 2 முகாமிற்கு தம்மை அழைத்துச் சென்றனர் எனவும், அங்கும் படைப்புலனாய்வாளர்களால் ஒழுங்கு செய்யப்பட்டவர்களே முன்னாள் போராளிகள் போன்று தம்மைச் சந்திக்க முற்பட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.

தம்முடன் உரையாடிய கோத்தபாய, வரலாற்றைப் பற்றி யாரும் பேசக்கூடாது எனவும், அரசு செய்யும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு மட்டும் நல்க வேண்டும் என அடிமை போன்று நடத்த முற்பட்டார் எனவும், புலம்பெயர் மக்களின் பணத்தைப் பெற்றுக் கொள்வதிலேயே குறியாக இருந்தார் எனவும் அருட்குமார் தெரிவித்தார்.

புலம்பெயர் மக்களை கே.பி. ஊடாக உள்வாங்க முனைவது அல்லது புலம்பெயர் தமிழ் மக்களை பிரிவுகளாக உடைத்து சின்னா பின்னமாக்கி மண்டியிட வைப்பது என்பதில் இலங்கை அரசும், படைப் புலனாய்வாளர்களும் திட்டமிட்டிருப்பதை தமது சந்திப்புகளில் உணர முடிந்தது என்றும் மருத்துவர் அருட்குமார் தெரிவித்துள்ளார். கே.பியை 2006ஆம் ஆண்டே தான் சந்தித்திருக்கிறார் என கோத்தபாய ராஜபக்ஷ கூறியிருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இலங்கையின் வளங்களை இந்தியா சுரண்டுவதாக இந்தச் சந்திப்புக்களில் குற்றம் சுமத்தியுள்ள இலங்கை அரச தரப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ் அரசியல் தலைவர்களை கடுமையாகச் சாடிப் பேசினர் எனவும், தமிழர் புனர்வாழ்வு மையம் (ரி.ஆர்.சி.) என்ற பெயரில் அமைப்பை உருவாக்கி, அதனூடாக புலம்பெயர் மக்களின் நிதியைப் பெற்றுக்கொள்ளவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அருட்குமார் கூறினார். (சி)

## தொழிற்பயிற்சியை நிறைவு செய்த 58 சிறுவர் போராளிகளுக்குச் சான்றிதழ்

கொழும்பு, ஜூலை 1

வேலைவாய்ப்புக்கான தொழிற்பயிற்சியை முடித்துக் கொண்ட 58 முன்னாள் சிறுவர் போராளிகளுக்கு மட்டக்களப்பு சர்வோதய நிலையத்தில் நடைபெற்ற வைபவத்தின் போது சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கினார்.

சர்வோதய நிலையப் புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லையும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நிலைய வளவில் நட்டு வைத்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மக்களின் வாழ்வாதாரத்துக்குப் பசுக்கள் வழங்கும் திட்டமும் அங்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வைபவத்தில் மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், பிரதி அமைச்சர் ஏ.எல்.எம். ஹிஸ்புல்லாஹ், கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (சி)

## பாப்பரசருக்கு தமிழ் அரசியல் கைதிகள் கடிதம்

# சிறையில் கண்ணீருடன் வாடுகின்றோம்; எமது விடுதலைக்கு ஆவன செய்யுங்கள்!

கொழும்பு, ஜூலை 1

சிறைச்சாலைகளில் நீண்டகாலமாக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள், தமது விடுதலைக்கு ஆவன செய்ய வேண்டும் - என்று கோரி புனித பாப்பரசருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையிலுள்ள அனைத்துச் சிறைகளிலும் நீண்டகாலமாக பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளான எங்களின் பொதுமன்னிப்பு அல்லது பிணையில் விடுதலை தொடர்பாக இலங்கை ஜனாதிபதியிடம் பரிந்துரை செய்யுங்கள்.

நாம் பல வருடங்களாக எமது உறவுகளைப் பிரிந்து சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகிறோம். சிறைக் கூண்டினுள் சுதந்திரமற்ற பறவைகள்போல் எப்போது விடுதலை கிடைக்கும் என கண்ணீருடன் தவித்து நிற்கிறோம்.

முப்பது வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற யுத்தம் நிறைவடைந்து ஒரு வருடம் பூர்த்தியாகியும் இன்னும் எமது நிலை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

குறிப்பாக இலங்கையின் புதிய மகஸின் சிறைச்சாலை, கொழும்பு விளக்கமறியல் சாலை, அனுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம், நீர்கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, பதுளை, கொழும்பு வெலிக்கடை ஆகிய இடங்களிலுள்ள சிறைச்சாலைகள் ஆகியவற்றில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் பல நூற்றுக்கணக்கானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம்.

இதில் தாய்மார்கள், அங்கவீனர்கள், முதியவர்கள், இளைஞர்கள், யுவதிகள் எனப் பலதரப்பட்டோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம்.

அனைத்து மக்களும் எமது நாட்டில் சம உரிமையுடன் ஒற்றுமையாகவும், நிம்மதியாகவும் வாழ வேண்டும் என்பதே எமது மேலான விருப்பம். கடந்த காலங்களில் ஜனாதிபதி உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல கடிதங்களை அனுப்பி எமது நிலைப்பாட்டைத் தெரியப்படுத்தியும் இதுவரை பதிலேதும் கிடைக்கவில்லை.

நாங்கள் அனைவரும் உங்கள் மீதும் உங்கள் திருச்சபை மீதும் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளோம். கடந்தகாலங்களில் எமது கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து பலதரப்பட்ட உதவிகளைச் செய்துள்ளீர்கள்.

இம்முறையும் நீங்கள் ஜனாதிபதியை நேரடியாகச் சந்தித்து எமது பொது மன்னிப்பு மற்றும் பிணை வழங்கல் தொடர்பாக நற் செய்தியை பெற்றுத் தருவீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

- இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# செம்மொழி மாநாட்டில் தமிழீழம் குறித்து தீர்மானம் நிறைவேற்றப்படாதமை ஏன்?

## விஜயகாந்த் கேள்வி

சென்னை, ஜூலை 1

தமிழீழத்தைப் பெற்றுத் தருவது குறித்து செம்மொழி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றாதமை ஏன் - என்று தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் தலைவர் விஜயகாந்த் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு உடனடியாக அரசியல் தீர்வு காண இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று செம்மொழி மாநாட்டுத் தீர்மானம் கூறுகிறது. ஆரம்பம் முதல் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தமிழீழம் ஒன்றுதான் தீர்வு என்று கலைஞர் வற்புறுத்தி வந்தவர்.

தமிழின வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு இனப்படுகொலை இலங்கையில் நடந்த பின்னர் இந்தக் கோரிக்கை இன்னும் வலுவடைந்துள்ளது.

இன்று இனப் படுகொலைக்கு ஆளான இலங்கைத் தமிழர்கள், தங்களுக்கென ஒரு தாயகத்தை ஏற்கனவே பெற்றுள்ளனர். அதை தக்க வைக்கும் வகையில் எதிர்காலத்தில் தமிழினப் பாதுகாப்பிற்கு அவர்கள் கோரும் தமிழ் ஈழத்தை பெற்றுத் தரவேண்டும் என்று ஏன் தீர்மானம் நிறைவேற்றவில்லை?

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ர)


மஹஜன சம்பத
Mahajana Sampatha

29.06.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2259

வெற்றி எழுத்து: M
வெற்றி எண்கள்: 2 0 6 9 2 5

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | M | 2 | 0 | 6 | 9 | 2 | 5 | ரூபா 20,353,906/= | |
| 1 பரிசு | | 2 | 0 | 6 | 9 | 2 | 5 | ரூபா 2,000,000/= | 01 |
| 2 பரிசு | | | 0 | 6 | 9 | 2 | 5 | ரூபா 100,000/= | 12 |
| 3 பரிசு | | | | 6 | 9 | 2 | 5 | ரூபா 10,000/= | 121 |
| 4 பரிசு | | | | | 9 | 2 | 5 | ரூபா 1,000/= | 1265 |
| 5 பரிசு | | | | | | 2 | 5 | ரூபா 100/= | 12528 |
| 6 பரிசு | | | | | | | 5 | ரூபா 20/= | 125077 |
| 7 பரிசு | | 2 | 0 | 6 | 9 | 2 | | ரூபா 10,000/= | 12 |
| 8 பரிசு | | 2 | 0 | 6 | 9 | | | ரூபா 1,000/= | 118 |
| 9 பரிசு | | 2 | 0 | 6 | | | | ரூபா 100/= | 1252 |
| 10 பரிசு | | 2 | 0 | | | | | ரூபா 50/= | 12516 |
| 11 பரிசு | M | | | | | | | ரூபா 20/= | 49274 |

Rs. 11,424,820.00

அடுத்த சீட்டிழுப்பிலான சுப்பர் பரிசு
Rs. 22,019,234.00

தேசிய லொத்தர் சபை


# ஜி.எஸ்.பி. சலுகை குறித்த நிபந்தனைகள் அழுத்தங்களால் விதிக்கப்பட்டவையல்ல!

## குற்றச்சாட்டுகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் மறுப்பு

கொழும்பு, ஜூலை 1

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை வழங்குவது தொடர்பான தீர்மானம், எந்தவிதமான அழுத்தங்களுக்கும் அடிபணிந்து எடுக்கப்பட்டதல்ல - என ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

வெளிச் சக்திகளின் அழுத்தங்கள் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்படவில்லை என 27 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தால் அண்மையில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு நிகரான நிபந்தனைகளே, ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான எதிர்க்கட்சிகளும் முன்வைத்துள்ளதெனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனினும், எவரது அழுத்தங்களினாலும் ஐரோப்பிய ஒன்றியம் இந்த நிபந்தனைகளை விதிக்கவில்லை என இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி பேர்னாட் செவாஜ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கு எதிரான ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானம் அரசியல் ரீதியான காரணங்களை அடிப்படையாகக் கொண்டதென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் சில ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே இலங்கை சலுகைத் திட்டத்தை வழங்குவது குறித்த சட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன எனவும் ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என இலங்கை அரசு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வயதெல்லைகூட பஸிலுக்குத் தெரியாது

## அனுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

அரசமைப்புக் குறித்து தனக்கு சிறந்த அறிவு காணப்படுகிறது எனக் காட்டிக் கொள்ள முயலும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வயதெல்லையைக் கூட அறிந்திருக்கவில்லை - என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

'அரசமைப்புத் திருத்தம் நாட்டுக்கா, குடும்பத்திற்காக' என்ற தலைப்பில் கொழும்பு பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாமல் ராஜபக்ஷவுக்கு முடி சூட்டுவதற்காகவே அவசர அவசரமாக அரசமைப்புத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது என தான் தெரிவித்த கருத்துக்குப் பதிலளித்திருந்த அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதியாகப் போட்டியிடும் ஒருவர் 35 வயதைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்ற அரசமைப்பு விதிமுறையை 30 வயதாகக் குறைத்தால் நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம்தானே எனத் தெரிவித்தார் எனவும் அனுரகுமார திஸாநாயக்க கூறியுள்ளார்.

30 வயதைப் பூர்த்தி செய்த எவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம் என அரசமைப்பின் 92 ஆவது சரத்தில் கூறப்பட்டுள்ளதை பஸில் ராஜபக்ஷ அறிந்திருக்கவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

பஸில் ராஜபக்ஷவை அரசியல் ரீதியாக புறந்தள்ளிவிட்டு, நாமல் ராஜபக்ஷவுக்கு மகுடம் சூட்டும் நோக்கிலேயே இந்த அவசர அரசமைப்புத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் அனுரகுமார தெரிவித்துள்ளார்.(சி)



# பணம் பாதகம் செய்யும்

ஓர் ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் அந்த ஊரில் இருந்த இளைஞர்கள் சிலரை ஒன்று சேர்த்து உபதேசம் செய்து கொண்டிருந்தார். அப்போது அவர் '' பணத்தை அற வழியிலேயே தேட வேண்டும். தகாத வழியில் சேர்க்கும் பணம் வந்த வழியில் சென்று விடும். அது மட்டுமன்றி,பணம் நண்பர்களைக் கூட விரோதிகளாக மாற்றும்'' என்று கூறினார்.

இளைஞர்களில் ஒருவன் எழுந்து, ''பெரியவரே! நீங்கள் விவரம் தெரியாமல் பேசாதீர்கள். இதோ பாருங்கள் இங்கே நாங்கள் நான்கு பேர் இருக்கிறோம். நாங்கள் நான்கு பேரும் இணைபிரியா நண்பர்கள். எந்தப் பணமும் எங்கள் நட்பை எதுவும் செய்து விட முடியாது'' என்று கூறி சவால் விட்டனர்.

அங்கிருந்த மற்றவர்களும் அந்த இளைஞனின் கருத்துக்கு ஆதரவாகத் தலையாட்டினார்கள். பெரியவர் ஒன்றும் பதில் பேசவில்லை. புன்னகை மட்டுமே புரிந்தார்.

அதன் பிறகு ஒருநாள்...

வழக்கம் போல் இந்த நான்கு நண்பர்களும் ஒரு மலையடிவாரத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். பக்கத்தில் ஒரு மலைக்குகை இருந்தது. அதில் ஒரு சாது அமர்ந்து தியானம் செய்து கொண்டிருந்தார். ஒரு சமயம் அவர் கண்ணைத்திறந்து பார்த்தார். அவ்வளவுதான்! அந்தக் குகையை விட்டு வெளியே ஓடி வந்தார்.

'' மரணம் என்னைத் துரத்துகிறது! மரணம் என்னைத் துரத்துகிறது!'' என்று சொல்லிக் கொண்டே வேகமாக ஓடினார்.

இளைஞர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. '' ஏன் இந்த சாது இப்படிக் கத்திக் கொண்டே ஓடி வருகிறார்?'' என்று நினைத்துக் கொண்டே, அந்த நான்கு இளைஞர்களும் குகைக்குள்ளே சென்று பார்த்தார்கள். அங்கே போய்ப் பார்த்தால்.... ஓர் ஆச்சரியம்! விலை மதிக்க முடியாத வைரங்கள், வைடூரியங்கள், முத்துக்கள், தங்கக்காசுகள் குவியல் குவியலாக கிடந்தன.

''இவ்வளவு பெரிய செல்வக் குவியல்களைப் பார்த்துவிட்டு, இவர் இப்படி அலறி அடித்துக் கொண்டு ஓடுகிறாரே!'' என்று எண்ணி இளைஞர்கள் சாதுவுக்காகப் பரிதாபப்பட்டார்கள். அந்நால்வரும் அங்கு கிடந்த நகைகளையும் வைரங்களையும் ஆசை, ஆசையாக கைகளில் அள்ளிப் பார்த்தனர்.

''சரி... இதை இப்படியே நான்கு பங்காகப் போட்டால் எவ்வளவு கிடைக்கும்?'' என்று ஒருவன் கேட்க ஆரம்பித்தான்.

'' நான்தான் இதை முதலில் பார்த்தேன்.அதனால் எனக்குக் கொஞ்சம் அதிகமாகக் கொடுப்பதுதான் முறை!'' என்று மற்றொருவன் கூறினான்.

''உன்க்கும் முன்னால் நான்தானே பார்த்தேன்!'' என்றான் இன்னொருவன்.

சிறிது நேரம் ஒருவரையொருவர் திட்டிக் கொண்டிருந்தனர். அதன் பிறகு ஆளுக்கு ஆள் அங்கே கிடந்த இரும்புக்கம்பிகளை எடுத்து அடிதடியில் இறங்கிவிட்டனர். அந்த அடிதடியில் ஒருவன் இறந்து போனான். இன்னொருவன் பலமான காயம்.

இறந்தவனைப் பார்த்ததும் மற்ற மூன்று பேரும் ஒரு சமரசத்துக்கு வந்தனர். ''சரி, நடந்தது நடந்து விட்டது. இனிமேல் நடக்க வேண்டியதைப் பற்றி யோசிப்போம். இவன் இறந்து போனது நம்மைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.எனவே இவனை இங்கே இரகசியமாக புதைத்துவிட்டு, நாம் மூவரும் இவற்றைப் பகிர்ந்து கொள்வோம் என்ற முடிவுக்கு வந்தனர்.

அதற்குள் அவர்களுக்குப் பசிக்க ஆரம்பித்துவிட்டது. ஒருவனை சாப்பாடு வாங்கி வருவதற்காகப் போகச் சொன்னார்கள்.அவன் மிகவும் தயங்கினான். '' திரும்பி வருமுன் இவர்கள் இருவரும் இருப்பதையெல்லாம் சுருட்டிக் கொண்டு விட்டால் என்ன செய்வது?'' என்ற பயம் அவனுக்கு. இருந்தாலும் மற்ற இரண்டு பேரும் அவனிடம் '' அப்படியெல்லாம் செய்யமாட்டோம் தைரியமாகப் போய் வா!'' என்று உறுதி சொல்லி ஒருவாறு அவனைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தனர்.

சிறிது நேரம் கழித்து குகையில் அடிபட்டவனுக்கு மூச்சுத் திணற ஆரம்பித்தது. ''தண்ணீர் தண்ணீர்! என்று கூறி முணுமுணுத்தான். அவன் படும் மரண அவஸ்தையை அருகிலிருந்தவன் கண்டும் காணாதவாறு இருந்து விட்டான். அவனும் இறந்துவிட்டால் ஒரு பங்கு குறையுமே என்ற எண்ணம் இவனுக்கு.

சாப்பாடு வாங்கச் சென்றவன் விரைவில் திரும்பி வந்தான். தான் குகையில் விட்டுச் சென்ற இருவரில் ஒருவன் இறந்திருப்பதைப் பார்த்து, ''இவன் எப்படி இறந்தான்?'' என்று குகையிலிருந்தவனிடம் கேட்டான்.

அதற்கு அடுத்தவன், '' இப்படித்தான் செத்துப் போனான்!'' என்று சொல்லிக் கொண்டே அவன் தலையில் இரும்புக்கம்பியால் ஓங்கி ஓங்கி அடித்தான். அவ்வளவுதான்! அந்த அடியால் சாப்பாடு வாங்கி வந்தவனும் துடிதுடித்து இறந்து போனான்.

இப்போது மீதி இருந்தது. ஒரே ஒரு ஆள்தான். அவன். '' அப்பாடா! தொல்லை விட்டது'' என்று நினைத்தான்.

அவசர அவசரமாக அவன் வெளியே போனவன் வாங்கி வந்த சாப்பாட்டை சாப்பிட்டு விட்டு நகைகளையெல்லாம் மூட்டை கட்டிக் கொண்டுக் கிளம்பினான். அவ்வளவுதான்! அவன் தலை கிறுகிறு என்று சுற்றியது. சாப்பாடு வாங்கச் சென்றவன் குகையில் இருந்த இருவரையும் கொல்வதற்காகச் சாப்பாட்டில் விஷத்தைக் கலந்து கொண்டு வந்திருந்தான்.

கடைசியில் அவனும் துடிதுடித்து இறந்து போனான். அந்தச் செல்வம் கேட்பாரற்றுக் கிடந்தது. அதற்காகப் போட்டி போட்டவர்கள் அதை அனுபவிக்க முடியாமல் அழிந்தே போனார்கள்.

பணம் நண்பர்களைக் கூட விரோதியாக மாற்றிவிடும் என்று அந்தப் பெரியவர் சொன்னாரே, அது எந்த அளவுக்கு உண்மையாயிற்று பார்த்தீர்களா?

வாழ்க்கைக்குப் பணம் அவசியமில்லை என்று சொல்லவில்லை. இருந்தாலும் அதை முறையாகச் சம்பாதிக்க வேண்டும். முறையாகப் பயன்படுத்த வேண்டும். இதை நாம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

---

# புத்தர் காத்திருக்கிறார்

சுவர்க்கத்தின் வாசல்.

புத்தர் அங்கே நின்று கொண்டிருக்கிறார்.

அங்கே வாசலில் நிற்கிறவன் கதவைத் திறந்து விடுகிறான்.

ஆனால் புத்தர் உள்ளே நுழையவில்லை

அப்படியே நிற்கிறார்.

அவன் கூப்பிடுகிறான்.

''ஐயா! உள்ளே வாருங்கள் ஏனென்றால்! சுவர்க்கம் உங்களை ரொம்ப நாளா எதிர்பார்த்துக் காத்திருக்கு! வாருங்கள் உள்ளே!'' - என்றான்.

நாற்பது வருசத்துக்கு முன்னாடியே அவர் அங்கே வந்திருக்கணும். ஏன்னா... இறப்பதற்கு நாற்பது வருசத்துக்கு முன்னாடியே புத்தருடைய யாத்திரை பூரணமடைந்திருந்தது... இறப்பதற்கு நாற்பது வருசத்துக்கு முன்னாடியே அவர் அடைய வேண்டியதை அடைஞ்சிட்டார். அறிய வேண்டியதை அறிஞ்சிட்டார்.

அதனாலே-

நாற்பது வருசமா சுவர்க்கம் அவருடைய வருகையை எதிர் நோக்கியிருந்தது.

நாற்பது வருசகாலமாக சொர்க்கவாசல் அவருக்காகக் காத்திருந்தது.

வாசல் திறந்திருந்தது.

ஆனால் அவர் என்ன சொன்னார் தெரியுமா?

''இப்பவும் நான் உள்ளே வரப்போறதில்லை. இன்னும் பல நாள்கள் இந்த வாசல் இப்படியே திறந்திருக்க வேண்டியிருக்குமாம்.''

''ஏன் அப்படிச் சொல்றீங்க?'' ன்னு கேட்டான் அந்த வாயிற்காப்போன். அவனுக்கு ஆச்சரியம்! ''பலபேர் வந்து கதவை திறக்கச் சொல்லிக் கெஞ்சுகிறார்கள். பலபேர் வந்து முட்டி மோதியும் பார்க்கிறாங்க. அப்படியும் நாம் கதவை திறக்கிறதில்லை. ஆனா நீங்க? திறந்திருக்கின்ற வாசல்லே நுழைய்மாட்டேங்கிறீங்க? ஏன் அப்படி வெளியிலேயே நிக்கிறீங்க? உள்ளே வாங்க!'' அப்படின்னு சொல்லி மறுபடியும் கூப்பிட்டுப் பார்க்கிறான்.

புத்தர் தீர்மானமாகச் சொல்கிறார்:

'' எதுவரைக்கும் ஒரு மனிதன் கூட எனக்குப் பின்னாலே மோட்சம் கிடைக்காமே நிக்கிறானோ... அதுவரைக்கும் நான் உள்ளே நுழைய முடியாது. மோட்சத்தில் பிரவேசிக்கும் கடைசி மனிதனாகவே நான் இருப்பேன்!''

அப்படின்னார்.

மகாயான புத்த தர்ம பிட்சுக்கள் இப்பவும் புத்தர் மோட்சத்தின் வாயிலில் நின்று கொண்டிருப்பதாகத்தான் சொல்லுவார்கள்.

''இப்பொழுதும் நிற்கிறார்.

வாசல் திறந்திருக்கு.

புத்தர் நுழைவாயிலில் நின்று கொண்டிருக்கிறார்.

கடைசி மனிதர் உள்ளே நுழையாதவரை அவரும் நின்று கொண்டேயிருப்பார்'' அப்படின்னு சொல்லுவார்கள்.



இது ஒரு கற்பனைக் கதை. ஆனாலும் இதுலே ஆழ்ந்த கருத்து உண்டு. உண்மை உண்டு.

''தனக்காக மட்டும்- தனக்காக எதையும் அடையறதுக்காக வாழ்கிறவர் சுமையின் கனத்துலேயே விழுந்துவிடுவர். அவருடைய வாழ்க்கை பாரமா ஆயிடும்!''ங்கறார். ஓஹோ. என்றைக்கு மனிதன் தனக்காக எல்லாத்தையும் அடைஞ்சுட்டானோ... எல்லா ஞானமும் பெற்று விட்டானோ.. அதற்கு மேல் வாழும்போது வாழ்க்கையில் கனமிருக்காது.. லேசாயிடும்.

இது தத்துவம்.

ஆனால் நடைமுறையிலே இதை வேறே மாதிரி அர்த்தம் பண்ணிக்கிறவர்கள் உண்டு.

ஒருத்தன் சொன்னான்:

'' நான் எனக்காக வாழணும்ன்னு ஆசைப்பட்டேன். அதோட விளைவு என் பக்கத்துலே இருந்தவனுக்கு பாரம் குறைஞ்சுட்டுது'' ன்னான்.

'' அது எப்படி?'' ன்னு கேட்டா அதுக்கு அவன் சொல்றான்.

'' அவன் பையிலே இருந்த பணம் இப்ப என் கையிலே! அவனுக்குத் தெரியாமே அவன் பாரத்தைக் குறைச்சுட்டேன்!''

- அப்படிங்கிறான்!

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



ஒருவரிடம் கைமாத்தாக, கடனாகக் கொடுத்த பணம் வரலாம். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரலாம். அடுக்கடுக்காக வேலைகள் குவிந்தாலும், அனைத்தையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்.

### இடபம்



உறவினர்கள் சிலர் உங்களை பாராட்டலாம். நண்பர்கள் சிலரிடம் உங்களின் பெருமையை பற்றி பேசுவீர்கள். சிறிய செலவுக்காக யோசித்த நீங்கள் ஒரு காரியத்திற்காக பெரிய அளவில் செலவு செய்யலாம். சில வேலைகளுக்காக அங்கும், இங்கும் இழுத்தடிக்கப்படலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் பங்கேற்கலாம்.

### மிதுனம்



வரவுகளை மீறிய செலவுகளால் அவதிப்படலாம். தாய் வழியில் எதிர்பாராத சிரமங்களுக்கு ஆளாகலாம். குடும்ப உறுப்பினர் ஒருவர் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். வாகனப் பயணங்கள் தொந்தரவு, எரிச்சல் தருவதாக அமையலாம். சபலங்களால் சங்கடங்களுக்கு, தண்டச் செலவுகளுக்கு ஆளாகலாம்.

### கடகம்



புதிய பணவரவுகளால் கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். தொழில், உத்தியோக சூழ்நிலை ஆறுதல் தருவதாக அமையும். நண்பர்கள் பாராட்டும் வகையிலான காரியம் ஒன்றைச் செய்வீர்கள். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். பொழுது போக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும்.

### சிங்கம்



ஆரோக்கியக் குறைவுகள் நீங்கி தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு கூடும். வெளியூர் பயணங்கள் செல்வதற்காக சில முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். பல நாள்களாக வராமல் இருந்த கடன் பாக்கியை கேட்டு வாங்குவீர்கள். உங்களின் குடும்ப பெருமை பற்றி மற்றவர்களிடம் பேசுவீர்கள்.

### கன்னி



ஆன்மீக விடயங்களில் நாட்டம் செல்லும். பழைய பொருள்கள் சிலவற்றை மாற்றி புதிய பொருள்கள் வாங்கலாம். மற்றொருவரை நம்பி ஒப்படைத்த வேலை முடியாமல் அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர்.

### துலாம்



தொழில் ரீதியான பணவரவு ஒன்றைப் பெறலாம். நண்பர்களை நம்பி எந்த காரியங்களிலும் இறங்க வேண்டாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். எதையாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் அதிகரிக்கும். பணிபுரிவோர் மேலதிகாரிகளின் கண்டிப்பிற்கு ஆளாகலாம்.

### விருச்சிகம்



புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் நாள். காலை முதல் மாலை வரை பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். பிள்ளைகளின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். உடன் பணிபுரியும் ஒருவருக்கு அவசர உதவி செய்யும் சூழ்நிலை ஏற்படலாம். பெண்கள் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம்.

### தனுசு



குடும்ப விவகாரம் ஒன்றைப் பற்றி கவலைப்படலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்கள், தின்பண்டங்கள் வாங்குவீர்கள். சிலரிடம் நீங்கள் சொல்வதே சரி என பிடிவாதம் செய்வீர்கள். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். தான, தர்மங்கள் செய்வதில் நாட்டம் செல்லும்.

### மகரம்



முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கும் நாள். பெரிய மனிதர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். கடன் தொடர்பான விடயங்களில் சாக்குப் போக்கு சொல்லி சமாளிப்பீர்கள். சுபகாரியங்களுக்காக செலவு செய்யலாம். சிலரிடம் காரசாரமாக சண்டை போடும் சூழ்நிலை உருவாகும். ஆடம்பர விடயங்களில் நாட்டம் செல்லும்.

### கும்பம்



சிலர் ஆசைப்பட்டு உங்களுக்கு ஒரு பொருளை கொடுத்தும் அதை ஏற்றுக் கொள்ள மறுப்பீர்கள். நண்பர்கள் வழியில் எதிர் பாராத செலவுகளைச் சந்திக்கலாம். மருந்துப் பொருள்கள் வாங்க லாம். சில விடயங்களில் முடிவுகள் எடுக்க முடியாமல் தவிக்கலாம். நீண்ட நாள்களாக சந்திக்க நினைத்த ஒருவரைச் சந்திப்பீர்கள்.

### மீனம்



பெற்றோர் வழியில் சந்தோஷம் தரும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். உங்களுக்காகவோ அல்லது உறவினர்களுக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். நேற்று தடைபட்ட காரியம் ஒன்று இன்று விறுவிறுப்பாக நடக்கலாம். பால்ய நண்பர்களைச் சந்தித்து பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். சுகமான அனுபவங்களைப் பெறலாம்.

## வீதி அகலமாக்கும் பணியில் உள்ளூர் தொழிலாளர்கள்

வடமராட்சி, ஜூலை 1

பருத்தித்துறை, யாழ்ப்பாணம் பிரதான வீதி அகலமாக்கும் பணியில் உள்ளூர் தொழிலாளர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வீதியை அகலமாக்குவதற்கு பகுதி, பகுதியாக தென்பகுதியைச் சேர்ந்த ஒப்பந்தக்காரர்கள் வேலைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

தென்பகுதி ஒப்பந்தக்காரர்கள் வீதி அகலமாக்கும் பணிக்கென ஒரு தொகுதி தொழிலாளர்களை அழைத்து வந்துள்ள போதிலும், உள்ளூர் தொழிலாளர்களையும் வீதி அகலமாக்கும் வேலைகளில் ஈடுபடுத்தியுள்ளனர். (50-236)


## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 09 . 1942



மறைவு 12 . 07 . 2009

### அமரர் கந்தன் இராசையா

எம் குடும்பத்தின் குல விளக்கின்
ஓராண்டு ஓடோடிச் சென்றதுவோ
இமை மூடா இரு விழி- விழித்து
இமை மூடி தனிச் சென்றீரே!
உண்மை பேசி உத்தமசீலராக
வாழ்ந்த உன் வாழ்க்கை
எம் வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகள்

மெழுகு போல் உன் உயிரை
எமக்காக உருக்கி
இமை போல் எமைக் காத்த
எம் பிரானே!
ஆறாதையா எம் துயர்! ஆறாது.

இன்று (01.07.2010) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றி தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

(99743)

குடும்பத்தினர்.


## தெய்வம் தன்னை நெருங்கியவர்க்கே அனுக்கிரகிக்கிறது

கடவுள் எங்கும் இருக்கிறார். ''இவரது கால்களும் கைகளும் எங்கும் இருக்கின்றன'' என்று கீதை (அத்தியாயம் 11) உறுதியாகக் கூறுகிறது. அதுபோல அவரது கண்களும் தலையும் முகமும் எங்கும் இருக்கின்றன. யாரும் கடவுளை மறுக்கவோ, ஒதுக்கவோ இயலாது. கடவுளை மறுப்பவன் தன்னையே மறுக்கின்றான். இறைவனிடம் பற்றுறுதி வளர்த்துக்கொண்டு எல்லாரிடமும் அவர் உறைகிறார் என்பதை அறியவேண்டும். அத்தகைய பற்றுறுதி உம்மிடம் பணிவு, தைரியம், மரியாதை உணர்வு இவற்றை விதைத்திடும்.

இவ்வுலகில் இறைவனை நீக்கினால் இன்பம் இல்லை. இவ்வுலகம் மாவு போன்றது. அரிசி மாவோ, கோதுமை மாவோ தனித்து ருசியில்லை. அத்துடன் சர்க்கரை சேர்த்துப் பிசைந்தால் ருசி. இவ்வுலகம் என்னும் மாவிற்கு இறை தத்துவமே சர்க்கரை போன்றது. உலக வாழ்வின் உண்மையான சுவை அனுபவிக்க இறையன்பினை வளர்க்க வேண்டுமெனத் தெரிகிறதல்லவா?

முகம்மதியர்கள் அவரை அல்லா என்று அழைத்து வழிபடுகின்றனர். தீவிர கிறிஸ்தவர்கள் அவரை ஜெஹோவா என்று அழைக்கின்றனர். வைணவ மதத்தினர் அவரை மகா விஷ்ணு என்று அழைக்கின்றனர். சைவசமயத்தைச் சார்ந்தவர்கள் அவரையே 'சிவா' என்று போற்றி வழிபடுகின்றனர். நாடியவர்களுக்கு எல்லோருக்கும் ஆயுள் ஆரோக்கியத்தையும் சகலவிதமான சௌபாக்கியங்களையும், சுக போகங்களையும், ஆனந்தத்தையும் அளிக்கவல்ல பரம்பொருள் ஒன்றே! அந்தப் பரம்பொருளையே பலவிதமான பெயர்களாலும் பல சமயங்களைச் சார்ந்தவர்கள் அழைத்து வழிபடுகின்றனர். இந்த உண்மையை நீங்கள் யாவரும் உணரவேண்டும்.

தெய்வத்தை நெருங்கும் ஒவ்வொரு நபருக்கும் கூட தெய்வீகத் தன்மை கிட்டும் வாய்ப்பு இருக்கிறது. நெருப்பிற்கு ஆகர்ஷணசக்தி இல்லை. ஆனால், தன்னை நெருங்கும் நபர்களுக்கு வெளிச்சத்தைக் கொடுத்து, வெப்பத்தை அளிக்கிறது. தன்னை நெருங்கியவர்களுக்கே வெளிச்சத்தையும் வெப்பத்தையும் நெருப்பு அளிக்கிறதேயன்றி, தொலைவில் உள்ளவர்களுக்கு அளிப்பதில்லை. அதுபோன்றே தெய்வம் தன்னை நெருங்கியவர்களுக்கு தனது சக்தியையும், தனது அன்பையும், தனது அனுபவசாரத்தையும் அளிக்கின்றது. இத்தகைய தெய்வத்தை இன்று நாம் விசுவாசிப்பதில்லை.

இறைவனை அன்றாடம் நன்றியுணர்வுடன் இரண்டு அல்லது மூன்று வேளைகள் நினைவுடன் துதிக்க வேண்டும். இது உங்களுக்கு மன நிம்மதியைக் கொடுக்கும். உங்களுடைய உலகாயதமான கடமைகளை விட்டுவிட வேண்டியதில்லை. அவைகளை இறைவன் நாமத்தை எப்போதும் உச்சரித்துக்கொண்டே செய்திடுங்கள். இறைவனின் அருளாசியை இடைவிடாது நாடியிருங்கள். உங்களுடைய அயல் வீட்டாருடனோ அல்லது வேறு சனங்களிடமோ அதிகமாக அவர்களுடைய விடயங்களில் உங்களை விடுவித்துக் கொள்ள முடியாத அளவிற்கு இணைத்துக்கொண்டு விடாதீர்கள். உங்களைச் சுற்றியுள்ள இயற்கையின் எழிலையும், நிலத்திலும் வானிலும் காணப்படும் இயற்கையின் வனப்பு மிக்க காட்சிகளையும் கண்டு களித்து ஆனந்தம் கொள்வதிலேயே உங்கள் நேரத்தைப் போக்குவது நலம். உதாரணமாக, பச்சைப்பசேலென்று விளைந்துள்ள பயிரினங்களும், பூத்துக்குலுங்கும் மலர்ச்செடிகளும் இதமான சுகமளிக்கும் மெல்லிய தென்றலும், காணும்போதே மனதைக் கொள்ளை கொள்ளும் கார்மேகங்களும், எவ்வித கவலையுமின்றி சுதந்திரமாகத் திரியும் பறவை இனங்களின் இனிய ஒலியும் தன்னை மறக்கச்செய்து எல்லையில்லா இன்பம் அளிப்பவை. இதைவிட சிறந்த அனுபவம் வேறு எதுவுமில்லை.



### சாயி சிந்தனை

# அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை




(சென்றவாரத் தொடர்ச்சி)

அச்சுவேலி பிரதேச் வைத்தியசாலையில் கடந்த வருடம் சிகிச்சை பெற்றோரின் மாதாந்த சராசரி எண்ணிக்கை 5814 ஆக இருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டு நவம்பர் - டிசம்பர் மாதங்களில் சிகிச்சை பெற்றோரின் சராசரி எண்ணிக்கை 6693 பேர். இந்த எண்ணிக்கை அளவு 2010ஆம் ஆண்டில் மாதாந்தம், நாளாந்தம் மேலும் அதிகரித்துச் செல்வதைப் புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இது வன்னிப் பெருநிலப் பரப்பில் இருந்து இடம்பெயர்ந்தோர், மீளக்குடியேறியோர் எண்ணிக்கை அதிகரிப்போடு தொடர்பு பட்டதாக உள்ளது.

வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பினை தற்பொழுது வைத்தியசாலையில் சேவையில் உள்ள ஆளணியினரின் எண்ணிக்கையால் ஈடுசெய்ய முடியாமல் இருப்பதாகப் பொதுமக்கள் தரப்பினால் தெரிவிக்கப்படுகின்றது. இதில் நியாயம் இல்லாமல் இல்லை. வைத்தியசாலையில் உள்ள ஆளணிஅளவு கடந்த சில வருடங்களுக்கு முன்பு உள்ள சேவை நிலையை கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இன்று வைத்தியசாலையை பயன்படுத்தும் நோயாளர் அளவு குறிப்பிடத்தக்களவுக்கு உயர்ந்து உள்ளது.

வைத்தியசாலையில் தற்பொழுது சேவையில் உள்ள ஆளணி என்ற வகையில் மருத்துவர் M.O ஒருவர் (எம்.பி.பி.எஸ்), உதவி மருத்துவர் ஒருவர், தாதியர் நால்வர் உள்ளடங்கலாக சகலதரநிலையிலும் உள்ள பகுதிநேர ஊழியர்களையும் உள்ளடக்கி 43 பேர் மட்டுமே கடமையாற்றுகின்றனர்.

வைத்தியசாலைக்குச் சிகிச்சைபெற வரும் நோயாளர் தொகைக்கு ஏற்றவகையில் வைத்தியசாலை ஊழியர் ஆளணியில் மருத்துவர், தாதியர், சிற்றூழியர், பரிசாரகர்கள் எண்ணிக்கை இல்லை என்பது பொதுமக்கள் சார்பில் முன்வைக்கப்படும் பெரும் குற்றச்சாட்டு. இது தேவையைக் கருத்தில் கொண்டு உடனடியாக சீர்செய்யப்படவேண்டும்.



இந்த இடத்தில் வைத்தியசாலைக்கு சிகிச்சைபெற வந்த 76 வயது முதியவர் ஒருவர் முன்வைத்த கருத்து ''சலரோக கிளினிக்குக்கு வருகின்றேன். குறைந்தது 3-4 மணி நேரம் காத்திருந்தே வீடு செல்ல நேருகின்றது. இந்து நேரங்களில் மயக்கம் போட்டு விழுந்து விட நேருகின்றது. ஒரு வைத்தியர் தான் கடமையில் உள்ளார். யாரிடம் புகார் செய்வது என அலுத்துக் கொண்டார்''

இந்த இடத்தில் முதியவரின் உள்ளக் குமுறலில் நியாயம் இல்லாமல் இல்லை. உதவி மருத்துவர் எண்ணிக்கை உடனடியாக அதிகரிக்கப்பட வேண்டும். அத்துடன் நாளாந்த சேவையில் ஒரு தாதி மட்டும் இருந்து நோயாளர் விடுதியையும் வெளிநோயாளர் பகுதியையும் அவசர சிகிச்சைப் பிரிவையும் கவனிப்பதும் கருத்தில் கொள்ளப்பட்டு உடனடியாகச் சீர்செய்யப்பட வேண்டும்.

வைத்தியசாலையின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்களும் மாகாண சுகாதார சேவைகள் அமைச்சு உயர் அதிகாரிகளும் ஆற்றிவரும் பங்கு பணிகள் நன்றியறிதலோடு பாராட்டுக்குரியன. அந்தவகையில் அவர்கள் ஆளணித் தேவையை உடனடியாகக் கருத்திக் கொண்டு நடவடிக்கை எடுப்பார்கள் என வைத்தியசாலை அபிவிருத்திச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்தியசாலையின் உடனடித் தேவை என்றவகையில் பிரேதஅறை நிறுவப்படுவதோடு தற்பொழுது பாவனையில் உள்ள ஆண்கள் விடுதி, சமையல் கூடம் என்பனவும் தாதியர் மற்றும் ஊழியர்களுக்கான விடுதியும் நிறுவப்பட வேண்டும். அத்துடன் ஆய்வுகூடவசதி செய்யப்படவேண்டும்.

பிரதேச மட்டத்தில் உள்ள வைத்தியசூலைகளில் நம்பிக்கை வைத்து மக்கள் தமது முழுமையான வைத்திய சேவையைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை சேவைக்கூறுக்கள் எதிர்காலத்தில் மேலும் உயர்வடைய வேண்டும். (முற்றும்)

---

# புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி

(சென்றவாரத் தொடர்ச்சி)

வலி.கிழக்கின் கல்வி வளர்ச்சியில் கணிசமான அளவு பங்களிப்பு நல்கிவரும் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி புத்தூர் மழவராயர் கந்தையாவினால் 1931ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் திகதி ஸ்தாபிதம் செய்யப்பட்டது. ''புத்தூர் சோமஸ்கந்த தமிழ் வித்தியாலயம் - சோமஸ்கந்த ஆங்கில வித்தியாலயம்'' என்ற வகையில் இரண்டு கல்விக்கூடங்கள் நிறுவப்பட்டு அவற்றின் பராமரிப்புக்கு 200 ஏக்கர் தென்னந்தோட்ட நிலங்களையும் யாழ்.நகரில் 14 வர்த்தக நிலையங்களையும் கட்டடத் தொகுதியையும் நன்கொடையாகத் தர்மசாதனம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலையின் எதிர்கால கட்டட வளர்ச்சிகை கருத்தில் கொண்டு பல ஏக்கர் நிலப்பரப்பில் கல்லூரி வளாகம் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.




கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு விடுதி வசதி, உணவு வசதி என்பனவற்றை இலவசமாக வழங்கி இந்து சமயக் கல்வியுடன் ஆங்கில, தமிழ், சமஸ்கிருத, மொழிகளையும் கற்பிக்கப்பட வேண்டும் என்ற பெருவிருப்பம் ஸ்தாபகரின் தர்மசாதனக் குறிப்பிலும் மரண சாதனத்திலும் தெரிவிக்கப்பட்டிருப்பதோடு, வழிப்போக்கர்கள் தங்கியிருந்து உணவு உண்டு வண்டில் பயணங்களை இயல்பு நிலையில் மேற்கொள்ளும் வகையில் புத்தூர் சுன்னாகம் வீதியில் சத்திரம் நிறுவப்பட்டிருப்பதோடு அவற்றின் பராமரிப்புக்கும் பெருமளவு நிலமும் சொத்துக்களும் தர்மசாதனம் செய்யப்பட்டுள்ளன.




மழவராயர் கந்தையாவின் கல்விக்கான தர்மசாதனம் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக கல்வியியல்துறை முன்னாள் தலைவரும் பேராசிரியருமான க.சின்னத்தம்பி கருத்துத் தெரிவிக்கையில் ''கல்விக்கான தர்மசாதனம் உரிய முறையில் பயன்படுத்தப்படுமானால் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவி விடுதிவசதி, உணவுவசதி, கல்வி அனைத்தையும் இலவசமாக வழங்கலாம்'' எனத் தெரிவித்தார். இது தொடர்பாக மழவராயரின் வழித்தோன்றலும் தர்மசாதன பரிபாலனசபை உறுப்பினருமான ஸ்ரீ புருசோத்தமன் மழவராயர் கருத்துத் தெரிவிக்கையில் ''தமிழ் நாடு தஞ்சைப் பல்கலைக் கழகம் போன்ற ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கலாம். காலத்தின் கோலமும் களநிலையும் ஸ்தாபகரின் விருப்பத்திற்கு எதிர்மாறாகச் செல்கின்றன. எல்லாவற்றுக்கும் காலம் பதில் சொல்லும், காத்திருக்கின்றேன்'' எனத் தெரிவித்தார்.

சோமஸ்கந்தக் கல்லூரி வளர்ச்சியில் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு படிநிலைகளில் உயர்நிலை பெற்று வந்துள்ளது. குறிப்பிட்ட காலக்கட்டத்தில் தென்மராட்சியில் இருந்தும் பெருமளவு மாணவர்கள் புத்தூர் சோமஸ்கந்தாவில் கல்வி கற்பதை பெருவிருப்பமாகக் கொண்டு கல்வி பயின்று வந்தனர்.

சோமஸ்கந்தாவின் வளர்ச்சியில் காலத்துக்குக்காலம் அதிபர்களாகக் கடமைபுரிந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவிய அதிபர்கள் நினைவில் நிலை நிறுத்தப்பட வேண்டியவர்கள்.

அதிபர்களின் பெயர் விபரம்:

பிரம்மஸ்ரீ. ஆர்.சுந்தராச்சாரியார் : 22.04.1931- 30.10.1933, வி.கனகசபை : 01.11.1933 - 07.07.1936, பண்டிதர் க.மயில்வாகனம் : தமிழ்ப் பாடசாலை அதிபராக 01.08.1936 - 31.12.1948, சீ.எம்.கதிரேசம்பிள்ளை : 08.07.1936 - 31.12.1937, எஸ்.தணிகாசலம் : 01.01.1938 - 06.03.1944, எஸ்.வீரசிங்கம் : 07.03.1944 - 31.12.1948, எஸ்.குமாரசுவாமி : 01.01.1949 - 31.04.1965, வி.கனகசபை : 01.05.1965 - 06.01.1966, ஏ.மண்டலேஸ்வரன் : 07.01.1966 - 31.08.1970, என்.மனோகரன் : 01.09.1970 - 06.12.1971, எஸ்.பி.கனகசபாபதி : 07.12.1971 - 25.05.1976, எம்.என்.ஆறுமுகதாசன் : 26.05.1976 - 13.06.1976, ரி.சச்சிதானந்தம் : 14.06.1976 - 28.02.1977, எஸ்.கனகராசா : 01.03.1977 - 04.10.1981, எஸ்.ஆர்.சண்முகரத்தினம் : 05.10.1981 - 10.02.1988, என்.கணேசபிள்ளை : 11.02.1988 - 28.02.1990, வி.சந்திரசேகரம்பிள்ளை : 01.03.1990 - 19.11.1995, வி.ஆறுமுகம் : 20.11.1995 - 31.10.2006, கு.வாகீசன் : 01.11.2006 - 06.03.2007, சி.மகேஸ்வரதாசன் : 07.03.2007 - 23.01.2009, செல்வி சிவலீலாதேவி வடிவேலு : 24.01.2009 - 08.07.2009, ஆர்.இராசமகேந்திரன் : 09.07.2009 - இன்றுவரை. புகழ் பூத்த அதிபர்கள் பலரால் வளர்ச்சிபெற்ற கல்லூரியின் வரலாற்றில் அதிபர் திரு.எஸ்.வீரசிங்கம், அதிபர் எஸ்.குமாரசுவாமி, அதிபர் எஸ்.பி.கனகசபாபதி ஆகியோரின் காலம் பொற்காலம் எனப் பேசப்படுகின்றது.

(தொடரும்)

# தகவல் தொழில்நுட்பத் துறையில் கோலோச்சும் பி.சி.எஸ் தொழில் வாய்ப்புக்களை வழங்கும் முன்னணி நிறுவனம்

பி.சி.எஸ். என சுருக்கமாக அழைக்கப்படும் பிரித்தானிய கணனியியல் கழகத்தின் தற்போதைய தலைவரான ஜெகான் விக்கிரமநாயக்க இதன் கலங்கரை விளக்காகத் திகழ்கின்றார். இவர் தகவல் தொழில்நுட்பத்துறையில் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் நன்கு அறியப்பட்டவர்.

தகவல் தொழில் நுட்பத்துறையில் மூன்று தசாப்தங்களாகத் தன்னை இணைத்துக் கொண்ட இவர் இலங்கையின் இத் துறைசார் கல்வியை வளர்த்தெடுப்பதில் முக்கிய பங்கு வகித்தவராவார்.

பிரிட்டிஷ் கணனியியல் கழகம் கடந்த 50 வருடங்களுக்கும் மேலாகத் தொழில்சார் கல்வியைப் பெறுவதற்குப் பாதையமைத்துக் கொடுக்கும் பணியைச் செய்து கொண்டிருக்கின்றது.

விளம்பர விவரணம்

பி.சி.எஸ்.ஸின் உயர் கல்வித் தகைமைகள் உலகம் பூராவும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. இவை இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டாலும் அநேக பொதுநலவாய நாடுகள், ஐரோப்பிய நாடுகள், வட அமெரிக்க நாடுகள் மற்றும் பல்வேறு அரசாங்கங்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை அநேகமான மாணவர்கள் பி.சி.எஸ். உயர்கல்வித் தகைமைகளை தகவல் தொழில்நுட்பத்துறையில் நுழைவதற்கான தகுதிகளாகக் கருதி இவற்றைப் பூர்த்தி செய்துள்ளனர். மேலும் இதுவே இவர்களது முதல் தெரிவாகவும் விளங்குகின்றது.

பி.சி.எஸ். உலகின் பெரிய கணனித் தொழில்நுட்ப நடவடிக்கைகளின் பின்னணியில் உள்ளது. இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள் இந்தக் கழகத்தினால் வழங்கப்படும் டிப்ளோமா பட்டத்தைக் கணனியியல் தொடர்பான பட்டத்துக்குப் பிந்திய கல்வியைத் தொடர்வதற்கான நுழைவுத் தகைமையாக ஏற்றுக்கொண்டுள்ளன.

பேராசிரியர் விக்கிரமநாயக்க மேலும் இதுபற்றிக் கூறுகையில் பி.சி.எஸ். உயர்கல்வித் தகைமைகள், உள்ளூர் பல்கலைக்கழகங்களில் இணைந்து கல்வி பெறும் வாய்ப்பைத் தவறவிட்டவர்கள் தமது தொழில்வாய்ப்புக்களை தாமதமின்றிப் பெற்றுக்கொள்வதற்கு உதவுவதாகத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலதிக விவரங்களைப் பெற விரும்பினால் 4891081/ 2698566 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் அல்லது www.bcs.org/HEQ உடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

## அறிவித்தல்
### வலி. தென் மேற்குப் பிரதேச சபை மானிப்பாய் கிராம உப அலுவலகம்

ஆதனப் பெயர் மாற்றம் — வட்டாரம் :01
குரங்கிலிப்பான் ஒழுங்கை — ஆதன இலக்கம்: 39/5

வட்டாரம் 01, குரங்கிலிப்பான் ஒழுங்கை, ஆதன இலக்கம் 39/5 இல் அமைந்துள்ள ஆதனமானது, இராமலிங்கம் ஆனந்தராசாவும், குமாரசாமி இராசரத்தினம் பெண் புவனேஸ்வரி என்பவர்களால் அறுதியாக விற்கப்பட்டு செல்வராசா சண்முகரத்தினம் பெண் சிவமலர் என்பவர்களால் குறித்த ஆதனம் 3867/03.03.2010 ஆம் திகதி எழுதப்பட்ட உறுதி மூலம் தமக்குச் சொந்தம் என்பதை தெரியப்படுத்தி எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து செல்வராசா சண்முகரத்தினம் பெண் சிவமலர் எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலி.தென்மேற்குப் பிரதேசசபை,
தலைமைச் செயலகம், மானிப்பாய். (100081)

## புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் புலோலி கிழக்கு, பருத்தித்துறை

பதவி வெற்றிடம்- பயிற்சி கிளை முகாமையாளர் (208/13) பதவிக்கான விண்ணப்பம்

பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய கிளை முகாமையாளர், பயிற்சியாளர் (208/13) பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. பதவி- பயிற்சி கிளை முகாமையாளர் (208/13) சமயோசிதம்

2. சம்பள அளவுத் திட்டம்- 9950/= - 85 X10, 90 X 10 -11700/= (சுற்றுநிருபம் 66/2006)

3. கல்வித்தகைமை- கூட்டுறவுப் பணியாளர் 14ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம். அல்லது 15 ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம்(சாதாரணம்) க.பொ.த (சா/த) இல் கணிதம், மொழி உள்ளடங்கலாக 04 திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியுடன் சம்பந்தப்பட்ட துறையில் 02 வருட அனுபவம்.

04. பிணை- கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சட்டத்திற்கு அமையச் செலுத்தப்படல் வேண்டும்.

05. உள்ளடக்கப்பட வேண்டிய விவரங்கள்- பிறப்புச் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ், தொழில்தகைமைச் சான்றிதழ் என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

06. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவு திகதி- விண்ணப்பங்கள் 10.07.2010 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக் கூடியதாக தலைவர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

முக்கிய குறிப்பு- தெரிவு செய்யப்பட்டவர் 10 நாள் பயிற்சி முடிந்த பின்பு திறமைக்கு ஏற்ப நியமனம் வழங்கப்படும். இதற்கென தயாரிக்கப்பட்ட எமது சங்க நுகர்வோர் சி.வி.நிலையத்தில் விற்கப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து இணைப்புக்களையும் இணைத்து அனுப்பவேண்டும்.

ஒப்பம்: ச.வல்லிபுரநாதன்
தலைவர் (சி/568766) திகதி: 29.06.2010

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் முருகன் கிருஷ்ணன்

(ஓய்வுபெற்ற அதிபர், காரை/ ஊரி அ.மி.த.க. வித்தியாலயம்)

தோற்றம் 19.11.1934 — மறைவு 01.07.2006

உண்மைக்குள் வாழ்வைத் தேடி
உலகிற்குள் வாழ நல் வழிகாட்டி
கல்விக்கு அடி பணிந்து
அன்பை வாழ்க்கையில் கருவாக்கிய
எம் தாத்தாவுக்கு நினைவுக்
காணிக்கைகளாக
நாம் சமர்ப்பணம் ஆகுகின்றோம்.

பாலாவோடை,
களபூமி,
காரைநகர். (100016)

எடின்பரோ (மயூரன்) மற்றும்
பேரப்பிள்ளைகள், மனைவி, மக்கள்.

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10.06.1952

மறைவு 15.06.2006

திதி: 01.07.2010

அமரர் செல்லத்துரை சிவபாதம்

எங்கள் ஆருயிர் சோதரா!
உன் அன்பான பாச மொழிகேட்டு
ஆண்டுகள் நான்காகி விட்டதையா!
ஆறவில்லை எம் துயரம் - ஏக்கம்
பொல்லாத நோய் வந்து எம் செல்வனை
எம்மிடமிருந்து பறித்து விட்டதே!
எங்கள் இல்லத்து இதய ஜோதியே - நீ
எப்பிறவி எடுத்திடுனும் அப்பிறவியிலும் - நீ
நன்றாக இருக்க எங்கள் குல தெய்வம்
ஈழத்து சிதம்பர நடராஜனின் பாதார விந்தங்களைப்
பணிந்து - வேண்டி எம் உள்ளத்தால்
பூஜித்து வரும்

"அன்னை நிழல்",
செட்டியார் மடம்,
வட்டுக்கோட்டை. (99956)

உன் அன்பு அக்காமார், தங்கை,
மைத்துனன்மார், மருமக்கள்.

## சமய சந்திதிகளில்

வடமராட்சி, ஜூலை 1

தென்புலோலி, மந்திகை முருகன் ஆலய அலங்கார உற்சவம் கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

(50-204-236)

* * *

வடமராட்சி, ஜூலை 1

புலோலி, குரும்பைகட்டி சாமுண்டிகா தேவி சமேத ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அபிஷேகம் கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை சங்காபிஷேகம் இடம்பெற்று, மாலை 5 மணிக்கு சுவாமி வீதிஉலா வருவார்.

(50-204-236)

* * *

வடமராட்சி, ஜூலை 1

அல்வாய் கிழக்கு, வெள்ளுருவை ஞானவைரவர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகி 9 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை சங்காபிஷேகம் இடம்பெற்று மாலை மணவாளக்கோல உற்சவமும் நடைபெறும்.

(50-204-236)


### வான் சேவை

யாழ்.கொழும்பு AIR PORT மற்றும் விசேட வைபவங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.
0777199352, 0779770027, 0213008238

### தேவை

கைதடியில் இயங்கும் எரிபொருள் நிலையத்திற்கு ஓய்வுபெற்ற கணக்காளர் தேவை- நேரில் தொடர்பு கொள்ளவும்.
எரிபொருள் நிலையம், கைதடி.

### காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்கு, கே.கே.எஸ் வீதியிலுள்ள சேச் முன் ஒழுங்கையில் 1½+ 1 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு :- 0776366308, 0779522027

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அல்லது நகரை அண்மித்த பகுதிகளில் சகல வசதிகளுடனும் மற்றும் வாகன தரிப்பிட வசதிகளுடனும் வீடு வாடகைக்குத் தேவை
தொடர்புகளுக்கு :-
T.P: 0779849942, 07766[illegible]9258


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 ★ 04 ★ 1942



உதிர்வு 12 ★ 07 ★ 2009

# துரைராசா கணபதிப்பிள்ளை

(இளைப்பாறிய கிராம அலுவலர்)


திதி- அபரபட்ச ஷஷ்டி

நீங்கள் எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டு ஆண்டு ஒன்று கடந்தாலும் உங்கள் நினைவுகள் என்றும் எம்மை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய நித்தமும் இறைவனை வேண்டுகிறோம்.

நாளை 02.07.2010 வெள்ளிக்கிழமை நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய உணவிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

தெணியம்பை,
வல்வெட்டித்துறை. (சி/563762)




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.07.1992

★ மட்டக்களப்பு - கல்முனை வீதியில் கிரான் குளம் எனும் இடத்தில் இனந் தெரியாதோரால் பயணிகள் பஸ் ஒன்று வழி மறிக்கப்பட்டு அதிலிருந்த 18 பயணி கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் எனத் தெரி விப்பு.

★ விடுதலைப் புலிகளுடனான போரில் வெற்றியடைவதானால் இலங்கைப் படையினர் இன்னும் நீண்ட காலம் முயற்சிக்க வேண்டியிருக்கும் என பி.பி.ஸி வானொலி இலங்கை பற்றிய தனது விமர்சனக் கண்ணோட்டத்தில் தெரிவிப்பு.

17.07.1992

★இந்தியாவின் ஒன்பதாவது ஜனாதிபதியாக டாக்டர் சங்கர் தயாள் சர்மா தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிப்பு.

★ விடுதலைப் புலிகளுடனான போரில் தனது இழப்பை ஈடுசெய்வதற் காக பாதுகாப்புத்தரப்பு முன்னர் படையிலி ருந்து தப்பியோடியவர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ள முடிவு செய்திருப்பதாகத் தெரிவிப்பு.

18.07.1992

★ அனுராதபுரம் எல்லைப் பிரதேசங்களில் உள்ள இராணுவக் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய கடும் தாக்குதல்களையடுத்து அங்குள்ள பிரதான நிலையங்களைக் கைவிட்டு படையினர் பின்வாங்கிச் சென்றுள்ளதாகத் தெரிவிப்பு.

★ மட்டக்களப்பு பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற படையினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் 6 தமிழ்ப் பொதுமக்கள் பலியானதாகத் தெரி விப்பு.

19.07.1992

★ ஜனாதிபதி பிரேமதாஸா தலைமையிலான ஐ.தே.க அரசை பதவியிலிருந்து அகற்றுவதற்காக எதிர்க்கட்சிகள் பெரும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குத் திட்ட மிட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிப்பு.

★ விடுதலைப் புலிகள் பலம் சற்றுக் குறைந்திருந்தாலும் அவர்களை வெல்வது இராணுவத்துக்கு மிகுந்த சிரமமாக இருக்கும் என கொழும்பிலுள்ள மேற்கு நாட்டு ராஜதந்திரி ஒருவர் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி அறிவிப்பு.

20.07.1992

★ இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்கென சர்வதேச விசாரணைமன்று ஒன்று நியமிக்கப்பட வேண்டுமெனவும் தமிழர்கள் அந்த மன்றின் முன் தமது தரப்பு வாதங்களை முன்வைக்க வசதி செய்யப்பட வேண்டுமெனவும் பிரிட்டிஷ் பிரபுக்கள் சபை உறுப்பினரான அவேயவரி பிரபு தெரிவிப்பு.

★இனப்பிரச்சினை தீர்வுக்கென நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் தனது யோசனையை சமர்ப்பித் துள்ள முதலாவது சிங்களக் கட்சியான மக்கள்ஐக்கிய முன்னணி தனது யோசனையில் மாகாண சபை முறை ஒழிக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

21.07.1992

★ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான இந்திய அரசின் தடையைக் கண்டித்து சென்னையில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று இடம்பெற்றதாக அறி விப்பு.

★ சர்வதேச மத்தியஸ்தத்தின் மூலம் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண சுவீடன் அரசு மேற்கொண்ட முயற் சிகள் இலங்கை அரசின் அசிரத்தை காரண மாக தோல்வி கண்டதாக சுவீடிஸ் பேராசிரியர் பீற்றர் ஷோக் தெரிவிப்பு.

22.07.1992

★ மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயில் சித்தாண்டியில் வழி மறிக்கப்பட்டு பயணிகள் தாக்கப்பட்டதில் 7 பயணிகள் பலியானதாகத் தெரிவிப்பு.

★ யாழ்.குடாநாட்டில் நிலவும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கான பற்றாக்குறை நிலை குறித்து இன்று கொழும்பில் நடைபெறும் மாநாட்டில் யாழ். அரச அதிபர் யாழ்ப்பாண நிலைமை குறித்து விளக்கமளிப்பார் எனத் தெரிவிப்பு.

23.07.1992

★ பாதுகாப்புத் துறை பதில் ராஜாங்க அமைச்சர் ஜோன் அமரதுங்க கூட்டுப் படைகள் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவுடன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டதாகத் தெரிவிப்பு.

★ அனுராதபுரம் - மன்னார் மாவட்ட எல்லைப் பகுதியில் உள்ள தந்திரிமலை பௌத்த விகாரையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் விகாரையின் பிரதம குரு கொல்லப்பட்டதாகத் தெரிவிப்பு.

24.07.1992

★ நாடாளுமன்றத் தெரிவுக் குழு இனப் பிரச்சினையை ஒருபோதும் தீர்க்கப் போவதில்லை என நேற்று நாடாளுமன் றத்தில் தகவல்துறை துணை அமைச்சர் ஏ.ஜே.ரணசிங்க தெரிவிப்பு.

★ வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கை மாற்றம் எதுவுமின்றி தொடர்ந்து முன்னெடுக்கப் படும் என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

25.07.1992

★ நாம் விரும்புகிறோமோ இல்லையோ வடக்கு - கிழக்கு தமிழர்களுடைய பாரம்பரிய பிரதேசமாகத்தான் இருந்திருக்கிறது. அதனை நாம் ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது என முன்னாள் அமைச்சரான காமினி திஸநாயக்க பத்திரிகைப் பேட்டி ஒன்றில் தெரிவிப்பு.

★யாழ்.குடாநாட்டில் இராணுவ நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டிருப்பது குறித்து பிரிட்டனின் உதவி வழங்கும் நிறுவனங்கள் இலங்கை அரசிடம் கவலை தெரிவிப்பு.

26.07.1992

★ தென்னிலங்கையில் அரசுக்கு எதிராக மக்களை அணிதிரட்டும் முயற் சியை எதிரணிக்கட்சிகள் படிப்படியாகத் தீவிரப்படுத்தி வருவதாக செய்திகள் தெரிவிப்பு.

★ கிழக்கு மாகாணம் தனது கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறும் அரசால் அங்கு தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நடக்கும் மோதல்கள் தடுக்க இயலாது சிரமப்படுவதாக பி.பி.ஸி வானொலி விமர்சிப்பு.

27.07.1992

★ ஈழத் தமிழர்கள் மீது நடத்தப்படும் நியாயமற்ற யுத்தத்தை நிறுத்தக் கோரி நேற்று லண்டனில் வாழும் தமிழர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தி யதாகத் தெரிவிப்பு.

★ சிங்கள இளைஞர்கள் மனவிரக்தி அடைந்திருப்பதால் அவர்கள் இராணுவத்தில் சேர தயாராக இல்லை என சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவிப்பு.

28.07.1992

★ சுதந்திரக் கட்சியை பிளவு படுத்தவும் எதிர்க்கட்சிகளின் கூட்டு நடவடிக்கைகளை நசுக்கவும் ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிப்பதாக சிறிமாவோ பண்டார நாயக்க குற்றச்சாட்டு.

★ கட்டுநாயக்காவில் இருந்து சிங்கப்பூர் ஊடாக வெளிநாடொன்றுக்கு முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல தப்பிச் சென்று விட்டதாக பத்திரிகைச் செய்தி தெரிவிப்பு.

29.07.1992

★ பருத்தித்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்பட இருப்பதாக கூட்டுப்படைத் தலைமையகத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க யாழ்.அரச அதிபருக்கு அறிவிப்பு.

★தற்போதைய போர் விமானங்களுக்குப் பதிலாக தரைத்தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் புதிய போர் விமானங்களின் அணியொன்றை கொள்வனவு செய்யும் விமானப் படையின் திட்டத்துக்கு அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளதாகத் தெரிவிப்பு.

30.07.1992

★ கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு நாவலடிப் பகுதியிலும், திருகோணமலை சாம்பல்தீவுப் பகுதியிலும் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய இருவேறு அதிரடித் தாக்குதல்களில் 84 படையினர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

31.07.1992

★ விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்களுக்கு அஞ்சி கிழக்கு மாகாணத்தில் பெரும் தாக்குதல்களை நடத்தும் தனது முடிவை இலங்கை இராணுவத்தரப்பு மாற்றிக் கொண்டுள் ளதாகத் தெரிவிப்பு.

★தமிழகத்தில் இருந்து இலங்கைத் தமிழ் அகதிகளை தாய் நாட்டுக்கு அழைத்து வரும் நடவடிக்கைகளுக்கு ஆரம்ப உதவியாக கனடா, அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் 10லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்க முன் வந்திருப்பதாகத் தெரிவிப்பு.

# இன்னும் 2 மாதங்களில் 47 ஆயிரம் பேர் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்வு

## பிரதி அமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

மீள்குடியமர்த்தப்படாமல் முகாம்களில் தங்கியுள்ள 47ஆயிரம் பேர் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவர் என மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கண்ணிவெடிகளை அகற்றுவதில் ஏற்பட்டுள்ள தாமதமே இவர்கள் மீள்குடியமர்த்தப்படாமைக்குக் காரணமாகும் என அவர் விளக்கம் அளித்தார்.

மீள்குடியேற்ற அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே பிரதி அமைச்சர் இத்தகவலைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:

மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளைக் கண்டறிய நாம் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய பகுதிகளுக்கு சமீபத்தில் விஜயம் செய்தோம். படிப்படியாக இவர்களது பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை இரண்டு லட்சத்து 25 ஆயிரம் பேர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு 75 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்காக மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் 50 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட்டு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இடம்பெயர்ந்து மீள்குடியமர்த்தப்பட்டவர்களுக்கு இன்னும் ஒரு லட்சத்து 70 ஆயிரம் வீடுகள் தேவைப்படுகின்றன. போரால் ஓரளவு சேதமடைந்த வீடுகளையும் திருத்தவேண்டியுள்ளது.

இந்தியா 50ஆயிரம் வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க முன்வந்துள்ளது. உலக வங்கி ஐயாயிரம் வீடுகளை நிர்மாணிக்க உதவி வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பிரதி அமைச்சர் பதிலளித்தார்.

**கேள்வி:** ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட்டவர்களில் பலருக்கு நிதி வழங்கப்படவில்லை. சிலருக்கு வழங்கப்பட்டுள்ளது. இது ஏன்?

**பிரதி அமைச்சர்:** மீளக் குடியமர்த்தப்பட்டவர்களின் சரியான விவரங்கள் பிரதேச செயலாளருக்கு வழங்கப்படாமையே இதற்குக் காரணமாகும். இது குறித்து அமைச்சு முறையான நடவடிக்கையை மேற்கொள்ளும்.

**செய்தியாளர்:** வற்றாப்பளைப் பிள்ளையார் கோவில் அருகே வசித்தவர்களைத் தமது வீடுகளுக்குச் செல்ல இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை. அத்துடன் இவர்களுக்கு 12 கூரைத்தகடுகள் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் வேறு இடங்களில் வீடுகளை நிர்மாணித்துக் கொள்ள தடிகள் கூட இல்லை. இவர்கள் கம்புத்தடிகளை வெட்டுவதற்கு காடுகளுக்குச் செல்ல இராணுவத்தினர் அனுமதி வழங்குவதும் இல்லை. இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றீர்கள்?

**பிரதியமைச்சர்:** தடிகளைப் பெற்றுக் கொள்வது குறித்து இராணுவத்தினருடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களது வீடுகளுக்குச் செல்ல அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும். இதுபோன்ற பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கமுடியும். இதேநிலை மட்டக்களப்பு மாவட்டத்திலும் இருந்தது. சகல பிரச்சினைகளையும் படிப்படியாகத் தீர்த்து வைத்தோம். இப்போது மக்கள் தமது சகஜ வாழ்க்கைக் குத் திரும்பியுள்ளனர்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.(சி)

# இந்தியாவின் வீடமைப்பு உதவி: நிபுணர்குழு இலங்கை வருகிறது

கொழும்பு, ஜூலை 1

இந்திய அரசின் வீடமைப்பு நிதி அரசினூடாகவே மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும். இது குறித்து ஆராய இந்திய நிபுணர் குழு அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இலங்கை வரவுள்ளது.

மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போது இதனைத் தெரிவித்தார்.

'இந்தியா 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க இணக்கம் தெரிவித்துள்ளது. இந்த வீடுகளுக்கான நிதி நேரடியாக மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்கு இந்திய அரசால் வழங்கப்படுமா?' என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (சி)

# தடைசெய்யப்பட்ட 7 லட்ச ரூபா வலைகள் கைப்பற்றப்பட்டன

காத்தான்குடி, ஜூலை 1

மட்டக்களப்பு, குருக்கள் மடம் வாவி பிரதேசத்தில் பொலிஸாரின் உதவியுடன் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது அரசால் தடை செய்யப்பட்ட சுமார் ஏழு லட்சம் ரூபா பெறுமதியான வலைகள், தோணிகள் கைப்பற்றப்பட்டன என மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.டி. ஜோர்ஜ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அதிகாலை மேற்கொண்ட இத் தேடுதலின்போது சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்ட நபர்கள் தப்பியோடிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தடை செய்யப்பட்ட வலைகளைக் கொண்டு மீன்பிடியில் ஈடுபடுவதால் மட்டக்களப்பு வாவியிலுள்ள 128 வகையான மீன் இனங்களில் 29 வகையான மீன் இனங்கள் முற்றாக அழிந்துவிட்டன எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதன்போது கைப்பற்றப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

(சி)

# சந்திரிகாவின் பாதுகாப்பு அதிகாரிக்கு 4 வருட கடூழியச் சிறைத் தண்டனை

கொழும்பு, ஜூலை 1

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளராகப் பணியாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் கருணாரத்னவுக்கு நான்கு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது எனத்தெரிவிக்கப்படுகிறது.

கண்டி நீதவான் பிரீத்தி பத்மன் சூரசேன் இந்த தண்டனையை வழங்கித் தீர்ப்பளித்துள்ளார். அத்துடன் 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி நுவரெலியா மாவட்டம் ஹங்குராங்கெத்த பிரதேசத்தில் பெரமடுல்ல மத்திய கல்லூரியில் வைத்து, ஹங்குராங்கெத்த பொலிஸ் பொறுப்பதிகாரியைக் கடுமையாகத் திட்டி அச்சுறுத்தினார் என முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரிக்கு எதிராக குற்றம்சுமத்தப்பட்டிருந்தது.

(சி)


# விவாத மேடை

# எமது இளையோரிடத்தே பெருகியுள்ள 'பேஸ்புக்' பாவனை

## சரியானது

எமது இளையோரிடத்தே பரவியுள்ள ''பேஸ்புக்''(Face book) பாவனை சரியானதே. இன்றைய இந்த நவீன உலகில் கணனியும் இணையமும் மனிதனின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துள் ளன.

சமூக இணையத்தளமான இந்த ''பேஸ்புக்''(Face book) இன்று சகல நாடுகளிலும் பரவியுள்ளது. எமது நாட்டிலும் பரவி வருகின்றது. எமது இளையோருக்கு இப்போதுதான் இணையப் பாவனை கிடைக்கத் தொடங்கியுள்ளது. எமது சமுதாயத்தை நோக்கினால் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து புலம்பெயர் நாடுகளில் எமது அதிகமான உறவுகள் வசித்து வரு கின்றனர். அவர்களையும் எம்மவர் களையும் இணைக்கும் ஓர் உறவுப் பாலமாக இந்த ''பேஸ்புக்'' காணப் படுகின்றது.




எமது சமுதாயத்தைப் பொறுத்த வரை பாடசாலைக் கல்வி அதாவது A/L முடிந்தவுடன் ஒன்றில் பல் கலைக் கழகம் அல்லாவிடின் வெளிநாடு செல்லுதல் என்கின்ற நிலைப்பாடு காணப்படுகின்றது. இதனால் வெளிநாடு செல்பவர் களுடன் தொடர்ந்து நட்புப் பேணுவதற்கு இந்த ''பேஸ்புக்''உதவி செய்து வருகின்றது. அத்துடன் நண்பர் களுக்கு இடையிலான புகைப்படப் பரிமாற்றம் மற்றும் தொடர்பாடலுக்கும் இது உதவி வருகின்றது. எனவே எம்மவர்களையும் குறிப்பாக எமது இளம் சமுதாயத்தை இணைக் கும் உறவுப்பாலமாக அமையும். ''பேஸ்புக்'' பாவனை சரியானதே. *மதுஸ், கல்வியங்காடு.*

## தவறானது

இளையோரிடத்தில் பரவியுள்ள பேஸ்புக் பாவனை எமது சமூகத்திற்கு பிழையானது. பல்லாண்டு கால தொன்மையும் பெருமையும் கொண்ட எமது சமூகத்தின் இளையோரிடத்தில் பரவியுள்ள 'பேஸ்புக்' மோகமானது எமது சமூகத்தில் தனிதன்மையையும் கலாசாரத்தையும் சீரழிப்பதாகவே மாறியுள்ளது.

கல்வியே குறிக்கோளாகக் கொண்டிருக்கும் எமது சமூகத்தினர் இப் 'பேஸ்புக்' பாவனையால் பெரிதும் சீரழிந்து வருகின்றனர்.

'பேஸ்புக்' என்பது ஓர் சமூகத் தளம். யாரும் யாருடனும் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளலாம். கூட்டாக விவாதங்களில் ஈடுபடுவர்கள் வெளிப்படை யாகவும் சுதந்திரமாகவும் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளலாம். இதற்கு அப்பால் நிழற்படங்கள், தமது முழு விவரத்தையும் பகிர்ந்து கொள்ளலாம். இவையெல்லாம் நமக்கு நன்கு தெரிந்தவர்களுடன் மட்டுமா பரிமாறி கொள்கிறோம். இல்லை தெரிந்த, தெரியாதவர்களுடனும் அறிமுகமான அனைவருடனுமே நாம் பரிமாறி கொள்கிறோம். இதன் விளைவு பல அனாவசிய மான சிக்கல்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. ஏற்கனவே கையடக்க தொலைபேசியின் பெருமளவான பாவனையால் நம் இளம் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினையும் சமூக சீரழிவுகளும் நாம் அறிந்ததே. இவ்வாறான செயற்பாடுகளால் நம் இளம் சமூகத்தினர் தவறான வழிக்கு செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பல இளைஞர்கள் பொழுது போக்கிற்காகப் பேஸ்புக் பாவனையை ஆரம்பிக்க தொடங்கி அதிலிருந்து விடுபடமுடியாமல், அது ஒரு வித போதை போல அவர்களை தொத்திக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. இதனால் அவர்களுடைய வாழ்வின் இலட்சியங்கள் கூட திசைமாறியிருக்கிறன. தடைசெய்யப்பட்ட கலாசார சீரழிவு இணையதளங்கள் அப்பட்டமான பாலியல் தொடர்பான வீடியோப் புகைப்படங்களை நலன்விரும்பிகள் தாமாகவே முன்வந்து சில இவ்வகைஇணையத்தளத்தில் பிரசுரிப்பதால் எமது இளம் சமூகம் தீமையை எதிர்நோக்குவதற்கு தயங்குவதல்ல என சொல்லவும் வேண்டுமோ.

*நிதர்சன், மானிப்பாய்.*

## விவாதமேடை

எமது இளையோரி த்தே பெருகியுள்ள

சரியானது ''பேஸ்புக் (Facebook) பாவனை. தவறானது

*உதயனின் இப்புது முயற்சிக்கு இளைய சமூகத்தின் விவாதத் திறனுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்படுகின்றது. எனவே எமது இளையோரிடத்தே பெருகியுள்ள ''பேஸ்புக் ( Facebook) பாவனை சரியானதா? தவறானதா? என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றிபெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் ஐவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த சிறப்பு விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டும் பரிசில் வழங்கப்படும்.*

## இளவல்கள் வட்டம் வாக்குச்சீட்டு

எமது இளையோரிடத்தே பெருகியுள்ள
''பேஸ்புக்''(Facebook)) பாவனை

சரியானது | தவறானது

பெயர் :-..........
முகவரி :-..........
:-..........
அடையாள அட்டை இல:..........

*உங்கள் தீர்ப்புகளை 29.07.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இவ் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.*

# வசுந்தராவிடம் கேளுங்கள்...

*சித்தன்*

*எமது சமூகம் கல்வியையே மூலதனமாகக் கொண்டு இயங் கும் சமூகம். பெற்றோர்கள் முழுமூச்சுடன் பிள்ளைகளைக் கல்வியில் ஈடுபடும்படி தூண்டிக் கொண்டிருப்பார்கள். எதிர்காலம், வாழ்க்கை எல்லாமே பல்கலைக்கழகம் தான் என்று நினைக்கும் பெற்றோருக்கும் வேறு ஏதும் சிந்தனைகளோ மாற்றுக்கருத்துக்களோ இன்றி அதன் நுழைவாயிலே A/L என்று நம்பிக் கையுடன் களமிறங்குகின்றனர். நம் மாண வர்கள். குறிப்பிட்ட வீதத்தினரே பல்கலைக் கழகத்தில் உள்வாங்குவதும் வெளியே செய்வ தறியாது திகைத்து நிற்பவர்களுக்கும் வழி தான் என்ன? பல்கலைக்கழகம் பூர்த்தி செய்தும் வேலையற்று இருக்கும் பட்டதாரி களின் நிலை சொல்ல வேண் டியதல்ல.*

*A/L பரீட்சை எடுக்க வேண்டும். இல்லா விட்டால் எந்த வேலையும் கிடைக்காது. பெரும் மட்டுமல்லமாண ... மூன்று பாடமும் சித்தியடைய ... பான்மையான பெற்றோர் சமூகமும் ... வர் சமூகமும் இவ்வாறே எண்ணம் கொண்டிருக்கின்றனர். ஆனால் A/L இல்லாவிட்டால் கல்விப் பாதை தடைப்படுமா? A/L மட்டும்தான் அதனூடாக பல்கலைக் கழக அனுமதி மட் டும்தான் நம்முன்னால் இருக்கின்ற ஒரேயொரு தெரிவா?A/L இல்லா மல் கூட, கல்வியில் உயர் பெறுபேறுகளை எட்டமுடியுமா? பட் டதாரி ஆக முடியுமா? முடியும் என்பதே நான் அண்மையில் சந்தித்த மாணவி வசுந்தராவின் பதில். யாழ்ப்பாணத்தைப் பின்னணியாகக்கொண்ட இந்த மாணவி எடுத்திருக்கும் முடிவு தைரியமானது மட்டுமல்ல, தீர்க்கமானதும் கூட. A/L இல்லாவிட்டால் அல்லது பல்கலைக்கழகம் செல்லாவிட்டால் வாழ்க்கையே இல்லையா என்று வருத்தப்படும் எத்தனையோ மாணவர்களுக்குத் தீர்வும் கூட... அவள் என்ன சொல்கிறாள் எண்டால் சும்மாபோங்க 2 வருடம் கஷ்ரப்பட்டு என்னதான் செய்யுறது. யூனிவேசிற்றி முடிந்தாலும் வெளியேதானே நிக்கிறம். ''எதையும் பிளான் பண்ணிப் பண்ணனும்'' என வடிவேல் பாணியில் சொன்னவளிடம் அப்படி என்னத்தைப் பிளான் பண்ணினீங்க என்றபோது நான் வந்து இப்ப A/L எடுக்கவில்லை. O/L லோட AAT, CAT ஏதாவது படிப்பம் ஏதோ கன Course கள் பற்றிச் சொல்லுறியள் என்ர Batch ஆக்கள் A/L முடிக்கும் போது நான் ஏதாவது CEMA, ACCA ஏதாவது தொடர்வேன். குறைஞ்ச வயசிலேயே பட்டதாரி ஆகிடலாம். எங்கட யூனிவேர் சிற்றியில பார்த்தீங்க பொதுவாக பெண்கள் எண்டா ஒரு கோஸ் முடிக்க வர 26 - 27 வயது வந்திடும். அப்புறம் கல்யாணம் செய்ததுடன் சரி. எங்கட கனவுகளை நிறைவேற்ற முடியாது! அது பற்றி எங்கட பெடியளுக்கும் கொஞ்சம் விளக்கமா சொல்லுங்கோ என்றதும் கண்டிப்பா ''நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' எனக்குத் தெரிந்த எல்லா Course பற்றியும் உங்ககூட பகிர்ந்துக்கிறன் என்று ஆரம்பித்தவரிடம் குறுக்கிட்டு இதெல்லாம் ஒரே இங்கிலீசா இருக்கு உங்களுக்கு இங்கிலிஸ் எப்படி? நீங்கவேற நானும் பள்ளிக்கூடத்தில் படிக்கேக்க ஆங்கிலப் பாடத்தைக் ''கட்'' அடிச்சனான் தான். வெளியே சொல்லிப் போடாதேங்கோ எனக்கு ஆங்கிலத்தில O/L ல எஸ். ஏன் யூனிவேசிற்றிக்கு ஆங்கிலம் தெரிஞ்சா படிக்கப் போறியள். அதேபோலதான் இதுவும் என்று சிரிக்கிறாள். அதவிட ஒன்று சொல்கிறன்.... (தொடரும்)*



# இளவல்கள் வட்டம்

## எப்போது புது வாழ்வு



*விடுகதையான வாழ்வில் விடை தேட விரைகிறேன்*
*இடம்பெயர் வாழ்வில் துன்பம் நீக்கத் துடிக்கிறேன்*
*குற்றமற்றவர் வாழ்வில் சிறை மீண்டுவர நினைக்கிறேன்*

*தரப்பாளின் வாழ்க்கையில் தவிக்கின்றன எம் உறவுகள்*
*தலைகால் புரியாமல் தடுமாறுது இங்கு எம் இளசுகள்*
*இங்கு கோயில்களில் கொண்டாட்டம்*
*அங்கு ஒரு வேளை உணவுக்கே திண்டாட்டம்*

*கோஷ்டியில் கோஷ்டி மோதல் கொண்டாடும் எம் தலைமுறை*
*வேண்டுகிறேன் இறைவா! போதும் உனக்கு அலங்காரம்*
*வேண்டும் அவர்களுக்கு நிம்மதியான புது வாழ்வு.*

*- கூரன், கட்டைப்பிராய்.*

**கவிதை எழுதி அனுப்பும் வாசகர்களில் 3 மாதத்திற்கு ஒருமுறை ஒரு சிறந்த கவிதை தேர்வு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.**

கேள்விக்கென்ன பதில்?- 76 இன் சரியான விடை **50 மாநிலங்கள்.**

## இளைஞர், யுவதிகளே!

*உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.*

பெயர் :-..........
முகவரி :-..........
:-..........
.......... ..........
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## கேள்விக்கென்ன பதில்?- 76இல் பரிசு பெறுவோர்

1. செல்வநாயகம் ரவிசாந், குறிஞ்சிக் குமரன் வீதி, வீரமனை குப்பிளான்.
2. கே.அரசேஸ்வரன், கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
3. சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.

# மீளக்குடியேறியவர்களில் கல்வீடுகள் உள்ள குடும்பங்களுக்குச் சிமெந்துப்பை விநியோகம்

கிளிநொச்சி, ஜூலை 1

கிளிநொச்சி கல்மடு நகர் கிராம அலுவலர் பிரிவில் மீள் குடியேறிய மக்களுக்கு இந்திய மக்களால் அன்பளிப் புச் செய்யப்பட்ட சிமெந்து வழங்கப்பட்டு வருகின்றது. ஒரு குடும்பத்திற்கு 8 பைக்கற்றுக்கள் வீதம் இது வழங்கப்பட்டு வருகின்றது.

இச்சிமெந்து முதற்கட்டமாக கல்வீடு உள்ளவர்களுக்கு திருத்தத்திற்காக வழங்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. சிமெந்தினால் கட்டப்பட்ட வீடு இல்லாதவர்களுக்கு சிமெந்து வழங்கப்படவில்லை. அவர்களுக்கு கூரை விரிப்புகளும் அதற்கான தடிகளுமே வழங்கப்படுகின்றன. இதனால் மக்களிடையே குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டபோது கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவில் 705 குடும்பங்கள் இது வரை மீளக்குடியமர்ந்துள்ள போதிலும் 1000 பைக்கற் சிமெந்தே முதற்கட்டமாகத் தமக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் இதனாலேயே முதலில் சிமெந்தால் கட்டப்பட்ட வீடுள்ளவர்களுக்கு திருத்தத்திற்கான சிமெந்து வழங்கப்படுவதாகவும் கூறப்பட்டது. (50-405)

## கூரைவிரிப்பு வழங்கப்படுகிறது

கிளிநொச்சி, ஜூலை 1

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவில் மீள் குடியமர்ந்துள்ள மக்களுக்கான கூரை விரிப்பு, அதற்கான தடிகளும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இக்கிராமத்தில் 705 குடும்பங்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ள நிலையில் இது வரை 475 குடும்பங்களுக்கு கூரைவிரிப்பு, தடி என்பன வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனையோருக்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

கூரைவிரிப்பு, தடி என்பன தனியொரு வரை குடும்ப அங்கத்தவராகக் கொண்ட குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் இக்குடும்பங்கள் பாதிக்கப்படுவதாகவும் தமக்கும் உரிய பொருள்களை வழங்க வேண்டும் எனவும் அவர்கள் சம்பந்தப்பட்டோரைக் கோருகின்றனர். (50-405)

# மன்னாரில் அண்மைக் காலமாக அதிகரிக்கும் கொள்ளைச் சம்பவங்கள்

## மக்கள் மத்தியில் அச்சம்

மன்னார், ஜூலை1

மன்னார் முருங்கன் கற்கடந்தகுளம் மற்றும் பிச்சைக்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளில் கடந்த 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஆயுதங்களுடன் வந்த நபர்கள் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 06 பேர் கொண்ட குழுவினரே மேற்படி கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் அனைவரும் துப்பாக்கி, கைக்குண்டு மற்றும் ஆயுதங்களுடன் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

கற்கடந்த குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும், பிச்சைக்குளம் பகுதியிலுள்ள 2 வீடுகளில் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டவர்கள் மன்னார் முருங்கன் மற்றும் மன்னார் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மேற்படிக் கொள்ளைச் சம்பவங்களையிட்டு அப்பகுதி மக்கள் பெரும் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர்.

மன்னாரில் கடந்த சில மாதங்களாக கொள்ளையர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதால், மக்களை தமது பணம், நகைகள் போன்றவற்றைப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு பொலிசார் ஆலோசனை வழங்கியிருந்தனர்.

கொள்ளை தொடர்பாக விசாரணைகளை மன்னார் பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். (50)

# கிளிநொச்சியில் எட்டுப் பாடசாலைகளில் அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி, ஜூலை 1

கிளிநொச்சி கல்வி வலயத்திலுள்ள எட்டுப் பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாக உள்ளது எனவும் அவற்றுக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாகவும் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா அறிவித்துள்ளார்.

மாசார் அ.த.க.பா, இயக்கச்சி அ.த.க.பா, ஐயனார்புரம் அ.த.க.பா, முரசு மோட்டை அ.த.க.பா. ஆகிய வகை II (பிரிவு - II) பாடசாலைகளுக்கும், கோவில்வயல் அ.த.க.பா, சண்ணாவில் அ.த.க.பா, ஊற்றுப்புலம் அ.த.க.பா, தர்மக்கேணி அ.த.க.பா ஆகிய வகை III (பிரிவு - III), பாடசாலைகளுக்கும் அதிபர் பதவி வெற்றிடமாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் வகை II பாடசாலை களுக்கு இலங்கை அதிபர் சேவை II,III மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை I, II ஆகிய தரங்களைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும் எனவும், வகை III பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை II,III மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை II ஆகிய தரங்களைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விண்ணப்பிப்பவர்கள் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து சேவையாற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என வும் கோரப்பட்டுள்ளது.

தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்கும் பாடசாலையின் பெயர் குறிப்பிட்ட சுய விவரங்களை எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பான விவரம் அடங்கிய கடிதங்கள் கிளிநொச்சி வலயப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (50-405)

# பூநகரி - கொழும்புத்துறை படகுச்சேவை தினமும் மூன்று தடவைகளாக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

கொழும்புத்துறை - பூநகரி பயணிகள் படகுச் சேவை தற்போது மூன்று தடவையாக அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்னர் இரண்டு தடவைகள் இந்தப் பயணிகள் படகுச்சேவை இடம்பெற்றிருந்தது.

மணியந்தோட்டம் துறையில் இருந்து இந்தப் பயணிகள் படகு காலை 6.30 மணி, காலை 10.30மணி, பி.ப 1.30 மணி ஆகிய நேரங்களில் புறப்படும். இதேபோன்று மண்ணீர் தலைத்துறையில் இருந்தும் மூன்று தடவைகள் சேவை இடம்பெறும்.

முப்பது பயணிகளைக் கொண்டு செல்லக் கூடிய மூன்று படகுகள் இந்தச் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. (50-224)

# சம்புக்குளம் கிராமத்தில் ''நேர்ப்'' பயனாளிகள் தெரிவு

கிளிநொச்சி , ஜூலை 1

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவில் உள்ள சம்புக்குளம் கிராமத்தில் 'நேர்ப்' வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக்கிராமத்திற்கு வருகை தந்த 'நேர்ப்' திட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் அடங்கிய குழுவினரால் இத்தெரிவு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவில் மீள்குடியேறிய மக்களுக்கு 'நேர்ப்' திட்டப் படிவங்கள் வழங்கப்பட்டு பூரணப்படுத்தி மீளப்பெறப்பட்டுள்ள நிலையிலேயே சம்புக்குளம் பகுதியில் இத்தெரிவு இடம்பெற்றுள்ளது. (50-405)

# நாவல்நகர் கிராமத்தில் 'சோஆ' தற்காலிக வீடுகளை அமைக்கும்

கிளிநொச்சி , ஜூலை 1

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் கிராம சேவகர் பிரிவில் உள்ள நாவல் நகர் கிராமத்தில் தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுக்க 'சோஆ' நிறுவனம் முன்வந்துள்ளது.

இதன்படி தற்போது குடியிருப்பதற்கு வீடு இல்லாதவர்களில் 70 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான ஆரம்பக் கட்ட செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் நாவல்நகர் கிராமத்தில் 35 பயனாளிகளும், ரங்கன் குடியிருப்பில் 35 பயனாளிகளும் தெரிவு செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (50-405)

# கல்மடுநகரில் மக்கள்கடை இல்லை; நிவாரணம் பெறுவோர் பெரும் சிரமம்

கிளிநொச்சி , ஜூலை 1

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் கிராமத்தில் மக்கள் கடை ஆரம்பிக்கப்படாமையால் கிராம மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மக்கள் கடையே இவ்வாறு ஆரம்பிக்கப்படாதுள்ளது. இக்கடை ஆரம்பிக்கப்படாமையால் மக்கள் தனியார் கடைகளிலேயே பொருள்களை கொள்வனவு செய்யவேண்டியுள்ளது. அத்துடன் உலக உணவுத்திட்ட நிவாரணம் பெறுவதற்கும் இக்கிராம மக்கள் பல கிலோ மீற்றர்கள் நடந்து கல்மடு பகுதி ஏக்கர் கிளைக்கே செல்ல வேண்டியுள்ளது.

அத்துடன் இக்கிராமத்தில் கரைச்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளையொன்றும் இயங்கி வருகின்றது.எனவே மக்களின் நிவாரணப் பொருள்களை இச்சங்கத்தில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், கல்மடுநகர் மக்கள் கடையினை உடனடியாக மீள ஆரம்பிக்க வேண்டும் எனவும் மக்கள் கோருகின்றனர். (50-405)

# மே 30 ஆம் திகதிக்கு முன் குடியமர்ந்தோருக்கு உலக உணவுத்திட்ட முத்திரை விநியோகம்

கிளிநொச்சி , ஜூலை 1

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்




பட்ட கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவில் கடந்த மே 30 ஆம் திகதிக்கு முன்னர் மீள்குடியமர்ந்த மக்களுக்கான உலக உணவுத் திட்ட முத்திரை விநியோகம் கல்மடுநகர் கிராம அலுவலர் அலுவலகத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதுவரை இந்த முத்திரையினைப் பெறாதவர்கள் விரைவாகப் பெற்றுக் கொள்ளுமாறும் உடனடியாக அம்முத்திரைக்கான பொருள்கள் வழங்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

மே 30 ஆம் திகதிக்கு முன்னர் குடியேறிய மக்களுக்கு ஒரு மாதம் கடந்த நிலையிலேயே முத்திரை வழங்கப்படுகின்றது. மீள்குடியேறியவுடன் இதனை வழங்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதேச மக்கள் கோருகின்றனர். (50-405)

கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் ஆளுநர் சபைக்கூட்டம் அண்மையில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், வடமாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம், ஓய்வுபெற்ற கிளிநொச்சி விவசாயக் கல்விப் பணிப்பாளர் க.வைரமுத்து, கிளிநொச்சி பிரதேச சபையின் விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதற் படத்திலும் கூட்டத்தில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

(படங்கள்: கிளிநொச்சிச் செய்தியாளர்)





ஏசியன் கணனி நிறுவனத்தின் புதிய கிளை அண்மையில் சாவகச்சேரிப் பகுதியில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் கே.தேவராஜா புதிய கிளையை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் கே.அருந்தவபாலன், ஆசிரியர் மார்க்கண்டு மற்றும் ஏசியன் கணனி நிறுவன உறுப்பினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# வலுவிழந்தோரின் வாழ்வில் 23 வருடங்களாக.....

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

தனது சிந்தனைத் திறனைப் பயன்படுத்தி பல்வேறு நுட்பங்களைப் புகுத்தி இத்தகைய உபகரணங்களை வடிவமைத்து வெற்றிகரமாக அவற்றைப் பாவனைக்கு அறிமுகப்படுத்தி வரும் இந்தப் பிரிவின் முகாமையாளர் வி.மகேந்திரகுமார், தமது நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட மின்கல சக்தியால் இயங்கும் சக்கர இருக்கைக்கு அண்மையில் கைத்தொழில் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சியில் முதல் பரிசு கிடைத்ததாகப் பெருமையுடன் தெரிவித்தார்.

மற்றொரு பிரிவான இயன்மருத்துவப் பிரிவு செயற்கை அவயவ சார்புறுப்பு மற்றும் நடமாடும் உபகரணப் பிரிவின் செயற்பாட்டுவெற்றிக்கு ஆதாரமாக அமைகிறது.

இந்த நிறுவனத்தின் புனர்வாழ்வுப் பணியாளர்கள் வாரத்தில் ஒருநாள் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று சத்திரசிகிச்சை விடுதிகளில் தங்கியுள்ள செயற்கை உறுப்புப் பாவனையாளர்களைச் சந்தித்து அவர்களுக்கு செயற்கை உறுப்புப் பராமரிப்பு முறைகள் உள்ளிட்ட ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

இயன்மருத்துவப் பிரிவிற்குப் பொறுப்பாகவுள்ள செல்வி த.தமயந்தி இது பற்றிக் குறிப்பிடுகையில், சலரோகத்தினால் அவயவம் இழப்பதும் பிறப்புவாசிக் குறைபாடுகள், மூளை முடக்குவாதம், பாரிசவாதம் என்பவற்றால் வலுவிழப்போர் தொகை தற்போது அதிகரித்து வருகிறது. இவ்வாறு பாதிப் புற்றவர்களுக்கு இலவச இயன் மருத்துவ சிகிச்சை வழங்கப்படுவதோடு அவயவம் இழந்தோருக்கு வைத்தியசாலையில் வாரந்தோறும் அவயவம் பொருத்துவதற்கான ஆலோசனையும் இயன் மருத்துவ நடவடிக்கைகளும் வழங்கப்படுகிறது. எமது புனர்வாழ்வுப் பணியாளர்கள் எமது நாட்டிலும் அயல் நாடான இந்தியாவிலும் இதற்கான பயிற்சிகள் பெற்றுள்ளனர் எனத் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் என்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி கே.உமாபதி, மாற்றுவலுவுள்ளவர்களான அவயவம் அகற்றப்பட்டோர், போலியோ மற்றும் பிறப்பு முதல் குறைபாடு உடையோருக்காகத் தனது சிறப்பான பணியைத் தொடர்ந்து வழங்கி வருகிறார். மாதம் தோறும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வரும் வருகை வைத்திய நிபுணர் வலுவிழந்தவர்களுக்கு என செயற்கை அவயவங்களையும் பல்வேறு வகையான குறைபாட்டு நிவர்த்தி உறுப்புகளையும் நடமாடத் தேவையான உபகரணங்களை யும் பரிந்துரை செய்கிறார். மேலதிக சிகிச்சை தேவைப்படுவோரை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறவும் சிபார்சு செய்து வருகிறார்.

அத்துடன் இந்த நிறுவனத்தால் முன்னெடுத்து வரப்படுகின்ற வெளிக்களப் புனர்வாழ்வு பணி, மிதிவெடியாலும் யுத்தத்தின் விளைவுகளாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் பயனுள்ள திட்டமாகும். இதன் மூலம் சமூகத்திலுள்ள மாற்று வலுவுள்ளவர்களை இனங்காணல், அவயவம் அகற்றப்பட்டவர்களின் வீடுகளுக்குச் சென்று சரியான முறையில் பகுதி அவயவங்களைப் பேண உதவுதல், பண்டேஜ் சுற்றுதல் முதலான செயற்கை அவயவம் பொருத்துமுன்னரான பராமரிப்பு முறைகள் என்பவை தொடர்பாக செய்முறை விளக்கம் இவர்களால் வழங்கப்பட்டு வருகின்றது.அத்துடன் தேவையான உறுப் புகளையும் உபகரணங்களையும் நிறுவனத்தில் பெற்றுக் கொடுக்க ஆவன செய்யப்படுகிறது. வைத்திய நிபுணர் உமாபதியின் ஆலோசனை தேவைப்படுவோரை அவரது மாதாந்த வருகையின்போது பார்வையிட ஏற்பாடுகளும் செய்து உதவி வருகின்றனர்.

இவ்வாறு பல்வேறு வழிகளில் சேவையாற்றி வரும் இந்த நிறுவனம் மாற்று வலுவுள்ளோர் தமது வாழ்க்கைச் செலவுக்காக தொழில் செய்யும் வருமானம் ஈட்டிக்கொள்ள தற்போது 25 ஆயிரம் ரூபாவை சுழற்சி முறை கடனாக வழங்கி வருகிறது. அது மட்டுமன்றி மாற்றுவலுவுள்ள பாடசாலை செல்லும் சிறுவர்களின் கல்விச் செலவுக்காக தகுதியானோருக்கு மாதாந்தம் 500 ரூபா வீதம் ஊக்குவிப்புத் தொகை வழங்கி வருகிறது.

மாற்றுவலுவுள்ளவர்களின் திறமைகளை வெளிக் கொண்டு வரும் நோக்கில் விளையாட்டு, கண்காட்சி நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்படுவதுடன் பங்கு கொள்வோர் பரிசுகள் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றனர். இதனால் மாற்றுவலுவுள்ளோர் மிக ஆர்வமாக ஈடுபட்டு தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு முற்றுமுழுதாக இலவச சேவைகளை வழங்கி வருகிறது. ஏனையோருக்கு நியாயமான கட்டண அறவீட்டுடன் செயற்கை உறுப்புகள், குறை நிவர்த்தி ஆதார உறுப்புகள், நடமாடும் உபகரணங்களை வழங்கி வருகின்றது.

இவ்வாறு இந்த நிறுவனம் தனது பணிகளை திறம்பட முன்னெடுப்பதற்கு அதன் முகாமைத்துவக் குழுவின் மற்றும் பணியாளர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவையே முக்கிய காரணமாகும். வைத்திய கலாநிதி திருமதி ஜெ.கணேச மூர்த்தி, வைத்திய கலாநிதி திருமதி செ.தெய்வேந்திரன் ஆகியோர் 1987 ஆம் ஆண்டிலிருந்து முகாமைத்துவக்குழு உறுப்பினர்களாக தொடர்ச்சியாக தம்மாலான சேவையை நிறுவனத்துக்கு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிறுவனத்தின் உதவியால் வாழ்க்கையைத் தன்னம்பிக்கையுடனும் துணிவுடனும் மேற் கொண்டுவரும் வலுவிழந்த ஒருவரான உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த திருமதி சின்னத்தம்பிரத்தினம் என்பவரின் கருத்தையும் இங்கு குறிப்பிட்டுக் கூறுவது பொருத்தமுடையதாகும். யாழ்.ஜெய்ப்பூர்வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் வழங்கிவரும் உதவி மூலம் இதுவரையும் ஐந்து தடவைகள் எனது இரண்டு செயற்கை கால்களையும் மாற்றியுள்ளேன். 1991 ஆம் ஆண்டு கொழும்பு செல்வதற்குச் சென்றபோது வவுனியாவில் இடம்பெற்ற ரயில் விபத்தின் போது எனது இரு கால்களும் முழங்காலுக்கு கீழாக அகற்றப்பட்டன. அன்றிலிருந்து எனக்கு செயற்கைக் கால்களை இலவசமாக வழங்கி என்னை நடமாட வைத்து வருகிறது இந்த நிறுவனம். இங்குள்ள பெண் பணியாளர்கள் மிகவும் அன்பாகவும் நட்புறவுடனும் என்னுடன் பழகினார்கள். எனது கணவர் அமரராகி பல வருடங்கள் ஆகிவிட்டன.எனக்கு ஒரு மகள்தான். அவரும் திருமணம் செய்து குடும்பமாக இருக்கிறார்- என்றார்.

வலுவிழந்த மக்களின் வாழ்வில் ஒளியேற்றி வரும் இந்த நிறு வனம் தொடர்ந்தும் தனது சேவையை முன்னெடுக்க வேண்டும். இந்த நிறுவனத்துக்குரிய தேவைகள் உரிய தரப்பினராலும் நன்கொடையாளர்களாலும் பூர்த்தி செய்து கொடுக் கப்பட வேண்டும். இவ்வாறான நிறு வனங்களின் சேவை தொடர்ந்தும் மக்களுக்குத் தேவை. ✱

## சோமஸ்கந்தாவுக்கு புதிய அதிபர்

கோப்பாய், ஜூலை 01

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரிக்கு புதிய பிரதி அதிபராக வி.அரசகேசரி கடந்த திங்கட்கிழமை தொடக்கம் பதவியேற்றுள்ளார்.

இதேவேளையில் இப்பாடசாலையில் அதன் ஆரம்பப்பிரிவு இசுறு திட்டத்தின் கீழ் தனிப்பாடசாலையாக புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை என்ற பெயருடன் தோற்றம் பெற்றுள்ளது.

இப்பாடசாலையின் முதலாவது அதிபராக இ.கோகுலராகவன் கடந்த 16ஆம் திகதி தொடக்கம் கடமைப் பொறுப்புக்களை ஏற்றுள்ளார். (50-72)


## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
### வெற்றுப் பொருள்கள் கேள்வி விண்ணப்பம் கோரல்

எமது சங்கத்தால் பின்வரும் விவரப்படியான வெற்றுப் பொருள்கள் கேள்வி விண்ணப்பம் கோரப்பட்டு விற்பனை செய்யவுள்ளோம்.

விவரம் வருமாறு:

| | |
|---|---|
| 01. அரிசி பை | : 5914 |
| 02. அரிசி பை சிறிது | : 645 |
| 03. மா பை | : 4624 |
| 04. மா பை சிறிது | : 2124 |
| 05. சீனி பை | : 1937 |
| 06. மறுபை | : 2605 |
| 07. உப்பு பை | : 31 |
| 08. மறுசாக்கு | : 204 |
| 09. அரிசி கழிவு பை | : 500 |
| 10. மா கழிவு பை | : 500 |
| | 19084 |

கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிக்க விரும்புவோர் சங்க தலைமைக் காரியாலயத்தில் வேலை நாள்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை வெற்றுப் பொருள்களைப் பார்வையிடலாம்.

நிபந்தனைகள்

- ★ கேள்வி வைப்பாக ரூபா 1000.00 மீளளிக்கப்படாத வைப்பாக இடப்படல் வேண்டும்.
- ★ சங்கத்தால் வழங்கப்படும் கேள்வி விண்ணப்பப் படிவத்தை ரூபா 25 செலுத்திப் பெற்று, பூரணப்படுத்தி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- ★ கேள்வி விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ இடது பக்க மேல் மூலையில் "வெற்றுப் பொருள்களுக்கான கேள்வி விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு பொது முகாமையாளர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை என்ற முகவரிக்கு 12.07.2010ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பொது முகாமையாளர்,
சங்கானை ப.நோ.கூ.சங்கம்.

(சி/568773)



## வேலையாள்கள் தேவை

யாழ்.மாநகர எல்லைக்குள் வசிக்கும் ஓரளவு படித்த பெண்கள் (அனுபவமுள்ள/பழக விரும்புபவர்கள்) தேவை. நேரில் வரவும்.

லைடன் புடவையகம்
ஆஸ்பத்திரி வீதி,
(பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



வடமாகாண கரபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க உறுப்பினர் சி.சிவசொரூபனின் அன்புத் தந்தை

### கோவிந்து சிவசம்பு

அவர்கள் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

வடமாகாண கரபந்தாட்ட
சங்க உறுப்பினர்கள்.

(100089)

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து இராஜரத்தினம்

வட்டு-மேற்கு, சிவன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஒய்வு பெற்ற முதுபெருமறிஞர் சரவணமுத்து - இராஜரத்தினம் நேற்று (30.06.2010) புதன்கிழமை சிவபதம் எய்தினார் அன்னார் திருமதி சரவணமுத்து (ஆசிரியர்) தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் திருமதி கமலவேணியின் அன்புக் கணவனும் அன்பழகன் (USA-B Sc eng, MIE, AMIE, Ci eng), FCMA,CPA), கமலவதனி (USA-BSc eng, M Phil MSC), மணிவாசகன் (B Sc, MBBS), மலர்மங்கை, மணிவண்ணன் (Management Consultant), திருவரங்கன் (USA- B Sc eng, MSc eng, Ph D), சிவமங்கை, கேதாரகௌரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரத்தினாபரணம் அமரர் செகராஜசிங்கம், மற்றும் சுகிர்தமலர் ஆகியோரின் சகோதரனும், அபராஜிதா, ரவிசங்கர், சர்மினி, தர்மபாலன், மாதுமை, தேவராஜ், துஷ்யந்தி ஆகியோரின் அன்பு மாமானாரும் சகாயன், சரேசன், ஜெயசிறி, சகானா, ஹரிசங்கர், ஜெய கௌரி ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், நல்லதம்பி, பாலசுப்பிரமணியம், சச்சிதானந்தசிவம், வேதாந்தசிவம், அரசகுலராணி, அற்புதநாதன், அஞ்சலிதேவி(UK), கலையரசி ஆகியோரின் மைத்துனரும் புவனசுந்தரம், கிருபானந்தராஜா (UK), தயாளன், கோகிலநாயகி, பரிபூரணதேவி, அன்பரசி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் வசந்தி (France), ஜெயந்தி (Norway), சிவானந்தன்(UK), சாந்தி (UK), ஆனந்தி(UK), பாலேந்திரன் (Swiss), வேதரஞ்சினி, சிறிரஞ்சினி, தாரணி, கேசிகன், பிரகாசன் (UK), சுசீவன், கோமினி கிறிஷ்ணா, பாலமுரளி கிருஷ்ணா ஆகியோரின் மாமானாருமாவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் (வட்டுக் கோட்டை) நடைபெறும் என்பதையும், இறுதிக் கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்பதையும் உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

சிவன் கோவிலடி,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
Dr.R. மணிவாசகன் (மகன்)
0774933976 (யாழ்.போதனா வைத்தியசாலை)

(100090)

## அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின்
# நூற்றாண்டு வெற்றிக் கிண்ணத்தை அருணோதயக் கல்லூரி அணி கைப்பற்றியது

வலி.வடக்கு, ஜூலை 01

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய நூற்றாண்டையொட்டி யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 17 வயதுப்பிரிவின் பெண் அணிகளுக்கு இடையே நடத்திய கரபந்தாட்டப் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி சம்பியனாகியது.

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் அளவெட்டி அருணோதயக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இப்போட்டியில் முதல் இரண்டு நேர்சுற்றுக்களை அருணோதயக் கல்லூரி 25:12, 25:17 புள்ளிகள் என்ற அடிப்படையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை வென்று நூற்றாண்டு வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

மூன்றாம் இடத்தை தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி பெற்றுக்கொண்டது. (50-86)

## முன்பள்ளி விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 01

சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் கலந்துகொள்ளவுள்ளார்.

## யாழ்.பிரதேச செயலக அணியை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது நல்லூர்

வலி.வடக்கு, ஜூலை 1

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுத் திணைக்களம், மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணி மாவட்ட சம்பியனகியது.

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியும் நல்லூர் பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய நல்லூர் பிரதேச செயலக அணி 12 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 93 ஓட்டகங்களை பெற்றுக் கொண்டது.

கவிந்தன் நான்கு ஆறுகள் ஒரு நான்குடன் 50, பகீதரன் 16, யசிந்தன் 10 ஓட்டகங்களைப் பெற்றுக்கொண்டனர்.

யாழ்ப்பாணம் பிரதேச செயக அணியைச் சேர்ந்த றிக்கி 03 ஓவர்கள் பந்துவீசி 31 ஓட்டங்களைக் கொடுத்து மூன்றாவது ஓவரில் 3 விக்கெட்டுக்களையும், சாள்ஸ், அருண் தலா 3 ஓவர்கள் பந்து வீசி முறையே 07, 08 ஓட்டங்களைக் கொடுத்து தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். பிரதேச செயலக அணி 12:4 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது.

றிக்கி 15 ஓட்டங்களையும், அலெக்மேனன் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

நல்லூர் பிரதேச செயலக அணியைச் சேர்ந்த வினோதன் 2.4 ஓவர்கள் பந்துவீசி 9 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், சியாம்சன், பகீதரன் முறையே 06, 10 ஓட்டங்களைக் கொடுத்து தலா 02 விக்கெட்டுக்களையும், கவிந்தன், டொனி முறையே 16, 08 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (50-86)




## பாடசாலைகளின் மாகாண மட்ட சதுரங்கச் சுற்றுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 01

வடமாகாண பாடசாலைகள் கலந்து கொண்ட சதுரங்கச் சுற்றுப்போட்டி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கடந்த 23 ஆம், 24 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகள் வருமாறு:

**15 வயதின் கீழ்- ஆண்கள்**

முதலாம் இடம்-பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, இரண்டாமிடம்-யாழ்.இந்துக் கல்லூரி, மூன்றாமிடம்- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

**19 வயதின் கீழ்- ஆண்கள்**

முதலாம் இடம்- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, இரண்டாமிடம்- யாழ். இந்துக் கல்லூரி, மூன்றாமிடம்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**15 வயதின் கீழ்- பெண்கள்**

முதலாம் இடம்- அளவெட்டி அருணோதயக் கல்லூரி, இரண்டாம் இடம்- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உ.த.பாடசாலை, மூன்றாம் இடம்- யாழ். இந்து மகளிர் கல்லூரி.

**19 வயதின் கீழ்- பெண்கள்**

முதலாம் இடம்- யாழ்.இந்து மகளிர் கல்லூரி, இரண்டாம் இடம்- வேம்படி மகளிர் கல்லூரி, மூன்றாம் இடம்- வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகள் செப்ரெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றத் தகுதி பெற்றுள்ளன. (50)

## பிரதேச செயலகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டம் நாளை மறுதினம் அத்தியார் இந்துவில் ஆரம்பம்

வலி.வடக்கு, ஜூலை 01

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவு, யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்தும் ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* நல்லூர் பிரதேச செயலக அணி எதிர் சாவகச்சேரி பிரதேச செயலக அணி.
* ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி எதிர் உடுவில் பிரதேச செயலக அணி.
* தெல்லிப்பழை பிரதேச செயலக அணி எதிர் கோப்பாய் பிரதேச செயலக அணி.
* மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி எதிர் பருத்தித்துறை பிரதேச செயலக அணி.
* வேலணை பிரதே செயலக அணி எதிர் சங்கானை பிரதேச செயலக அணி.
* காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி எதிர் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி.
* யாழ்ப்பாணம், கரவெட்டிப் பிரதேச செயலக அணிகள் இரண்டாம் சுற்றில் இருந்து மோதவுள்ளன. (50-86)

## கனோஜன் அடித்த கோலினால் வென்றது யாழ்.மத்திய கல்லூரி

வலி.வடக்கு, ஜூலை 01

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளினது 13 வயதுப் பிரிவு ஆண்களுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளுக்கும் கோல்கள் பெறும் வாய்ப்புகள் கிடைக்கப்பெற்ற போதிலும் இரு அணிகளும் அதனை உரிய முறையில் பயன்படுத்தத் தவறின.

முதல்பாதி ஆட்டம் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்குச் சாதகமாகக் காணப்பட்ட போதிலும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.



இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டன. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் புனித ஹென்றியரசர் கல்லூரிக்குச் சமனாக விளையாடியது.

ஆட்டம் முடிவடைய 3 நிமிடங்கள் இருக்கும் போது யாழ்.மத்திய கல்லூரி முன்னணி வீரர் அன்ரன் கனோஜன் தனக்கு கிடைத்த பந்தை உரிய முறையில் முன் நகர்த்தி அடித்து ஒரு கோலைப் பெற்றுக் கொண்ட நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியை வென்று சம்பியனாகியது. (50-86)

## பாஷையூர், மணற்காடு அன்ரனிஸ் அணிகள் வெற்றி பெற்றன

யாழ்ப்பாணம், ஜூலை 1

தியாகிகள் தின உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆட்டம் ஒன்றில் பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி ஆகியன வெற்றி பெற்றன.

தியாகிகள் தினத்தை முன்னிட்டு பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பு நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த சனிக்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழக அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் இரண்டு அணியினரும் கோல் போடாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

இதனாற் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணியை 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (50-23)




இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில், அனுசரணையாளரான "சமபோஷா" நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் எஸ்.மனோறமோநாதன் உரையாற்றுவதையும், 511ஆவது படைகளின் கட்டளைத்தளபதி கேணல் அபய குணசேகரா, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி ஆகியோர் பரிசில்களை வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள் - நேசன்)*

## VAN WEST CLINIC AND NURSING HOME


வண். மேற்கு வைத்தியசாலை (கங்காதரன்)
Dr. கங்காதரனின் வழிகாட்டலில்
பின்வரும் சேவைகள் 01.07.2010 இன்றிலிருந்து
நடைபெறுகின்றன.

01. இரவு - பகல் வைத்திய சேவை
02. தங்கிச் சிகிச்சை பெறல் (வார்ட் வசதி)
03. பொது வைத்தியம்
04. நிபுணர்களின் வைத்திய ஆலோசனைகள்
05. சத்திர சிகிச்சை நிபுணர்களின் ஆலோசனை/சத்திரசிகிச்சை
06. மகப்பேற்று வைத்தியமும் சத்திர சிகிச்சையும்
07. கண் வைத்தியமும் சத்திர சிகிச்சையும்
08. மருந்தகம்
09. ஆய்வுகூட வசதி
10. E.C.G.
11. வசதியான வாகனத் தரிப்பிடம்

(100092)

நிர்வாகம்:
வண். மேற்கு வைத்தியசாலை,
அப்பலோ வைத்தியசாலை.
0212221697

இல.18, ஐயனார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தோற்றம்:
05.05.1934

மறைவு:
11.07.2009

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் உயர்திரு
அப்பாத்துரை இராசரத்தினம்
(முன்னாள் இ.போ.ச.சாரதி)

எங்களை விட்டு மறைந்து
ஆண்டொன்று சென்றாலும்
உங்கள் நினைவு என்றும்
எங்களை விட்டு அகலாது....

(100094)

குடும்பத்தினர்
(கனடா)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில்:
13.01.1988

ஆழியின் பிடியில்:
19.05.2010



கடலில் காவியமான
## செல்வன் நிர்மலானந்தன் நிராஜ்

கடந்த 19.05.2010 புதன்கிழமை அன்று தொண்டைமானாறு மயிலியதனைக் கடலில் நண்பர்களுடன் நீராடி நீந்தி விளையாடச் சென்ற எமது செல்வம் திரும்பி வராமல் எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி அவ்வுலகம் சென்றிருப்பார் எனும் பரிதாப முடிவுக்கு வரநிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

எமது இந்து சமய விழுமியங்களுக்கு இணங்க நாளை (02.07.2010) வெள்ளிக்கிழமை அந்தியேட்டிக் கிரியைகள் கீரிமலைத் தீர்த்தக் கடற்கரையில் காலை 6.30 மணிக்கு நடைபெறும். இதனைத் தொடர்ந்து வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எமது மயிலியதனை இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெறும்.

இந்நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம். எம் செல்வத்தின் துன்பியல் நிகழ்வையிட்டு நேரில் சமுகம் தந்தவர்கள் மற்றும் பல வகைகளிலும் எம்துயர் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியறிதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மயிலியதனை,
தொண்டைமானாறு. (சி-568770)

நிர்மலானந்தன்
(தந்தை)

## விஷமிகளின் செயலால் குடும்பஸ்தரின் கால் முறிவு

யாழ்ப்பாணம், ஜூலை1

விஷமிகளால் வீதியில் வெட்டிப் போடப்பட்டிருந்த குழைக் குவியல் மீது மோட்டார் சைக்கிள் சில்லு ஏறி சறுக்கியதில் குடும் பஸ்தர் ஒருவரின் கால் முறிந்தது.

நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணிக்கு கல்வயலில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் தில்லை நடேசு (வயது 52) என்பவர் நேற்று சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஒ-207)

## தென்மராட்சியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தீவிரம்

சாவகச்சேரி, ஜூலை1

தென்மராட்சியில் மட்டுவில், சரசாலைப் பகுதிகளில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாக சாவகச்சேரி மாவட்ட சுகாதார வைத்தியதிகாரி பணிமனை அறிவித்துள்ளது. டெங்கு பாதிப்பால் நேற்று அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சந்திரபுரம், சரசாலைப் பகுதிகளில் டெங்குநோய் பரவாது தடுக்க சுகாதாரத் திணைக்களம் துரித நடவடிக்கைகளை எடுத்துள்ளது. (ஒ-131)

## இராமாவில் முகாம் அகதிகள் அறுவருக்கு வேலை வாய்ப்பு

தென்மராட்சி, ஜூலை1

கொடிகாமம் இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்தவர்களில் ஆறு பேருக்கு கொழும்பில் உள்ள தனியார் கம்பனியில் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கொடிகாமத்தில் நேற்று இடம்பெற்ற சிவில் அலுவலக திறப்பு விழாவில் கம்பனியின் பொறியியலாளரினால் வேலை வாய்ப்புக்குரிய கடிதங்கள் வழங்கப்பட்டன.

52ஆவது படையினரின் வேண்டுகோளுக்கமைய இந்த ஆறு பேருக்கும் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

## பாதிக்கப்பட்டோருக்கு இலவச கைகள்

தென்மராட்சி, ஜூலை1

கைகளை இழந்த இளம் சமூகத்தினருக்கு சமூக சேவைகள் திணைக்களத்தினரால் இலவசமாக செயற்கைக் கைகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களால் கோரப்பட்டுள்ளன.

கொழும்பில் உள்ள உதவியற்றோருக்கு ஆதரவளிக்கும் சங்கம் 20 செயற்கைக் கைகளை விரைவில் வழங்கவுள்ளது. ஆதலால் தேவையுடையவர்கள் தத்தமது பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

## ஆங்கில தினப் போட்டிகள்

தென்மராட்சி, ஜூலை1

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு இடையிலான ஆங்கில தினப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறும்.

கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளுக்கான குழுப் பாடல் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் -

ஆரம்பப் பிரிவு நிலை I, II ஆகியவற்றுக்கான அபிநயப் பாடல் போட்டி சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையிலும் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-207)

## நிலையறி பரீட்சை

சாவகச்சேரி, ஜூலை1

ஜேர்மன் தொழில்நுட்ப வலய (ஜி.ரி.ஸற்) வலயப் பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான நிலையறி பரீட்சை இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.45 இற்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)


### விற்பனைக்கு

புதிய Micro wave oven (மைக்றோ வேவ் அவண்) Samsung மற்றும் Lumala சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தினமும் பி.ப.5.15 இற்கு பின்னர் சந்திக்கலாம்:
தொடர்பு: குணம், 517, நாவலர் வீதி, வைமன் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.


## 50 வருட அரச சேவையைப் பாராட்டுகின்றோம்



இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில்ஓய்வூதியத்திட்ட நடைமுறைப்படுத்தலில் யாழ்.மாவட்டத்தினை அகில இலங்கை ரீதியில் முதல் இடத்திற்கு நகர்த்திய பெருமைக்குரிய அரசாங்க அதிபர்

### உயர்திரு.க.கணேஷ்

அவர்கள்

50 ஆண்டு தனது அரச சேவையைப் பூர்த்திசெய்து ஓய்வு பெற்றுள்ள நிலையில் அவரின் அர்ப்பணிப்புடனான சேவைக்காக அவரை வாழ்த்துவதுடன், அவரது ஓய்வுகாலத்தில் சகல சௌபாக்கியங்களையும் அவர் பெற்று மேலும் யாழ்.மாவட்ட மக்களுக்கு பல சேவைகளை வழங்க வேண்டும் எனவும் இறை ஆசி வேண்டுகின்றோம்.

இலங்கை சமூக பாதுகாப்புச் சபை
உத்தியோகத்தர்கள் (மாவட்டச் செயலகம்).

(100097)

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர்
உயர்திரு.கந்தையா கணேஷ் அவர்கள்
ஓய்வுபெறுவதை முன்னிட்டு அவரது சேவையைப் பாராட்டி
எமது நன்றி நிறைந்த வாழ்த்துக்கள்



யாழ்.மாவட்ட அரச அதிபராகப் பதவியேற்றபின் சுனாமி, நிசா ஆகிய இயற்கை அனர்த்த காலங்களின் பின் எமது சமூகத்திற்கு அவர் ஆற்றிய அளப்பரிய சேவைகளை நினைவுகூர்ந்து எமது நன்றியையும், வாழ்த்துக்களையும் இதய பூர்வமாகத் தெரிவித்து அவரது எதிர்காலம் சீரும் சிறப்புடனும் அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து நன்றியுடன் வணங்கி நிற்கின்றோம்.

இல.100, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி-568781)

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களின் சமூகம் சார்பாக
யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம்.

## மரண அறிவித்தல்



## நாகலிங்கம் சிவஞானசுந்தரம்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிவஞானசுந்தரம் அவர்கள் 30.6.2010 புதன்கிழமை கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (பொழிச்சி மணியம்) மற்றும் அன்னலட்சுமி (உரும்பிராய்) அவர்களின் அன்பு மருமகனும், காந்திமதி அவர்களின் அன்புக் கணவரும் முரளி (ஜேர்மனி), கஜந்தி (HNDA யாழ்ப்பாணம்), யேசுதரன் (இத்தாலி), நிஜாந்தி (யாழ். பல்கலைக்கழகம் நுண்கலைக்கழக மாணவி), அவர்களின் அன்புத் தந்தையும் மற்றும் காலஞ்சென்ற இரத்தினசிங்கம், பத்மநாதன் (பொலிஸ்), மற்றும் தனலட்சுமி (மானிப்பாய்), கிருஷ்ணதேவி (மல்லாகம்), கனகாம்பிகை (ஊரெழு), கனகேந்திரராஜா (ஹொலண்ட்) ஆகியோரின் சகோதரரும் பரமேஸ்வரி (அமெரிக்கா), திருமங்களம் (ஜேர்மன்), பராசக்தி (ஜேர்மன்), வேலாயுதபிள்ளை (ஜேர்மன்), வெற்றிவேலாயுதபிள்ளை (உரும்பிராய்), வசந்தராணி (ஜேர்மன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (01.07.2010) மாலை 3 மணிக்கு சிவன்வீதி, உரும்பிராய் கிழக்கு உரும்பிராயிலுள்ள இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர் Tel: 077 9228888

# அமெ. - ஆப்கான் கூட்டுப்படைத் தாக்குதல் குனார் மாநிலத்தில் 150 தீவிரவாதிகள் பலி!

வாஷிங்டன், ஜூலை 01

ஆப்கானிஸ்தானில் தஞ்சம் புகுந்திருந்த பாகிஸ்தான் தலிபான் தீவிரவாதிகள் மீது அமெரிக்க - ஆப்கானிஸ்தானிய கூட்டு இராணுவத்தினர் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் 150 தீவிரவாதிகள் பலியானார்கள்.

பாகிஸ்தானின் தெற்கு வசிரிஸ்தான் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் தீவிரவாதிகளுக்கு எதிராக அதிரடி வேட்டையை மேற்கொண்டுள்ளது. இதனால், தலிபான் தீவிரவாதிகள் பெருமளவில் அங்கிருந்து தப்பி அண்டை நாடான ஆப்கானிஸ்தானில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானிலுள்ள குனார் மாநிலம் பாகிஸ்தான் எல்லையில் உள்ளது. இங்குள்ள மார்வாரா மாவட்டத்தில் 200 இற்கும் மேற்பட்ட தலிபான் தீவிரவாதிகள் முகாமிட்டிருந்தனர். இந்தத் தகவல் கிடைத்ததும், அமெரிக்க ஆப்கானிஸ்தான் இராணுவத்தினர் திடீர் தாக்குதலை மேற்கொள்ளத் தீர்மானித்தனர்.

இராணுவச் சிப்பாய்கள் நள்ளிரவில் ஹெலிக்கொப்டர்களில் அழைத்துவரப்பட்டு குனார் மாநில மலைப்பகுதிகளில் இறக்கப்பட்டனர். கிட்டத்தட்ட 700இற்கும் மேற்பட்ட சிப்பாய்கள் ஹெலிக்கொப்டர்கள் மூலம் இறக்கப்பட்டனர். பொழுது விடிவதற்கு முன்பே அவர்கள் அங்கு முகாமிட்டிருந்த தலிபான்கள் மீது தாக்குதல் நடத்தத் தொடங்கினார்கள்.

தலிபான்களும் உஷாராகிப் பதிலடி கொடுத்தனர். இந்தச் சண்டை மிகப் பயங்கரமாக இருந்தது. ஞாயிற்றுக்கிழமை காலை தொடங்கிய தாக்குதல், மறுநாள் திங்கட்கிழமை காலைவரை நீடித்தது. இதில் 150 தலிபான்கள் பலியானார்கள். இவர்களில் பலர் பாகிஸ்தான் தலிபான்கள் ஆவர். அமெரிக்க - ஆப்கானிஸ்தான் இராணுவத் தரப்பில் 2 பேர் பலியாகியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் பற்றி முன்கூட்டியே எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை என்று அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்தப் பகுதியின் துணை ஆளுநர் தீவிரவாத இயக்கத்தில் கொமாண்டராக இருந்தவர். இதனால் அவருக்கு இந்தப் பகுதியைப் பற்றி நன்கு தெரியும். அவரின் உதவியுடன்தான் இராணுவம் தாக்குதலுக்கான திட்டத்தை வகுத்தது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

# சொலமன் தீவில் பூகம்பம்

ஹொனிரா(சாலமன் தீவு), ஜூலை 01

வடக்குப் பசிபிக் கடலிலுள்ள சொலமன் தீவில் செவ்வாய்க்கிழமை பூகம்பம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.7 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

கடலுக்கு அடியில் 35 கி.மீ. ஆழத்தில் இந்தப் பூகம்பம் ஏற்பட்டுள்ளது. இந்த பூகம்பத்தால் ஆழிப்பேரலை எச்சரிக்கை விடப்படவில்லை. சொலமன் தீவின் தலைநகர் ஹொனிராவுக்கு வடகிழக்கே 112 கி.மீ. தொலைவில் இந்தப் பூகம்பம் மையம் கொண்டிருந்தது.

சொலமன் தீவில் கடந்த சனிக்கிழமையும் பூகம்பம் ஏற்பட்டது. இதன் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.9 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது. அது போல, ஏப்ரல் 2007இல் 8.0 ரிச்டர் அளவிலான பூகம்பத்தால், ஆழிப்பேரலை ஏற்பட்டு 50 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். மற்றும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்துள்ளனர்.

பசிபிக் கடலிலுள்ள சொலமன் தீவில் அடிக்கடி பூகம்பங்கள் ஏற்படுவதுண்டு.

# ஒபாமாவின் இந்தியப் பயணம்: பாதுகாப்பு ஆலோசகர் வருகை!

டொரண்டோ, ஜூலை 01

இந்தியாவுக்கு வருகை தர உள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்ய அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேம்ஸ் ஜோன்ஸ் இந்த மாதம் டில்லி வரவுள்ளார். ஓய்வுபெற்ற இராணுவ ஜெனரல் ஜோன்ஸ், தற்போது பாதுகாப்பு ஆலோசகராக உள்ளார்.

ஜனாதிபதி பராக் ஒபாமா, இந்த ஆண்டு நவம்பரில் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார். இவரது பயண விவரத்தை இறுதிசெய்வது தொடர்பாக இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனனை ஜேம்ஸ் சந்தித்துப் பேசுவார்.

ஜூலை இரண்டாவது வாரத்தில் ஜோன்ஸ் இந்தியா வந்து பாதுகாப்பு ஏற்பாடுகள், ஒபாமா செல்லும் இடங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவை குறித்து ஆய்வுசெய்வார்.

# பாகிஸ்தான் மலைப்பகுதியில் அல்-குவைதா தலைவர் ஒசாமா

## அமெ. புலனாய்வு அமைப்பு தகவல்

நியூயோர்க், ஜூலை 01

சர்வதேச தீவிரவாதி ஒசாமா பின்லேடன், பாகிஸ்தானின் மலைப்பகுதியில் ஒளிந்திருக்கிறார் என அமெரிக்கப் புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏ. தெரிவித்துள்ளது.

சி.ஐ.ஏ. இயக்குநர் லியோன் பனெட்டா குறிப்பிடுகையில், ''மிகப் பின்தங்கிய பகுதியில் பின்லேடன் ஒளிந்திருக்கலாம். பாகிஸ்தானின் அந்த மலைப்பகுதி மிகவும் கடினமானது. செல்வதற்கு இயலாத உலகின் மிக ஆபத்தான பகுதி'' என்றார்.

2000 ஆம் ஆண்டிலேயே ஆப்கானிஸ்தானிலிருந்து பாதுகாப்புக்காக பாகிஸ்தானுக்குள் பின்லேடன் புகுந்திருக்கக்கூடும். அங்கு பெரிய பாதுகாப்பு வலையத்துக்குள் பின்லேடன் இப்போது இருக்கிறார் என உறுதியான தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், சரியான இடத்தை அறிய உளவுத் துறையால் இன்னும் முடியவில்லை'' என்றும் லியோன் கூறினார்.

# மனைவியைக் கொன்ற இந்தியருக்கு ஆஸியில் 17 வருடகாலச் சிறை

ஆஸ்திரேலியாவில் தனது மனைவியைக் கொலைசெய்த இந்தியரான சுக்மந்தர் சிங்குக்கு, நீதிமன்றம் 17 வருடகாலச் சிறைத்தண்டனை விதித்தது.

இந்தியாவில் வசித்தவர் சுக்மந்தர் சிங். இவரது மனைவி மகிந்தர் கவுர். இவர்களுக்கு 4 குழந்தைகள் உள்ளனர். இருந்தா லும் கணவன் மனைவிக்கிடையில் தினமும் சண்டைதான். சுக்மந்தர் சிங் தினமும் குடித்துவிட்டு வந்து மனைவியை அடித்து உதைப்பார்.

இந்தச் சண்டையை பார்க்கப் பிடிக்காத மூத்த மகள் சராப்ஜித் கவுர் (வயது - 21) படிப்பதற்காக ஆஸ்திரேலியா வந்தார். இங்கு வந்த பின்னர் தன் தாயாரைக் காப்பாற்றவேண்டும் என்ற நோக்கத்துடன் அவரை ஆஸ்திரேலியாவுக்கு கடந்த 2008ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அழைத்துக்கொண்டார்.

சில மாதங்களுக்குப் பின்னர் சுக்மந்தர் சிங்கும் ஆஸ்திரேலியாவுக்கு வருவதற்கு ஏற்பாடு செய்யும்படி மகளை தொந்தரவு செய்தார். இதன் பின்னர் சில உறுதி மொழிகளைப் பெற்றுக்கொண்டு அவரையும் சராப்ஜித் அழைத்துக்கொண்டார்.

இங்கு வந்த பின்னர் அவர் சிறிது காலம் நல்லபடியாக இருந்தார். பிறகு அவர் பழைய மாதிரி ஆகிவிட்டார். தினமும் குடிப் பது, போதைப் பொருளை எடுத்துக் கொள்வது. மனைவியை தினமும் திட்டுவது, அடிக்கடி அடித்து உதைப்பது ஆகிய செயல்களில் ஈடுபட்டு வந்தார்.

கடந்த ஆண்டு மே மாதம் 7 ஆம் திகதி பகல் உணவுக்குப் பின்னர் மகிந்தர் நடந்து சென்றபோது, அவரைப் பின்தொடர்ந்து சென்ற சுக்மந்தர் சிங் அவரை மரக்கட்டையால் அடித்து உதைத்தார். இதில் பலத்த காயமடைந்து அவர் பலியானார்.

இதுதொடர்பாக சுக்மந்தர் சிங் கைது செய்யப்பட்டார். அவர் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்றம் அவருக்கு 17 ஆண்டு கால சிறைத்தண்டனை விதித்து திங்கட்கிழமை தீர்ப்பளித்தது.

### பாக். ஏவுகணைத் தாக்குதல்: தலிபான்கள் 7 பேர் மரணம்!

பாகிஸ்தானில் பழங்குடிகள் அதிகம் வசிக்கும் வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் அமெரிக்கப் படை செவ்வாய்க்கிழமை ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இதில் தலிபான் தீவிரவாதிகள் 7 பேர் உயிரிழந்தனர்.

அங்குள்ள வீடொன்றில் தீவிரவாதிகள் பதுங்கியிருக்கின்றனர் என அமெரிக்கப் படைக்குத் தகவல் கிடைத்தது. இதையடுத்து, அந்த வீட்டைக் குறிவைத்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் வீடு இடிந்து தரைமட்டமாகியது.

## மரண அறிவித்தல்

### திருமதி எங்கராசு பவளம்மா



அல்வாய் தெற்கு, மாலுசந்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி எங்கராசு பவளம்மா நேற்று (30.06.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற எங்கராசுவின் மனைவியும் நற்குணராஜா, அமரர் சண்முகராஜா, சிவபாலன், சிறீகாந்தன், சரசாதேவி, மதிவதனா, இராசநாயகம், ராஜேஸ்வரி, அரசகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தாதேவி, பிறேமலதா, பத்மினி, விமலேஸ்வரன், புவனேந்திரன், பரமேஸ்வரி, ரவீந்திரன், சிவகௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிச்சடங்குகள் இன்று (01.07.2010) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அல்வாய் தெற்கு,*
*மாலிசந்தி.*

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி





தோற்றம் 13.02.1929 — மறைவு 01.06.2010

அமரர் பாலன் சுந்தரம்

தோற்றம் 26.06.1929 — மறைவு 13.05.2010

அமரர் சுந்தரம் செல்லக்கண்டு

காலத்தின் வேகத்தில் கரைந்தபோன நாள்கள்
ஒன்று கூடி மாதம் ஒன்று ஆனது ஞாலத்தில் பாசத்திருவுருவாய் வந்த
நீங்கள் எம்மிடமிருந்து பறிக்கப்பட்டு காலதேவன் காலடி சென்றமை
இன்றும்
நெஞ்சில் ஆறாத காயங்களாய் இருக்கின்ற நாளும் உள்ளத்தில்
உங்கள் நினைவுகள் என்றும் எம் நெஞ்சோடிருப்பதை அறிவீரே
நீங்கள்.

*துன்னாலை தெற்கு,*
*கரவெட்டி.*

என்றும் உங்கள் நினைவுகளுடன்
S.பாக்கியநாதன் (மகன்).

(100098)

## மரண அறிவித்தல்கள்

### வீரகத்தி மனோகரன்



துன்னாலை கிழக்கு, குடவத்தையைப் பிறப்பிடமாகவும் தல்லையப்புலத்தை வதிவிடமாகவும் கொண்ட வீரகத்தி மனோகரன் நேற்று (30.06.2010) புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தி - சோதி தம்பதியினரின் அன்பு மகனும் செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும் நிர்மல் (பிரான்ஸ்), பிரதீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுப்பிரமணியம், சிவலிங்கம், சோதிலிங்கம், சுந்தரலிங்கம், சகுந்தலா, அமரர் சந்திரா, சாரதா, சாந்தா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுமித்திராவின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2010) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வீரக்களி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை தெற்கு,
நல்லையப்புலம், கரவெட்டி.

தகவல்: ம.செல்வரத்தினம் (மனைவி).

### திருமதி சபாரத்தினம் இராசபூபதி



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சபாரத்தினம் இராசபூபதி நேற்று (30.06.2010) புதன்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மகளும் அமரர்களான கணபதிப்பிள்ளை - பார்வதம் தம்பதிகளின் மருமகளும் திருமாறன் (லண்டன்), அருள்மாறன் (பொதுச் சுகாதார பரிசோதகர், உரும்பிராய்), அருட்செல்வன் (ஆய்வு கூட உதவியாளர், வேலணை மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் யசோதா (லண்டன்), கலைவாணி (ஆசிரியை, யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்), கலைவாணி (ஆசிரியை, யா/வட்டு. இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும் மகிதரா, மாதுரி, மயூரி, விசாகன், ஆதித்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திருமதி இ.விக்கினேஸ்ரி (U.K), காலஞ்சென்ற விக்னேஸ்வரன் மற்றும் ஜெகதீஸ்வரி, திருமதி ப.விமலேஸ்வரி (U.K), சிவசுப்பிரமணியம் (கோண்டா வில் விக்னேஸ்வரன் அரிசி ஆலை), இராசேந்திரா (கோண்டாவில் விக்கினேஸ்வரர் அரிசி ஆலை), சிவநேசன் (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2010) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று அவரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் பூனாவடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சபாரத்தினம் (கணவர்).

(1000100)

# 'தமிழர்கள்' என்ற அடையாளமே அவர்களின் அழிவுக்குக் காரணம்!

## ஈழமக்கள் படுகொலையை எடுத்துக்காட்டுகிறார் இல.கணேசன்



சென்னை, ஜூலை 1

அடையாளப் பிரச்சினையே தமிழர்களின் அழிவுக்குக் காரணமாக உள்ளது. இலங்கைத் தமிழர்களுக்காக இங்கு நாம் எவ்வளவுதான் போராடினாலும் தமிழகத்தைத் தாண்டி அது எடுபடவில்லை. தமிழர்கள் என்ற அடையாளத்தால் ஒட்டு மொத்த இந்தியர்களின் ஆதரவைப் பெற முடியாமல் இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

- இவ்வாறு பா.ஜ.கவின் மூத்த தலைவர்களில் ஒருவரான இல. கணேசன் தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் வி. சூர்யநாராயணன் எழுதிய 'மலேசிய இந்தியத் தமிழர்களின் அவலநிலை' என்ற தமிழ் மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா சென்னையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விழாவில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

ஒருகாலத்தில் கூலி வேலைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர்கள்தான் மலேசியத் தமிழர்கள். காடுகளை சீரமைத்து மலேசியாவை வளம்மிக்க நாடாக மாற்றியவர்கள் அவர்கள். ஆனால் அவர்கள் அங்கு விரட்டியடிக்கப்படுகிறார்கள். மலேசியாவில் உள்ள தமிழர்களில் 90 சதவீதத்தினர் அங்கேயே பிறந்தவர்கள். ஆனாலும் அவர்களுக்கு அங்கு உரிமை மறுக்கப்படுகிறது. தங்கள் மீதான கொடுமைகளை எதிர்த்து வெகுண்டெழுந்த தமிழர்கள் இந்து உரிமைப் பாதுகாப்புப் படை (ஹிண்ட்ராப்) என்ற அமைப்பைத் தொடங்கிப் போராடி வருகிறார்கள்.

இலங்கையிலும் தமிழர்கள் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இலங்கைத் தமிழர்களுக்கு இங்கு நாம் எவ்வளவுதான் போராடினாலும் தமிழகத்தைத் தாண்டி அது எடுபடவில்லை. மற்ற மாநிலத்தவர்கள் அது தமிழர்களின் பிரச்சினை என்று ஒதுங்கி விட்டார்கள். தமிழர்கள் என்ற அடையாளத்தால் ஒட்டுமொத்த இந்தியர்களின் ஆதரவைப் பெற முடியாமல் இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

மலேசியத் தமிழர்களின் அவலநிலை குறித்து மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜியுடன் பேசுவதற்கு பா.ஜ.க. எம்.பி. ஒருவர் ஏற்பாடு செய்தபோது மேற்கு வங்க எம்.பி. கூட கலந்துகொண்டார். ஆனால், தமிழக எம்.பிக்கள் யாரும் வரவில்லை. அதாவது இந்து என்ற அடையாளத்துடன் மலேசியத் தமிழர்கள் போராடுவதால் வங்காளிகளின் ஆதரவு கிடைத்தது. ஆனால், தமிழர்களின் ஆதரவு கிடைக்கவில்லை.

தமிழர்கள் என்ற அடையாளத்துடன் வந்தால் மற்ற மாநிலத்தவர்கள் புறக்கணிக்கின்றனர். இந்துக்கள் என்ற அடையாளத்துடன் போராடினால் தமிழர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. மொத்தத்தில் அடையாளப் பிரச்சினையால் வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் பெரும் துன்பத்துக்கு ஆளாகிறார்கள். அதுவே அவர்களின் அழிவுக்கும் காரணமாக உள்ளது. மலேசியத் தமிழர்களின் நலனுக்காக இந்திய அரசு எதுவும் செய்யவில்லை. செய்யவும் மாட்டார்கள். அவர்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.

# காஷ்மீரில் தீவிரம் அடைகிறது கலவரம்; துப்பாக்கிச் சூட்டில் மேலும் 3 பேர் பலி!

## 3 நாள்களில் ஐவர் மரணம்; 100 பேர் காயம்

ஸ்ரீநகர், ஜூலை 01

காஷ்மீரில் 5 ஆவது நாளாக கலவரம் நீடிக்கிறது. அங்கு நேற்றுமுன்தினமும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் 3 பேர் பலியானார்கள். ஊரடங்கு உத்தரவு மேலும் சில பகுதிகளுக்கு விரிவு படுத்தப்பட்டுள்ளது.

காஷ்மீர் மாநிலத்தில், துணை இராணுவத்தினரும், பாதுகாப்புப் படையினரும் துப்பாக்கியால் சுட்டதில் கடந்த 3 நாள்களில் 5 பேர் இறந்தனர். மேலும் 100 பேர் காயமடைந்தனர். இவர்களில் 40 பேர் படையினர்.

அங்கு பிரிவினைவாதத் தலைவர்கள், வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இதைக் கண்டித்து பிரிவினைவாத இயக்கத்தினர் கலவரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் அங்கு படையினர் குவிக்கப்பட்டு வருகிறார்கள்.

சபோர் நகரில் ஏற்கனவே ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கிறது. நேற்றுமுன்தினம் பாரமுல்லா, குப்வாரா நகர்களுக்கும் இந்த உத்தரவு விரிவுபடுத்தப்பட்டது. ஸ்ரீநகரில் 7 பொலிஸ் நிலையப் பகுதிகளிலும், நேற்றுமுன்தினம் காலை முதல் ஊரடங்கு உத்தரவு விரிவுபடுத்தப்பட்டது.

ஸ்ரீநகரில் படையினர் மீது கற்கள் வீசப்பட்டன. இதைத்தொடர்ந்து படையினர் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசினர். சில இடங்களில் பொலிஸார் தடியடி நடத்தினர். இந்தச் சம்பவங்களில் 13 பேர் காயமடைந்தனர். அவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. அரச ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் வேலைக்குச் செல்லாமல் தடுக்கப்பட்டனர்.

தெற்கு காஷ்மீர் பகுதிக்கும் கலவரம் பரவியிருக்கிறது. அனந்தநாக் நகரில் படையினருக்கும், பொதுமக்களுக்கும் நேரடிக் கைகலப்பு ஏற்பட்டது. அங்குள்ள பஸ் நிலையத்தில் திரளான மக்கள் கூடி ஊர்வலமாகச் செல்ல முயன்றனர். இதைப் படையினர் தடுத்தனர்.

அப்போது படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் இறந்தனர். மேலும் 2 பேர் காயமடைந்தனர். 3 பேர் இறந்த தகவல் பரவியதும் மக்கள் வீதியில் கூடி 3 வாகனங்களுக்கு தீ வைத்தனர்.

இதற்கிடையில், செல்போன்களில் எஸ்.எம்.எஸ். சேவையை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படி தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு காஷ்மீர் அரசு உத்தரவிட்டிருக்கிறது.

இந்த நிலையில் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் 2 ஆம் திகதி காஷ்மீர் செல்கிறார். சட்டம் - ஒழுங்குப் பிரச்சினை பற்றி அதிகாரிகளுடன் அவர் அங்கு ஆலோசனை நடத்துகிறார்.

# நக்ஸல்கள் அதிரடித் தாக்குதல்; சத்தீஷ்கரில் 26 பொலிஸார் பலி

ராய்ப்பூர், ஜூன் 01

சத்தீஷ்கர் மாநிலத்தில் 200 நக்ஸலைட்டுகள் திரண்டு வந்து நடத்திய அதிரடித் தாக்குதலில் 26 மத்திய ரிசர்வ் படைப் பொலிஸார் பலியானார்கள்.

மேற்கு வங்கம், பீஹார், ஜார்கண்ட், சத்தீஷ்கார், ஒரிஸா, ஆந்திரா, மராட்டியம், மத்தியப்பிரதேசம் ஆகிய 8 மாநிலங்களில் மாவோ நக்ஸலைட்டுக்களின் தாக்குதல் அதிகமாக உள்ளது. அவர்களை ஒடுக்கும் பணியில் அந்தந்த மாநிலப் பொலிஸாரின் துணையுடன் துணை இராணுவப் படையினரான மத்திய ரிசர்வ் படைப் பொலிஸார் ஈடுபட்டு வருகிறார்கள்.

மாவோயிஸ்டுகளை ஒடுக்கும் பணியில் இராணுவத்தினரையும் ஈடுபடுத்த வேண்டும் என்ற யோசனை எழுந்துள்ளது. இதுபற்றி மத்திய அரசு ஆலோசனை நடத்தி வருகிறது.

அதேசமயம், மற்றொரு புறம், மாவோயிஸ்ட்டுகளின் தாக்குதல் நீடித்து வருகிறது. கடந்த மாதம், மேற்கு வங்கத்தில் மாவோயிஸ்ட்டுகள் ரயில் கவிழ்ப்பில் ஈடுபட்டதால் சுமார் 150 பயணிகள் உயிரிழந்தனர்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் சத்தீஷ்கர் மாநிலத்தில், மத்திய ரிசர்வ் படை பொலிஸாரைக் குறிவைத்து நக்ஸலைட்டுகள் மிகப்பெரிய தாக்குதலை நடத்தினர். அம் மாநிலத்தில் நாராயண்பூர் மாவட்டத்தில் தவுரை வீதிப் பகுதியில் பிற்பகல் 3 மணியளவில் ரிசர்வ் பொலிஸாரும், மாநிலப் பொலிஸாருமாக மொத்தம் 70 பேர் நடந்து சென்று கொண்டிருந்தனர்.

**இந்தியச் செய்திகள்**

அப்போது, அங்குள்ள மலை உச்சியில் தானியங்கித் துப்பாக்கிகளுடன் பதுங்கி இருந்த சுமார் 200 மாவோயிஸ்டுகள், அங்கிருந்து பொலிஸார் மீது சரமாரியாகச் சுட்டனர். உடனே பொலிஸாரும் எதிர்த்தாக்குதல் நடத்தினர். இருதரப்புக்கும் இடையே 2 மணி நேரம் கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது. தகவல் அறிந்து, வேறு பகுதிகளில் இருந்து பொலிஸார் வரவழைக்கப்பட்டனர்.

இந்தச் சண்டையில் 26 ரிசர்வ் படை பொலிஸார் பலியானார்கள். சத்தீஷ்கார் பொலிஸ் படையின் 4 விசேட பொலிஸ் அதிகாரிகளும், 3 ரிசர்வ் பொலிஸாரும் படுகாயம் அடைந்தனர். அவர்கள் ஹெலிகொப்டர் மூலம் ஜக்தல்பூர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் பொலிஸ் அதிகாரி ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

சம்பவத்தைத் தொடர்ந்து, அப்பகுதிக்கு மருத்துவக் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டன. பலியான பொலிஸாரின் சடலங்கள் மீட்கப்பட்டன. பலியானோரின் எண்ணிக்கை அதிகமாக இருக்கக்கூடும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தத் தாக்குதல் பற்றிய தகவல்களை டில்லியில் உள்துறைச் செயலர் ஜி.கே.பிள்ளை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சத்தீஷ்கரில் மாவோயிஸ்ட்டுகள் நடத்திய 3 ஆவது பெரிய தாக்குதல் இதுவே ஆகும். கடந்த ஏப்ரல் 6 ஆம் திகதி தண்டே வாடா கிராமத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 76 ரிசர்வ் பொலிஸார் பலியாகினர். கடந்த மே 8 ஆம் திகதி நாராயண்பூர் மாவட்டத்தில் நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் 8 ரிசர்வ் பொலிஸார் பலியானார்கள். அதைத்தொடர்ந்து மாவோயிஸ்ட்டுகள் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் 26 ரிசர்வ் பொலிஸார் பலியாகியுள்ளனர்.

# குருஜி ரவிசங்கரிடம் ரூ. 42 கோடி கேட்டு 'போனி'ல் மிரட்டல்!



பெங்களூர், ஜூலை 01

வாழும் கலை அமைப்பின் நிறுவுநர் ஸ்ரீஸ்ரீ ரவி சங்கர் சுவாமிக்கு நேற்றுமுன்தினம் தொலைபேசியில் ஆசாமி ஒருவர் மிரட்டல் விடுத்துள்ளார்.

ரூபா 42 கோடி கொடுக்க வேண்டும், இல்லையென்றால் வாழும் கலை அமைப்புக்கு அவமதிப்பு ஏற்படும் என்று அந்த ஆசாமி மிரட்டினார். இதுகுறித்து ஆசிரம நிர்வாகிகள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த மாதம் ரவி சங்கர் சுவாமி, பிரார்த்தனை முடித்து காரில் கிளம்பிய போது அவரை நோக்கி ஒருவர் துப்பாக்கியால் சுட்டார் என்றும், தெரு நாயை நோக்கி பண்ணை உரிமையாளர் ஒருவர் சுட்ட போது தவறுதலாக பக்தர்கள் கூட்டத்தில் பாய்ந்துவிட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# செம்மொழித் தமிழாய்வு நூலகத்தை பார்வையிட்டார் முதல்வர் கருணாநிதி

## விரைவில் ஆய்வாளர்களுக்கு அனுமதி



சென்னை, ஜூலை 01

சென்னை கோட்டையில் பழைய சட்டமன்றம் செயற்பட்ட இடத்தில் அமைக்கப்பட்டுள்ள செம்மொழி நூலகத்தை, முதல்வர் கருணாநிதி நேற்றுமுன்தினம் பார்வையிட்டார். விரைவில் ஆய்வாளர்கள் பயன்பாட்டுக்கு இந்நூலகம் திறந்து விடப்படுகிறது.

செம்மொழி மாநாட்டில் முதல்வர் கருணாநிதி பேசும் போது, சென்னை கோட்டையில், முன்பு சட்டமன்றம் செயற்பட்ட இடத்தில், செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் செயற்படும் என்றும், அத்துடன் ஆய்வாளர்கள் பயன்பாட்டுக்காக அரிய புத்தகங்கள் வைக்கப்படும் என்றும் அறிவித்தார்.

அதன் முதல்கட்டமாக, செம்மொழி தமிழ் ஆய்வு நூலகம் அமைக்கப்பட்டு, பழைய சட்டமன்றம் பிரமாண்டமான நூலகமாக மாறியுள்ளது. புத்தகங்கள் முறைப்படி அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட புத்தகத்தை எளிதில் எடுப்பதற்கு ஏற்ப திறந்த நிலையிலான புத்தக அலமாரிகள் அமைக்கப்பட்டு உள்ளன.

செம்மொழி நூலகத்தில் சங்கத்தமிழ் இலக்கியங்கள், தொல்காப்பியம், வரலாறு, அகராதி உட்பட எண்ணற்ற ஆய்வு நூல்கள் இடம்பெற்றுள்ளன. தற்போது ஏறக்குறைய 20 ஆயிரம் புத்தகங்கள் உள்ளன என்று தெரிகிறது. விரைவில் லட்சத்தைத்தாண்டும் வகையில் புத்தகங்கள் வைக்கப்படும் என்று கூறப்படுகிறது. புத்தகங்களைப் படிப்பதற்கும், குறிப்பு எடுப்பதற்கும் வசதியாக இருக்கைகள் போடப்பட்டுள்ளன.

இந்த நூலகத்தை, முதல்வர் கருணாநிதி நேற்றுமுன்தினம் காலையில் பார்வையிட்டார். அவருடன் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள், தலைமைச்செயலாளர் உள்ளிட்டோர் சென்றிருந்தனர். நூலகத்தைப் பார்வையிட்ட கருணாநிதி, அங்கு கூடுதல் இருக்கைகள் போடவேண்டும் என்பது உட்பட ஆய்வாளர்கள் வசதிக் கான சில ஏற்பாடுகளையும், நூலக அமைப்பில் சில மாற்றங்களையும் செய்யும்படி தெரிவித்தார்.

செம்மொழி தமிழாய்வு நூலகம் விரைவில் ஆய்வாளர்கள் பயன்பாட்டுக்குத் திறந்து விடப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மோசடி செய்தவருக்குத் தர்ம அடி



காஞ்சீபுரம் அருகே இலவச நில உரிமைச் சான்று வாங்கித் தருவதாகக் கூறி பொதுமக்களிடம் தலா ரூபா 10 ஆயிரம் வீதம் பணம் வசூலித்து மோசடி செய்தவரை பெண்கள் சூழ்ந்து கொண்டு தர்ம அடி கொடுத்தனர். மோசடி ஆசாமியை பொலிஸார் கைதுசெய்தனர்.

# ஈழத்தமிழருக்கு புகலிடம் வழங்குமாறு ஆஸியிடம் மன்னிப்புச்சபை கோரிக்கை

கொழும்பு, ஜூலை 01

இலங்கை இன்னும் பாதுகாப்பற்ற நாடாகவே உள்ளது. எனவே, அங்கிருந்து அரசியல் புகலிடம் கோரிவரும் இலங்கையர்களுக்கு, அடைக்கலம் வழங்கும் நடவடிக்கைகளை ஆஸ்திரேலிய அரசு காலம் கடத்தாது மேற்கொள்ளவேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

ஆஸ்திரேலியா, விதித்திருந்த இந்தத் தடை எதிர்வரும் 8ஆம் திகதியுடன் நிறைவடைகிறது.

இந்த நிலையில் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆய்வாளர் யொலன்டா பொஸ்டர், ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கிளாட்டுக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இலங்கையில் இன்னமும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் எவ்வித விசாரணைகளும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அவர்கள் பல்வேறு சித்திரவதைகளுக்கு உட்படுகின்றனர் என்றும் பலர் காணாமல் போகும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்றும் பொஸ்டர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் எந்த இடமும் பாதுகாப்பானதாக அமைந்திருக்கவில்லை. இந்த நிலையில் அரசியல்வாதிகள் அல்லது ஆயுதக்குழுக்கள் அரசுக்கு எதிரானவர்களை அல்லது அரசை விமர்சிப்பவர்களைத் தண்டிக்கின்றனர் என்றும் பொஸ்டர் குறிப்பிட்டுள்ளார்.

# அரசு சமர்ப்பித்த வரவு - செலவுத் திட்டத்தில் நாட்டுக்குத் தேவையான எதுவுமே இல்லை!

## ரவி கருணாநாயக்க எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை, 01

சர்வதேச தலைமை நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமையவே இந்த வரவு - செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று ஐ.தே.க. எம்.பி. ரவி கருணாநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவு திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது மேலும் கூறியவை வருமாறு:-

பதில் நிதி அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டு அதனூடாக வரவு செலவுத்திட்டம் என்பது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சுமார் இரண்டரை மணித்தியாலங்களாக வாதிக்கப்பட்ட இந்த வரவு - செலவுத் திட்டத்தில் இந்நாட்டுக்குத் தேவையான ஒன்றும் இல்லை.

இதில் ஒன்றுமில்லை என்ற தோறணையிலேயே வரவு - செலவு திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஜனாதிபதி வராது உக்ரைய்ன் சென்றுள்ளார்.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் நிவாரணங்கள் குறைக்கப்பட்டு அரச ஊழியர்களின் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டதாலேயே சர்வதேச நாணய நிதியம் மூன்றாம் தவணைக் கடனையும் இலங்கைக்கு வழங்கியது.

வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்காவிட்டால் கடன் வழங்கப்படமாட்டாது என்று நாணய நிதியம் இலங்கைக்குக் கூறியது. அதன் காரணத்தாலேயே அரசு இப்படியானதொரு வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தது.

மொத்தத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமையவே இந்த வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வரவு - செலவுத் திட்டம் முதலில் நாணய நிதியத்திற்கும் இரண்டாவது இலங்கை நாடாளுமன்றத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

நாணய நிதியம் மூன்றாவது கடன் தவணையை வழங்குவதற்கு இலங்கைக்கு விதித்த நிபந்தனைகள் என்னவென்பது அரசு நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

நிவாரணங்கள் வழங்கப்படும் என்றும் அரசு ஊழியர்கள் சம்பளம் அதிகரிக்கப்படும் என்றும் அரசு நேற்று மன்றில் வாக்குறுதி வழங்கியது. அந்த வாக்குறுதி இந்த வரவு - செலவு திட்டத்தில் நிறைவேற்றப்படவில்லை.

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில் எரிபொருட்களின் விலைகள் இன்னும் ஓரிரு நாட்களில் அறிவிக்க அரசு திட்டமிட்டுள்ளது. அப்படியாயின், அரசு இந்த வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்காமல் இருக்கலாம் - இப்படி ரவிகருணாநாயக்க எம்.பி. கூறினார்.

## கருணாநிதிக்கு கோயில்

குடியாத்தம், ஜூலை 01

குடியாத்தம் அருகே உள்ள சாமிரெட்டிபல்லி கிராமத்தில், குடியாத்தம் ஒன்றிய தி.மு.க. மாவட்டப் பிரதிநிதியும், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினருமான ஜி.ஆர். கிருஷ்ணமூர்த்தி, தமிழக முதல்வர் கருணாநிதிக்கு கோயில் கட்டியுள்ளார்.

தனது சொந்த நிலத்தில், சொந்தப் பணம் சுமார் ரூபா 2 லட்சம் செலவில் கட்டடம் கட்டி, அதில் கருணாநிதியின் இரண்டரை அடி உயர மார்பளவு சிலை அமைத்துள்ளார். அறையின் முகப்புச்சுவரில் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழகச் சட்டம் மற்றும் சிறைத்துறை அமைச்சர் துரைமுருகன், தி.மு.க. மாவட்டச் செயலர் ஆர்.காந்தி ஆகியோரின் படங்களும் பதிக்கப்பட்டுள்ளன.

# 2,500 ரூபா சம்பள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தலின்போதும், பொதுத் தேர்தலின்போதும் அரச ஊழியர்களுக்கு 2,500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படும் என ஜனாதிபதியும், அமைச்சர்களும் மேடைகளில் வாக்குறுதி வழங்கினர். ஜனவரி மாதத்திலிருந்து நிலுவையுடன் சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் எனத் தெரிவித்தனர். அதேபோல, யுத்தம் முடிவடைந்துவிட்டது. எமக்குத் தாராளமாக நிவாரணங்கள் கிடைக்கும். வரிகள் குறைக்கப்பட்டு அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறையும் என எதிர்பார்த்த மக்களை ஏமாறச் செய்யும் வகையில் வரவு-செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

மாறாக வரவு-செலவுத் திட்டத்துக்கு முன்னரே பாண், பால்மா, காஸ் உட்பட அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயர்த்தப்பட்டுவிட்டன. இந்த நிலையில், வாழ்க்கைச்செலவைச் சமாளிக்க முடியாமல் மக்கள் திணறுகின்றனர்.

எனவே, அரச ஊழியர்களின் 2,500ரூபா சம்பள உயர்வை வழங்கும்படி கோரியும், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை எதிர்த்தும் அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்களை இணைத்துக்கொண்டு தொடர் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும். தேவை ஏற்படின் பொது வேலைநிறுத்தமொன்றையும் நடத்தத் திட்டமிடப்படும் என அவர் தெரிவித்தார். (சி)

# ஐ.நா.செயலரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக இந்த இறுதிக் கட்ட யுத்தத்தில் பெரும் எண்ணிக்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்றும் மனிதப் பேரவலங்கள் நடந்தேறின என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இலங்கையில் மோதல் பல தசாப்தங்களாக இடம்பெற்றிருக்கின்றது. இம்மோதலில் ஏராளமான பேரழிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த மோதலை முழுமையாக விசாரிக்க வேண்டிய சட்டரீதியான தேவை உண்டு.

ஆனால், இறுதிக் கட்ட யுத்தத்தில் இடம்பெற்ற சம்பவங்களை விசாரிப்பது ஐ.நா நிபுணர் குழுவின் முதற்கட்டப் பணியாகவும், தேவையாகவும் உள்ளது. அதுவே யதார்த்தமானதும் ஆகும்.

யுத்தத்தின் இறுதி நாட்களில் சர்வதேச சமூகத்தைக் கூடப் பொருட்படுத்தாமல் இரு தரப்பினருமே மனித உரிமைகள் சட்டங்கள், மனிதாபிமான சட்டங்கள் ஆகியவற்றை பாரதூரமான அளவில் அப்பட்டமாக மீறி இருக்கின்றார்கள்.

ஐ.நா செயலாளர் நாயகம் அவரின் அதிகார வரம்புகளுக்கு உட்பட்டே இந்நிபுணர் குழுவை அமைத்திருக்கின்றார். அவருக்கு ஆலோசனை கூறுவதற்கென நிபுணர் குழுவை அமைப்பதற்கு செயலாளர் நாயகத்துக்கு சர்வவல்லமையும் உண்டு.

ஏனெனில், செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்குவது மாத்திரம்தான் இப்படிப்பட்ட நிபுணர் குழுவின் வேலை. விசாரணைக் குழுவை அமைப்பதற்குத் தான் பொதுவாக அனுமதி பெறப்பட வேண்டும்.

இலங்கையின் இறைமையில் ஐ.நா தலையிடுகிறது என்கிற குற்றச்சாட்டை நான் முற்றாக நிராகரிக்கிறேன். என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ-சி)

# ஆயுதக் களைவு, ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெற்கில் தோல்வியடைந்த அரசின் கட்சி ஒன்று வடக்குக்குச் சென்று அங்கு நிலவும் அமைதியைக் குழப்ப முயற்சி செய்கிறது.

இலங்கையில் உள்ள சட்டவிரோத ஆயுதக் குழுக்களிடமிருந்து ஒயுதங்களைக் களைந்து, அக்குழுக்களை ஜனநாயக நீரோட்டத்துக்கு இழுத்து, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்திய பின்னர் இறுதியிலேயே அரசியல் தீர்வை வழங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்துவதில் அரசு மீளவும் அக்கறையுடன் செயற்படுகின்றது. அம்மக்களை நீண்ட காலத்துக்கு அகதிகளாக வைத்திருக்க அரசு திட்டமிடவில்லை.

மீள்குடியமர்த்தப்பட்ட மக்களை வறுமையில் போடவில்லை. அவர்கள் வேறொருவரிடம் கையேந்தும் நிலைக்கு நாம் அவர்களைத் தள்ளவில்லை. அவர் களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்துள்ளோம்.

மீள்குடியேற்ற நடவடிக்கையின்போது நாம் பல பிரச்சினைகளை எதிர்கொண்டோம். கண்ணிவெடிகள் அங்குலம் அங்குலமாகப் புதைத்துவைக்கப்பட்டிருந்தன. அவற்றை நீக்கிக்கொண்டே மக்களை மீளக் குடியமர்த்தி வருகிறோம். மீள்குடியேற்றத்துக்கு முன்பே நாம் வீதிகளைத் திருத்தியும், உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியும் வருகின்றோம்.

அதுபோல், முன்னாள் பயங்கரவாதிகளையும் புனரமைப்புச் செய்து நாம் அவர்களைச் சமூகத்துடன் இணைத்து வருகின்றோம். மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் சொந்தக்காலில் நிற்பதற்கான வசதிகளைச் செய்து வருகின்றோம்.

'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகைக்காக நாம் இந்த நாட்டின் இறைமை மற்றும் சுயாதீனம் போன்றவற்றைக் காட்டிக் கொடுக்கமாட்டோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு இணங்க நாம் கல்வி, சுகாதாரம், சமுர்த்தி போன்றவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டை குறைக்கவில்லை. நாம் அவ்வாறு செய்யமாட்டோம் என்று நாணய நிதியத்திடம் கூறியுள்ளோம். சம்பளக் குறைப்பையும் நாம் செய்யமாட்டோம்.

எமது இந்தக் கொள்கையை அறிந்தே மக்கள் எம்மைத் தேர்தலில் வெற்றிபெறச் செய்தனர். அதிக உறுப்பினர்களைத் தெரிவுசெய்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பினர் - என்றார். (அ-சி)

# குடாநாட்டில் முப்படையினர் தவிர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனவருத்தத்தை தருவதாக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வீ.விக் னேஸ்வரன் கவலை தெரிவித்துள்ளார். உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் ஒருவர் மனம் வருந்தும் நிலைக்கு யாழ். குடாநாடு சென்றுள்ளது.

**குற்றச்செயல்களை மேலும் வளர்க்கும்**

இதற்கு குடாநாட்டில் காணப்படும் ஆயுத கலாசாரமே காரணமாக அமைந்துள்ளது. எனவே இந்த ஆயுதக் கலாசாரத்தை ஒழிப்பதற்கு ஜனாதிபதி உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற குற்ற செயல்களுக்கு எதிராகத் துணிவுடன் செயற்பட்ட நீதிபதிகள் இடமாற்றப்பட்டுள்ளனர்.

இத்தகைய செயற்பாடுகள் குடாநாட்டில் மேலும் குற்றச்செயல்களை வளர்ப்பதற்கே உதவும் எனவே நீதித்துறையில் அரசியல் தலையீடுகள் இருக்கக்கூடாது. இத்தகைய தலையீடுகளைத் தடுப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

குடாநாட்டில் ஆயுதக் கலாசாரம் ஒழிக்கப்பட்டு சிவில் நிர்வாகம் பூரணமாக அமுல்படுத்தப்படவேண்டும். முப்படையினரைத் தவிர வேறு எவரும் ஆயுதங்களுடன் நடமாடும் சூழல் மாற்றப்படவேண்டும்.

குடாநாட்டில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களும் சாதாரண தர வர்க்கத்தினரும் வருமானம் இன்றிப் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். வரவு - செலவுத்திட்டத்தில் ஏதாவது சலுகைகள் அறிவிக்கபடும் என எதிர்பார்த்து இருந்த மக்களுக்கு பெரும் ஏமாற்றமே கிடைத்துள்ளது.

**பட்டதாரிகள் வேலை வாய்ப்பின்றிக் கஷ்டம்**

யாழ்.குடாநாட்டில் 4,000 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலைவாய்ப்பின்றி பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். கஷ்டங்கள் மத்தியில் படித்துப் பட்டம்பெற்ற இவர்கள் தற்போது நடு வீதியில் நிற்கின்றனர். இவர்கள் பட்டப் படிப்பை படித்துவிட்டு கூலிவேலைகளிலும், ஓட்டோ ஓட்டுதல், கடற்றொழிலில் ஈடுபடுதல், மரக்கறி விற்பனை உட்பட பல்வேறு தொழில்களில் ஈடுபடும் அவல நிலை காணப்படுகின்றது.

2000 ஆம் ஆண்டு பட்டப்படிப்பை முடித்து வெளியேறிய பட்டதாரிகளுக்குக் கூட இன்னும் வேலைவாய்ப்புக்கள் அரசாங்கத்தினால் வழங்கப்படவில்லை. இந்த வேலையற்ற பட்டதாரிகள் 4,000 பேருக்கும் உடனடியாக வேலைவாய்ப்பினை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யாழ்.குடாநாட்டின் 4,000 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் நிலையில், தற்போது அரசுடன் இணைந்துள்ள கட்சி ஒன்று தமது தேர்தல் வேலைகளில் ஈடுபட்ட 50 பேருக்கு மட்டும் நியமனங்களை வழங்க முயன்று வருவதாக தெரியவருகிறது. இத்தகைய நடவடிக்கை முறையானதல்ல எனவே பட்டதாரிகள் சகலருக்கும் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும்.

வேலையற்ற பட்டதாரிகள் கடன்களைப்பட்டு, நகைகளை அடகு வைத்து, இருந்த சொத்துக்களை விற்று அவற்றை மீட்கமுடியாத நிலையில் பெரும் துன்பத்தில் மூழ்கியுள்ளனர். எனவே குடாநாட்டு வேலையற்ற பட்டதாரிகளின் வாழ்வில் சுபீட்சம் ஏற்பட அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**சிறைச்சாலைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள்**

பல வருடங்களாக நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் தமிழ் அரசியல் கைதிகள் எந்தவித விசாரணையும் இன்றி விடுதலையும் இன்றி வாடி வருகின்றனர். யுத்தம் நடைபெற்றபோது விடுதலைப் புலிகளுக்கு உதவினார்கள், அவர்களை காட்டித்தர தவறினார்கள் என்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுவிக்கக்கோரி பல போராட்டங்களை நடத்திய போதிலும் அவை எதுவும் பலன் தரவில்லை.

விடுதலைப்புலிகள் அமைப்பில் முக்கியஸ்தர்களாக இருந்தவர்கள் பலர் இன்று பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். புனர்வாழ்வு பெற்று வரும் முன்னாள் போராளிகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இந்த நிலையில் புலிகளுக்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் பல வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்க அரசாங்கமும் ஜனாதிபதியும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

புதிய மகஸின் சிறைச்சாலை, மட்டக்களப்பு, அனுராதபுரம், யாழ்ப்பாணம், பூஸா ஆகிய சிறைச்சாலைகளில் 500 இற்கு மேற்பட்ட அரசியல் கைதிகள் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும் - என்றார். (அ)

# காணாமற்போன 20 ஆயிரம் பேரை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுங்கள்

## நாடாளுமன்றத்தில் சிறிதரன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜூலை 01

வன்னி யுத்தத்தின்போது காணாமல் போயுள்ள 20 ஆயிரம் பேரைக் கண்டு பிடிப்பதற்கும், தடுப்பு முகாம்களில் உள்ள 12 ஆயிரம் பேரை விடுவிப்பதற்கும், சிறைச் சாலைகளில் உள்ள அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சிவஞானம் சிறிதரன் நேற்று நாடாளுமன்றில் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டிலே வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்துள்ளது. அதற்கான தீர்வுகள் எவையும் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்படவில்லை.

வேலையில்லாப் பட்டதாரிகள் 30 ஆயிரம் பேர் இந்நாட்டில் உள்ளனர். அவர்களுள் 3 ஆயிரம் பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். அரச சேவையில் 60 வயதைத் தாண்டியவர்கள் தொடர்ந்தும் இருப்பதால் இளைஞர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை.

விலைவாசி அதிகரிப்பால் அரச ஊழியர்கள் துன்பப்படுகின்றனர். ஒரு பவுண் தங்கத்தின் விலையை ஒத்ததாக அரச ஊழியர்களின் சம்பளம் இருக்கவேண்டும். அப்போதுதான் அவர்களால் பிரச்சினையின்றி தமது குடும்பங்களைக் கொண்டுநடத்த முடியும்.

மீள்குடியமர்த்தப்பட்ட வன்னி மக்கள் ஓடுவதற்கு சைக்கிள்கள் இல்லாமல் துன்பப்படுகின்றனர். அவர்கள் சைக்கிள்களைப் பெற்றுக்கொள்வதற்காக கடன் ஏற்பாடு ஒன்றை அரசு இந்த வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாகச் செய்திருக்கலாம்.

கிளிநொச்சியை அபிவிருத்தி செய்வதற்காக எம்.பி நாமல் ராஜபக்ஷ காலையும் மாலையும் அங்கு தரிசிக்கின்றார். அவரது திட்டத்தை நடைமுறைப்படுத்த அவர் ஏன் 60 வயதுக்கு மேற்பட்டவர்களை நியமிக்கவேண்டும்? இளைஞர்களை நியமிப்பது நல்லது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு இன்னும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. அந்த நியமனத்தை அரசு உடன் வழங்கவேண்டும்.

தடுப்பு முகாம்களில் 12 ஆயிரம் இளைஞர்கள், யுவதிகள் உள்ளனர். சிறைச்சாலைகளில் அரசியல் கைதிகள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். அவர்களை உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

20 ஆயிரம் பேர் காணாமற் போயுள்ளனர். அவர்களைக் கண்டுபிடிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களைக் கண்டு பிடித்துத் தருமாறு அவர்களின் உறவினர்கள் கண்ணீர்விட்டு அழுகின்றனர்.



புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் பெண் போராளிகள் சுதந்திர வர்த்தக வலயத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். அவர்களுக்கு மொழி தெரியாது. அவர்கள் பாலியல்ரீதியான பிரச்சினைகளையும் எதிர்நோக்குகின்றனர்.

இந்தப் பெண்களை அவர்களின் பெற்றோர்களிடம் சேர்த்தாலே போதும். உங்கள் சகோதரிகள் இவ்வாறு துன்பப்படுவதை நீங்கள் விரும்புகிறீர்களா? உங்கள் சகோதரிகள் போலவே இந்தப் பெண்களையும் நினையுங்கள். - என்றார்.

# பொது உடன்பாட்டில் ஒன்று சேர்வது குறித்து தமிழ்க்கட்சிகள் இன்று கொழும்பில் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 01

தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வு குறித்து தமிழ்க் கட்சிகள் பொது உடன்பாட்டின் அடிப்படையில் ஒன்று சேர்வது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த தமிழ்க் கட்சிகள் இன்று காலை கொழும்பில் ஒன்றுகூடுகின்றன.

இந்தச் சந்திப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள், தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணி ஆகியவற்றுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற முதலாவது சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஸ்ரீ டெலோ, ஈரோஸ், ஈழமக்கள் ஜனநாயக்கட்சி ஆகியன சந்தித்துக் கலந்துரையாடியிருந்தன என்பது தெரிந்ததே.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதிய கட்சியாக நேற்றுப் பதிவு

கொழும்பு, ஜூலை, 01

புதிய கட்சியாக பதிவுசெய்வதற்காக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நேற்று தமது விண்ணப்பத்தை தேர்தல்கள் செயலகத்தில் சமர்ப்பத்துள்ளது.

இதன்படி கட்சியின் தலைவராக ஆர். சம்பந்தன் பெயரிடப்பட்டுள்ளார்

இணை செயலாளர்களாக மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமசந்திரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்

தமிழ்தேசியக்கூட்டமைப்பு நேற்று வரை இலங்கை தமிழ் அரசுக்கட்சி என்ற பெயரிலேயே இயங்கிவருகிறது.

இந்த நிலையில் வெளிநாடு சென்றுள்ள தேர்தல்கள் ஆணையாளர் நாடு திரும்பியதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட்ட புதிதாக பதிவு செய்வதற்காக விண்ணப்பத்துள்ள சுமார் 60 கட்சிகள் தொடர்பில் முடிவெடுக்கப்படவுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவின் தலைமையில் ஜனநாயக கட்சி என்ற பெயரில் புதிய கட்சிக்கான விண்ணப்பமும் நேற்று சமர்ப்பக்கப்பட்டுள்ளது.

(ஒ-சி)

# தென்னிந்திய திரைப்படத்துறையினரின் எதிர்ப்பு; தாம் பயப்படவில்லை என்கிறார் சல்மான்கான்

கொழும்பு, ஜூலை, 01

''எனது திரைப்படத்துக்கான படப்படிப்பு இலங்கையில் நடைபெறுவதற்கு எதிராக தென்னிந்திய திரைப்படத் துறையினர் எடுக்கும் போராட்ட நடவடிக்கைகள் குறித்து நான் கவலைப்படப் போவதில்லை.'' - இவ்வாறு உலகப் புகழ் பெற்ற வட இந்திய ஹிந்தி சினிமா நட்சத்திரம் சல்மான் கான் தெரிவித்தார்.

சல்மான்கான் மற்றும் தென்னிந்திய நடிகை அசின் ஆகியோரடங்கிய குழு, 'ரெடி' திரைப்படத்துக்கான படப்படிப்பை இலங்கையில் ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு நேற்று கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இடம்பெற்றது.

ஊடகவியலாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் ஒரு நடிகன்; அரசியல்வாதியல்ல. 'ரெடி' திரைப்படத்துக்கான படப்படிப்பு இலங்கையில் நடைபெறுவதற்கு எதிராக தென்னிந்திய திரைப்படத் துறையினர் எடுக்கும் போராட்ட நடவடிக்கைகள் குறித்து நான் கவலைப்படப் போவதில்லை.

இந்த விடயம் தொடர்பில் நான் இது வரை எதுவித பிரச்சினையையும் எதிர் நோக்கஇல்லை. குறித்த திரைப் படத்தை தென்னிந்தியாவில் திரையிடுவதிலும் எந்தப் பிரச்சினையும் ஏற்பட மாட்டாது. படத்தின் ஒருசில காட்சிகள் மொரிஷியஸ் தீவுகளில் நடத்தப்பட்டாலும், அநேகமான காட்சிகள் இலங்கையிலேயே எடுக்கப்படவுள்ளன. - இப்படி சல்மான்கான் தெரிவித்தார்.

(ஒ-சி)

### இந்திய படைத்தளபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் திஸார சமரசிங்க சகிதம் விஜயம் செய்த இந்தியக் கடற்படைத் தளபதி, யாழ்.நகரில் உள்ள கோட்டைக்குச்சென்று அதன் புனரமைப்புப்பணிகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

அதைத்தொடர்ந்து நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டார். தளபதிகளின் வருகை காரணமாக யாழ்.நகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

### சம்பந்தன் - டக்ளஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துப் பேசுவது குறித்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தலைமைப்பீடம் இதுவரை முடிவு எதனையும் எடுக்க வில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

### அமைச்சரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பேட்டி யாழ்ப்பாணத்தில் உள்ள ஆலயம் ஒன்றில் வெளிநாட்டுத் தொலைக்காட்சியிலிருந்து மறுஒளிபரப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

அவர் என் மீதான இந்த அபாண்டமான பழியை வெளிநாட்டு ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கி றார். அதற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. அவர் மீது நூறு மில்லியன் ரூபாமான நஷ்டஈடு கோரி வழக்குத் தாக் கல் செய்ய உள்ளேன் என்பதனை இந்தச் சபையில் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார் விஜயகலா. (அ)

### எரிபொருள்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பன லீற்றருக்கு 50 சதத்தாலும் விலை குறைப்புச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்தில் 119 ரூபாவாக விற்பனை செய்யப்படும் ஒரு லீற்றர் பெற்றோல் இன்றுமுதல் 118 ரூபாவாகவும், 76 ரூபா 50 சதமாக விற்கப் படும் ஒரு லீற்றர் டீசல் 75 ரூபா 50 சதமா கவும், 54 ரூபாவாக விற்பனை செய்யப் பட்ட ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 53 ரூபா 50 சதமாகவும் விற்பனை செய்யப்பட வேண்டுமென பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது. (50-224)

### தொடர்ந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேர்வின் சில்வாவுடன் சேர்ந்து இடையூறுகளை ஏற்படுத்திக்கொண்டிருந்த மற்றுமொரு பிரதி அமைச்சர் லலித் திஸாநாயக்கவையும் சபாநாயகர் கண்டித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கேள்வி - பதிலின்போதே சபாநாயகர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

ஐ.தே.கவின் எம்.பி. சஜித் பிரேம்தாஸ நெடுஞ்சாலைகள் அமைச்சரிடம் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா பதில் அளிக்காது வேறு விடயங்கள் பற்றிப் பேசினார். இதை நிறுத்தி சம்பந்தப்பட்ட கேள்விக்கு மாத்திரம் பதில் அளிக்குமாறு சபாநாயகர் மேர்வினிடம் கேட்டுக்கொண்டார்.

"நீங்கள் ராஜபக்ஷ பரம்பரையின் மூத்த சகோதரர் என்பதால் இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க நான் 3 மாத கால அவகாசம் கேட்கின்றேன்'' என்று மேர்வின் சில்வா கூறினார். இதற்குப் பதில் அளித்த சபாநாயகர் நான் நிலையியல் கட்டளைப் படியே செயற்பட முடியும் என்றார்.

இதேபோன்று வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜோன்ஸன் பெர்ணாண்டோவிடம் ரவி கருணாநாயக்க எம்.பி. கேள்வி ஒன்றை எழுப்பியபோது பிரதி அமைச்சர் லலித் திஸாநாயக்க குறுக்கீடு செய்தார்.

சபாநாயகர் இதைக் கண்டித்தார். "இங்கு சம்பிரதாயம் ஒன்று உண்டு. அதைப் பின்பற்றுங்கள். தேவையற்ற விதத்தில் குறுக்கீடு செய்ய வேண்டாம் ஆசனத்தில் அமருங்கள்'' என்று சபாநாயகர் கடுமையான தொனியில் கூறினார்.

சஜித் பிரேமதாஸ எம்.பி. நெடுஞ்சாலைகள் அமைச்சரிடம் கேள்வி ஒன்றை எழுப்பியபோது, அரசமைப்புக்கு அமைவாகக் கேள்விகளைக் கேளுங்கள் என்று மேர்வின் சில்வா சஜித்திடம் கூறினார்.

இக்கூற்றைக் கண்டித்த சபாநாயகர் எம்.பிக்களின் கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பதிலளிப்பது அவர்களின் கடமை என்றார்.

இதைத் தொடர்ந்து ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு எம்.பி. அஜித்குமார பிரதமரிடம் கேள்வி ஒன்றைக் கேட்டபோது அதற்கு மேர்வின் சில்வா பதிலளிக்க முற்பட்டார். அப்போது அஜித்குமார கடும் எதிர்ப்பைத் தெரிவித்து மேர்வினிடம் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார்.

தொடர்ந்தும் மேர்வின் சில்வா இடையூறு விளைவித்ததால் சபாநாயகர் கோபமடைந்தார். அமைதியாக இருக்காவிட்டால் நான் உங்களைக் கட்டாயமாக சபைக்கு வெளியே அனுப்ப உத்தரவிட வேண்டிவரும் என்று சபாநாயகர் எச்சரித்தார். நீங்கள் கூறினால், அதற்கு நான் கட்டுப்படுகின்றேன் எனக் கூறி மேர்வின் சில்வா அமைதியானார்.

(ஒ-சி)


**வேலையாள்கள் தேவை**

எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு வேலையாள்கள் தேவை.

* விற்பனையாளர்
* களஞ்சியக் காப்பாளர்
* சிட்டை எழுதுநர்
* கணக்கு எழுதுநர்
* வாகனச் சாரதி

* முன் அனுபவம், மின்சாரப் பொருள்கள் தொடர்பான அறிவு விரும்பத்தக்கது.
* 02/07/2010ஆம்திகதிக்கு முன்னர் 10.00-4.00 மணிக்கிடையில் நேரில் சமுகமளிக்கவும்.

செல்வா எலெக்ரிக்கல்,
21, பலாலி வீதி,
திருநெல்வேலிச்சந்தி.
தொ.பே.: 0213218617

(100052)

**விற்பனையாகிறது**

''அரச திணைக்கள தாபன அலுவலக முறைமை, நிதி முறைமை''
பதவி உயர்வு/வினைத்திறமை காண் பரீட்சைக்கைநூல்
ஆக்கம்: T.ஜெயராஜ், N.கமலநாதன், வவுனியா.
அன்னை புத்தக சாலை
யாழ்ப்பாணம் 2229881 சாவகச்சேரி 2270003

**வெளிவந்துவிட்டது**

A/L PHYSICS
Dr. ROSA
2009
அன்னை புத்தக சாலை
யாழ்ப்பாணம் 2229881 சாவகச்சேரி 2270003

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

| | |
|---|---|
| DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE | Duration 4 Months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | Duration 4 Months |
| DIPLOMA IN COMPUTER PROGRAMMING | Duration 4 Months |
| DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING | Duration 4 Months |
| DIPLOMA IN VISUAL BASIC | Duration 4 Months |
| DIPLOMA IN VISUAL FOXPRO | Duration 4 Months |
| DIPLOMA IN C++ | Duration 4 Months |
| DIPLOMA IN INTERNET E-MAIL | Duration 2 Months |
| DIPLOMA IN ACCOUNTING PACKAGES | Duration 4 Months |
| DIPLOMA IN AUDIO & VIDEO EDITING | Duration 4 Months |
| DIPLOMA IN WEB DESIGNING | Duration 4 Months |
| KIDS PROGRAMMING (year 2-9) | |
| ICT (G.C.E. O/L) | 03.07.2010 |
| GIT (G.C.E. A/L) | 05.07.2010 |

Softview Computer College
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna.
T.P 021 2225170


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.07.2010இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.